# தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்

(முதற்பகுதி)

பதிப்பாசிரியர்

இரா. நாகசாமி, எம். ஏ.,

தமிழ்நாடு அரசு

தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு

A. Saithambi

21100155 25

2 Copy.

# தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்

(முதற்பகுதி)

## இராஜராஜன் கொடுத்த பரிசுகள்

பதிப்பாசிரியர்
இரா. நாகசாமி, எம். ஏ.,

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு

முதற் பதிப்பு. 1969.
தொ. பொ. ஆ. துறை. எண் 3

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

# தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்

இரா. நாகசாமி எம். ஏ.

விலை : 2·25

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப் பெற்றது.

சென்னை-600 008

R0620
417.7

பதிவு அலுவலர் அலுவலகம்
187
சென்னை
தொல்பொருள் ஆய்வுத் துறை, தமிழ்நாடு அரசு

தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர் மாண்புமிகு
திரு. செ. மாதவன் அவர்களின்
அணிந்துரை.

நம் நாட்டு வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு பழங்காலக் கல்வெட்டுகள் ஓரளவு உதவியாக உள்ளன. எனவே, தமிழ் நாட்டில் காணப்படும் கல்வெட்டுகளை அச்சிட்டு வெளியிடும் திட்டத்தை தமிழ் நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தின் தலைசிறந்த கோவிலான தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் உள்ள கல்வெட்டுகளின் முதற் பகுதியைக் கொண்டது இத்தொகுப்பு. இக்கல் வெட்டுகளில் இப்பொழுது வழக்கொழிந்த சில சொற்களைக் காணுகிறோம். வரி இல்லாத நிலம் 'இறையிலி நிலம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு வகை மரக்காலை 'ஆடவல்லான்' என்று குறித்துள்ளனர்.

ஏடுகளில் இருந்த பல இலக்கியச் செல்வங்களை இழந்து நிற்கும் நாம், கல்வெட்டுகளையாவது காத்துப் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். காலவெள்ளம் தமிழ் நாட்டின் தொல் பெருமையை அழித்திடுமோ என்று அஞ்சியிருக்கும் இக்காலத்தில் கல்வெட்டுகளில் காணும் தமிழகத்தின் பெருமையினை வெளிப்படுத்தும் ஆசிரியரின் இந்த முயற்சி சிறப்பானது.

இந்நூலைத் தொகுத்துள்ள தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது.

செ. மாதவன்.

மதுரைப் பல்கலைக்கழக துணைவேந்தர்,

**தெ. பொ. மீனுட்சிசுந்தரன் அவர்களின்**

அணிந்துரை.

திருவாளர் இரா. நாகசாமி, எம். ஏ., அவர்கள் தஞ்சாவூர் கோவிலில் உள்ள ராஜராஜனது கல்வெட்டு களைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார். இது ஒரு சிறந்த தொண்டு. கல்வெட்டுகள் ஒருசேரக் கிடைக் கப்பெறுவதில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் வருந்து கின்ற இந்த நேரத்தில் அது தீர இந்த நூல் உதவும் என்று எதிர்பார்க்கிறேன். தமிழ் நாட்டுக் கல்வெட்டு ஆராய்ச்சியில் மேலும் மேலும் ஈடுபட வேண்டும் என் றிருந்தவர்களுக்கு இத்தகைய தொகுதிகள் வேண்டி யிருக்கின்றன. தமிழ்நாட்டுத் துரைத்தனத்தில் பணி யாற்றுகின்ற நண்பர் தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கல்வெட்டுகளையும் வெளியிடுவதற்கு ஆவன செய்வார் என்று எதிர்பார்க்கிறேன். மிக விரைவில் இந்த நூலைப் பதிப்பித்து வெளியிட்டமைக்கு ஆசிரியரைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

தெ. பொ. மீனுட்சிசுந்தரன்.

# நூன்முகம்

தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் முதன் முதலில், சென்னை மாநிலக் கல்வெட்டு ஆய்வாளராகப் பணிபுரிந்த திரு. ஹுல்ஷ் அவர்களால், கி.பி. 1891ல் பதிப்பிக்கப்பெற்றன. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் நான்கு பாகங்களாக இவை அச்சிடப்பெற்றன. அந்நூல் இப்போது அரும் விலை கொடுத்தாலும் கிடைப்பதில்லை. தமிழக வரலாற்றில் ஆர்வமுடையோருக்கும், ஆராய்ச்சியாளருக்கும் நூலகங்களில் கூட இவை எளிதில் கிடைப்பதில்லை. எனவே இக்கல்வெட்டுகள் இப்போது இரண்டாம் முறையாக வெளிவருகின்றன.

இப்பதிப்பில், இடையிடையே உள்ள கிரந்த எழுத்துக்களுக்குப் பதிலாக தமிழ் எழுத்துக்கள் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. ஆயினும், கல்வெட்டு வாசகங்களில் எவ்வித மாறுதல்களும் செய்யவில்லை.

அனைவருக்கும் எளிதில் புரியும் வகையில் சொற்றொடர்கள் பிரித்து அச்சிடப்பெற்றுள்ளன. இடப்புறம் அளிக்கப்பட்டுள்ள சிறு தலைப்புகள் பதிப்பாசிரியரால் அளிக்கப்பட்டவை. கல்வெட்டில் இல்லை.

முதல் இராஜராஜன், பெருவுடையார் கோயிலை எடுப்பித்து அதற்கு அளித்த பரிசுகளைக் குறிக்கும் கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெறுகின்றன.

இக்கோயிலுக்கு இராஜராஜனின் "தமக்கை குந்தவையாரும், பெண்டுகளும், மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும்" இரண்டாம் பகுதியாக வெளிவரும்.

இந்நூலுக்கு தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர், மாண்புமிகு திரு. செ. மாதவன் அவர்கள் அன்போடு அணிந்துரை நல்கி சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு எனது உளம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரைப் பல்கலைக் கழக துணைவேந்தர், பேராசிரியர் தெ. பொ. மீனாக்ஷிசுந்தரனார் அவர்கள் அன்புடன் அணிந்துரை அளித்துள்ளார்கள். அவர்களுக்கு மனமார்ந்த நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் அச்சிடுவதற்கு அறிவுரை அளித்த திரு. சா. கணேசன், எம். எல். சி., அவர்களுக்கும், நூல் கொடுத்துதவிய தமிழக அரசு தலைமைச் செயலக நூல் நிலையத்தாருக்கும், இந்நூல் வெளிவர பலவகையிலும் உதவிய தமிழ்நாடு அரசு எழுதுபொருள், அச்சுத்துறை இயக்குநர் அவர்களுக்கும் எனது நன்றி.

பதிப்பாசிரியர்.

## க

# தஞ்சை இராஜராஜேச்வரமுடையார்க்கு முதல் இராஜராஜன் அளித்த கொடைகள்.

ஸ்வஸ்தி ஸ்ரீ:

ஏதத் விஶ்வந்ருபஶ்ரேணீ மௌலிமாலோபலாலிதம்
ஶாஸநம் ராஜராஜஸ்ய ராஜகேஸரிவர்மண:

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை பூண்டமை மநக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி, வேங்கைநாடுங் கங்கைபாடியும் தடிகைபாடியும் நுளம்ப பாடியும் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழியு ளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டேய் செழியரைத் தேசுகொள்,

மன்னன்:

கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு,

ஆண்டு:

யாண்டு இருபத்தாருவது, நாள் இருபது,

இடம்:

உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் தஞ்சாவூர்க் கோயிலினுள்ளால் இருமடிசோழநின் கீழைத் திருமஞ்சந சாலை தாநஞ் செய்தருளாவிருந்து

ஊர்:

பாண்டியகுலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்,

கோயில் :

நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீராஜராஜீச்வரமுடையார்க்கு

ஆஜ்ஞை :

நாங்குடுத்தநவும், அக்கன் குடுத்தநவும், நம் பெண்டுகள் குடுத்தநவும், மற்றும் குடுத்தார் குடுத்தநவும் ஸ்ரீவிமானத்தில் கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிஞ்சருள வெட்டிந

கொடை:

யாண்டு இருபத்தைஞ்சாவது, நாள் முன்னூற்றிருபத்திரண்டிநால், உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த ஸ்ரீ பலி எழுந்தருளும் பொன்னின் கொள்கை தேவர் ஒருவர் ஆடவல்லானென்னுங் கல்லால் நிறை எண்ணூற்றிருபத்தொன்பதின் கழஞ்சேய் முக்காலேய் மூன்று மஞ்சாடி;

நாளதிநாலேய் குடுத்த பொன்னின் பத்மாஸன ஸ்ரீபலித் தாலம் ஒன்று மேற்படி கல்லால் நிறை தொளாயிரத்துத் தொண்ணூற்றைய்ங் கழஞ் சரையே நாலு மஞ்சாடி;

யாண்டு இருபத்தாறுவது, நாள் பதிநாலிநால், உடையார் ஸ்ரீராஜராஜதேவர் குடுத்த பொன்னின் திருப்பட்டம் ஒன்று ஆடவல்லானென்னுங் கல்லால் நிறை நானூற்றுத் தொண்ணூற்றெண்பதின் கழஞ்சு;

நாளதிநாலேய் குடுத்த பொன்னின் திருப்பட்டம் ஒன்று மேற்படி கல்லால் நிறை நானூற்றுத் தொண்ணூற்று நாற்கழஞ் சரையேய் இரண்டு மஞ்சாடி;

நாளதிநாலேய் குடுத்த பொன்னின் திருப்பட்டம் ஒன்று மேற்படி கல்லால் நிறை நானூற்றெண்பத்து நாற் கழஞ்சேகால்;

நாளதிநாலே குடுத்த பொன்னின் திருப்பட்டம் ஒன்று மேற்படி கல்லால் நிறை நானூற்றுத் தொண்ணூற்றெழு கழஞ் சரை;

கொடை (தொடர்ச்சி)

நாளதினலேய் குடுத்த பொன்னின் திருப்பட்டம் ஒன்று மேற்படி கல்லால் நிறை நானூற்றுத் தொண்ணூற் றெரு கழஞ் சரை;

நாள் இருபத்தேழினல் உடையார் ஸ்ரீராஜராஜதேவர் சிறுதநத்துக் குடுத்த பொன்னின் தளிகை ஒன்று ஆடவல் லானென்னும் கல்லால் நிறை அறுநூற் றைம்பத் திரு கழஞ் சேய் எட்டு மஞ்சாடி;

நாளதினலேய் குடுத்த பொன்னின் தளிகை ஒன்று மேற் படி கல்லால் நிறை நானூற்றுத் தொண்ணூற்று முக் கழஞ்சேய் கால்;

நாளதினலேய் குடுத்த பொன்னின் மண்டை ஒன்று மேற் படி கல்லால் நிறை முன்னூற்றுத் தொண்ணூற் றெழு கழஞ்சே ஆறு மஞ்சாடி;

நாளதினலே குடுத்த பொன்னின் மண்டை ஒன்று மேற் படி கல்லால் நிறை முன்னூற்றுத் தொண்ணூற்று முக் கழஞ்சேய் மஞ்சாடி;

நாளதினலேய் குடுத்த பொன்னின் மண்டை ஒன்று மேற் படி கல்லால் நிறை முன்னூற்றுத் தொண்ணூற் றெண் கழஞ்சேய் குன்றி;

நாளதினலேய் குடுத்த பொன்னின் மண்டை ஒன்று மேற் படி கல்லால் நிறை முன்னூற்றுத் தொண்ணூற்று அறு கழஞ்சு;

நாளதினலேய் குடுத்த பொன்னின் கெண்டி ஒன்று மேற் படி கல்லால் நிறை இருநூற் றெண்பத்து நாற் கழஞ் சரை;

நாள் முப்பத்து நாலினல் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் சிறுதநத்துக் குடுத்த பொன்னின் தட்டம் ஒன்று ஆடவல் லானென்னுங் கல்லால் நிறை நாற்பதின் கழஞ்சேய் கால்;

யாண்டு இருபத்தைஞ்சாவது, நாள் இருநூற்றெழுபத் தைஞ்சினல் உடையார், ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீராஜராஜீச்

கொடை (தொடர்ச்சி)

, வரமுடையார் ஸ்ரீவிமாநத்துச் செம்பின் ஸ்தூபித் தறியில் வைக்கக் குடுத்த செப்புக்குடம் ஒன்று நிறை மூவாயிரத்து எண்பத்து முப்பலத்தில் சுருக்கிந தகடு பல பொன் ஆடவல் லானென்னுங் கல்லால் நிறை இரண்டாயிரத்துத் தொளா யிரத்து இருபத்தறு கழஞ் சரை;

யாண்டு இருபத்தாருவது, நாள் நூற்று நாலினுல் உடை யார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீராஜராஜீச்வரமுடையார்க்குக் குடுத்த பொன்னின் கிடாரம் ஒன்று ஆடவல்லானென்னும் கல்லால் நிறை பதினோராயிரத்து எழுநூற்று நாற்பத்து இரு கழஞ்சு;

நாளதினுலேய் குடுத்த பொன்னின் ஒட்டு வட்டில் ஒன்று மேற்படி கல்லால் நிறை நானூற்று எண்பத் தெண் கழஞ்சு;

நாளதினுலேய் குடுத்த பொன்னின் கலசம் ஒன்று மேற் படி கல்லால் நிறை ஐஞ்ஞூற்று எழு கழஞ்சு;

நாளதினுலேய் குடுத்த பொன்னின் கலசம் ஒன்று மேற் படி கல்லால் நிறை நானூற் றெண்பத்து முக்கழஞ்சு;

நாளதினுலேய் குடுத்த பொன்னின் கலசம் ஒன்று மேற்படி கல்லால் நிறை நானூற்றுத் தொண்ணூற்று இரு கழஞ்சு;

நாளதினுலேய் குடுத்த பொன்னின் கலசம் ஒன்று மேற் படி கல்லால் நிறை நானூற்றுத் தொண்ணூற் றிரு கழஞ்சே கால்;

நாளதினுலேய் குடுத்த பொன்னின் கலசம் ஒன்று மேற்படி கல்லால் நிறை ஐஞ்ஞூற் றொருபத் திரு கழஞ் சரை;

நாளதினுலேய் குடுத்த பொன்னின் படிக்கம் ஒன்று கால் மூன்றும் வளையில் இரண்டும் உள்பட மேற்படி கல்லால் நிறை எண்ணூற் றிரு கழஞ் சரை;

நாளதினுலேய் குடுத்த பொன்னின் தட்டம் ஒன்று மேற்படி கல்லால் நிறை நாற்பத் தொன்பதின் கழஞ்சே முக்கால்;

தொடர்ச்சி)

நாளதினலேய் குடுத்த பொன்னின் தட்டம் ஒன்று மேற்படி கல்லால் நிறை நாற்பத் தொன்பதின் கழஞ்சே முக்கால்;

நாளதினலேய் குடுத்த பொன்னின் தட்டம் ஒன்று மேற்படி கல்லால் நிறை ஐம்பதின் கழஞ்சு;

நாளதினலேய் குடுத்த பொன்னின் தட்டம் ஒன்று மேற்படி கல்லால் நிறை நாற்பத் தொன்பதின் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றி;

நாளதினலேய் குடுத்த பொன்னின் குறுமடல் ஒன்று மேற்படி கல்லால் நிறை தொண்ணூற்று எழு கழஞ்சு;

நாளதினலேய் குடுத்த பொன்னின் மாநவட்டில் ஒன்று மேற்படி கல்லால் நிறை இருபதின் கழஞ்சு;

யாண்டு இருபத்தாருவது, நாள் முன்னூற்றொருபத் தெட்டினல், குடுத்த உடையார் கோயிலில் முழத்தின் கீழ் வெள்ளியின் ஸ்ரீபாதபீடம் ஆறு தோரை உசரமும் நால் விரலே ஆறு தோரைச் சுற்றும் உடைய பொன்னின் க்ஷேத்ர பால தேவர் பாதாதிகேஸாந்தம் மூவிரலே மூன்று தோரை உசரமும் நாலு ஸ்ரீஹஸ்தத்திலும் பிடிச்சருளிந சூலமும் கபாலமும் பாசமும் தமருகமும் வெள்ளியின் ஸ்ரீபாதபீடமும் உள்பட நிறை எழுபத்திரு கழஞ் சரை;

உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் சேரமானையும் பாண்டியர்களையும் மலை நாட்டு எறிந்து கொண்ட பண்டாரங்களில், யாண்டு இருபத்தாருவது, நாள் முன்னூற்று ஒருபத் தொன்பதினல், ஸ்ரீராஜராஜீச்வரமுடைய பரமஸ்வாமிக்குக் குடுத்த பொன்னின் சின்னங்கள் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறையெடுத்து கல்லில் வெட்டினபடி:—

காளாஞ்சி ஒன்று பொன் ஐஞ்ஞூற்று எண்பத்து அறு கழஞ்சு;

காளாஞ்சி ஒன்று பொன் அறுநூற்று இருபத்து இரு கழஞ் சரை;

கொடை (தொடர்ச்சி)

குடம் ஒன்று பொன் முன்னூற்று எண்பத்து இரு கழஞ் சரை;

குடம் ஒன்று பொன் முன்னூற்று அறுபத்து எழு கழஞ்சு;

குடம் ஒன்று பொன் முன்னூற்று ஐம்பத்து இரு கழஞ்சு;

குடம் ஒன்று பொன் இருநூற்றுத் தொண்ணூற்று நாற் கழஞ்சு;

கறண்டிகைச் செப்பு ஒன்று அடியும் மூழலும் உட்பட பொன் நூற்று இருபத்து ஒரு கழஞ் சரை;

இலைச் செப்பு ஒன்று யாளிக்கால் நாலும் மூழலும் உட்பட பொன் நூற்று எண்பத்து ஐங் கழஞ்சே முக்கால்;

இலைச் செப்பு ஒன்று யாளிக்கால் நாலும் மூழலும் உட்பட பொன் நூற்று நாற்பத்து எழு கழஞ்சு;

தளிகை ஒன்று அடி யுட்பட பொன் ஆயிரத்து ஒரு நூற்று முப்பத்து ஐங் கழஞ் சரை;

கலசப் பானை ஒன்று மூக்கும் அடியும் உட்பட பொன் நானூற்று எழுபதின் கழஞ்சு;

கலசப் பானை ஒன்று மூக்கும் அடியும் உட்பட பொன் நானூற்று முப்பத்து எண் கழஞ்சு;

பொன்னின் கொடி தூக்கத்தில் தலையில் தைச்ச பூப் பதினாறு உட்பட எட்டினால் பொன் எழுபத்து எண் கழஞ் சேய் முக்கால்;

தாரைத்தாள் வட்டில் ஒன்று கருக்கிரண்டும் சிங்க பாதமிரண்டும் உட்பட பொன் நானூற்று நாற்பத்து எண் கழஞ்சு;

திருமுடி ஒன்று பொன் இருநூற்று எழுபத்து முக் கழஞ்சு;

ஈச்சொப்பிக்கை ஒன்று பொன் இருநூற்று நாற் கழஞ்சு;

கோடை (தொடர்ச்சி)

யாண்டு இருபத்து மூன்றாவது முதல் யாண்டு இருபத் தொன்பதாவது வரை ஸ்ரீராஜராஜீச்வரம் உடைய பரமஸ்வாமிக்கு உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் தம் பண்டாரங்களிலும் சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்து கொண்ட பண்டாரங்களிலும் குடுத்த பொன்னின் சின்னங்களும் பொன்னின் திருஆபரணங்களும் உள்ளிட்டன யாண்டு இருபத்தைஞ்சாவதும் யாண்டு இருபத்தாறுவதும் இந்த ஜகதிப்படையில் இதனுக்கு முன் கிழக்கடைய கல்லில் வெட்டிந நீக்கி நின்றன ஆடவல்லானென்னுங் கல்லால் நிறை எடுத்து கல்லில் வெட்டினபடி சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்து கொண்ட பண்டாரங்களில் குடுத்தன;

ஈச்சொப்பிக்கைய் ஒன்று பொன் முப்பத்து நாற் கழஞ்சு;

ஈச்சொப்பிக்கைய் ஒன்று பொன் முப்பத்து முக் கழஞ்சு;

சிவபாதசேகரனென்றும் ஸ்ரீராஜராஜனென்றும் திருநாமம் வாங்கி கங்கில் ஒன்றும் குழல் இரண்டும் மோதிரம் ஐஞ்சும் உடைய பொன்னின் காளங்கள் :—

காளம் ஒன்று பொன் இரு நூற்றுத் தொண்ணூற்று நாற் கழஞ் சரை;

காளம் ஒன்று பொன் இரு நூற்றுத் தொண்ணூற்று ஐங் கழஞ்சேய் கால்;

காளம் ஒன்று பொன் இருநூற்றுத் தொண்ணூற்று அறு கழஞ்சேய் முக்காலே இரண்டு மஞ்சாடி;

காளம் ஒன்று பொன் இரு நூற்றுத் தொண்ணூற்று அறு கழஞ் சரையாக இரண்டிநால் பொன் ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்று முக் கழஞ்சு;

காளம் ஒன்று பொன் இரு நூற்றுத் தொண்ணூற்று நாற் கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடியுங் குன்றி;

கொடை (தொடர்ச்சி)

காளம் ஒன்று பொன் இரு நூற்றுத் தொண்ணூற்றுக் கழஞ்சேய் முக்கால்;

காளம் ஒன்று பொன் இரு நூற்று எண்பத்து அறு கழஞ்சேய் மூன்று மஞ்சாடியுங் குன்றி;

காளம் ஒன்று பொன் இரு நூற்றுத் தொண்ணூற்று எண் கழஞ்சரையே யிரண்டு மஞ்சாடி;

காளம் ஒன்று பொன் இரு நூற்று எண்பத்து எழு கழஞ்சேய் முக்காலே நாலு மஞ்சாடியுங் குன்றி;

பண்டாரங்களில் குடுத்தன காளம் ஒன்று பொன் நூற்று அறுபத்து எண் கழஞ்சேய் கால்;

காளம் ஒன்று பொன் நூற்று அறுபத்து எண் கழஞ்சு;

ஒற்றை கங்கில் ஒன்றும் குழல் ஒன்றும் உள்பட பொன் நூற்று நாற்பத்து ஒன்பதின் கழஞ்சரையே மூன்று மஞ்சாடி;

அடுத்து விளக்கினை மொட்டும் பறஊயும் உள்பட திருப் பள்ளித் தொங்கல் மகுடங்கள் :—

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற் பத்து ஒன்பதின் கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் குன்றியாக மூன்றினுல் பொன் நூற்று நாற்பத்து எண் கழஞ்சேய் முக்காலே யிரண்டு மஞ்சாடியுங் குன்றி;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற் பத்து ஒன்பதின் கழஞ்சேய் முக்காலாக ஐஞ்சினுல் பொன் இரு நூற்று நாற்பத்து எண் கழஞ்சேய் முக் கால்;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் ஐம் பதின் கழஞ்சாக இரண்டினுல் பொன் நூற்றுக் கழஞ்சு;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற்பத்து ஒன்(ப)தின் கழஞ்சாக இரண்டினுல் பொன் தொண்

கொடை (தொடர்ச்சி)

ணூற்று எண் கழஞ்சு;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் ஐம்பத்து ஒரு கழஞ்சு;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற்பத்து ஒன்பதின் கழஞ்சே எழு மஞ்சாடியுங் குன்றியாக இரண்டிஞல் பொன் தொண்ணூற்று எண் கழஞ்சேய் முக்கால்;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் ஐம்பதின் கழஞ்சே இரண்டு மஞ்சாடியுங் குன்றி;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற்பத்து எண் கழஞ்சே முக்கால்;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் ஐம்பதின் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றி;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் ஐம்பதின் கழஞ்சே முக்காலாக இரண்டிஞல் பொன் நூற்று ஒரு கழஞ் சரை;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற்பத்து ஒன்பதின் கழஞ் சரை;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற்பத்து ஒன்பதின் கழஞ்சே ஆறு மஞ்சாடி;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற்பத்து ஒன்பதின் கழஞ்சே கால்;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற்பத்து எண் கழஞ் சரை;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற்பத்து ஒன்பதின் கழஞ்சே இரண்டு மஞ்சாடியுங் குன்றி;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற்பத்து எண் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றி;

கொடை (தொடர்ச்சி)

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் ஐம்பதின் கழஞ்சே மஞ்சாடி;

திருப்பள்ளித் தொங்கல் மகுடம் ஒன்று பொன் நாற்பத்து ஒன்பதின் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றியாக மூன்றினால் பொன் நூற்று நாற்பத்து ஒன்பதின் கழஞ் சரையே இரண்டு மஞ்சாடியுங் குன்றி;

தவளச்சத்ரம் மகுடம் மொட்டு அடுத்து விளக்கின பறளை யுட்பட ஐஞ்சிநால் பொன் ஐம்பதின் கழஞ்சு;

வண்ணிகைத் திருக்கொற்றக் குடை மகுடம் மொட்டு அடுத்து விளக்கின பறளை உள்ப்பட ஒன்று பொன் பதினைங் கழஞ் சரையே இரண்டு மஞ்சாடியுங் குன்றி;

இலைத்தட்டு ஒன்று பொன் தொளாயிரத்துத் தொண்ணூற்று ஐங் கழஞ்சு;

இலைத்தட்டு ஒன்று பொன் தொளாயிரத்து எண் பத்து எண் கழஞ்சு;

ஸத்யாச்ரயனை எறிந்து எழுந்தருளி வந்து ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுதன;

திருப்பொற்பூ ஒன்று பொன் பதின் கழஞ்சாக இரண்டினாற் பொன் இருபதின் கழஞ்சு;

திருப்பொற்பூ ஒன்று பொன் ஒன்பதின் கழஞ்சேய் முக்காலே நாலு மஞ்சாடியுங் குன்றியாக பன்னிரண்டினாற் பொன் நூற்று ஒரு பத்து ஒன்பதின் கழஞ் சரையே நாலு மஞ்சாடி;

திருப்பொற்பூ ஒன்று பொன் ஒன்பதின் கழஞ்சேய் முக்காலே நாலு மஞ்சாடியாக திருப்பொற்பூப் பத்திநாற் பொன் தொண்ணூற்று ஒன்பதின் கழஞ் சரை;

கொடை (தொடர்ச்சி)

திருப்பொற்பூ ஒன்று பொன் ஒன்பதின் கழஞ்சேய் முக்காலே மூன்று மஞ்சாடியுங் குன்றி;

திருப்பொற்பூ ஒன்று பொன் கழஞ்சேய் முக்காலே மஞ்சாடி;

தாமரைச் செயல் திருப்பொற்பூ ஒன்று பொன் பதின்முக் கழஞ்சேய் ஆறு மஞ்சாடி;

தக்ஷிணமேருவிடங்கர்க்குச் சார்த்தி அருளக் குடுத்தன:

அஞ்சடுத்து விளக்கின திரள்மணிவடம் ஒன்று பொன் நாற்பத்து ஒன்பதின் கழஞ்சேய் எழு மஞ்சாடியுங் குன்றி;

ஒப்பன் திருக்கைக் காறை ஒன்று பொன் ஐம்பத்து ஒரு கழஞ் சரை;

ஒப்பன் திரு(க்)கைக் காறை ஒன்று பொன் நாற்பத்து ஐங் கழஞ் சரையே இரண்டு மஞ்சாடி;

ஒப்பன் திருக்கைக் காறை ஒன்று பொன் நாற்பத்து ஒன்பதின் கழஞ்சேய் முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றி;

ஒப்பன் திருக்கைக் காறை ஒன்று பொன் நாற்பத்து ஐங் கழஞ்சேய் முக்கால்;

ஒப்பன் திருவடிக்காறை ஓரிணை பொன் தொண்ணூற்று அறு கழஞ் சரை;

திருப்பட்டிகை ஒன்று பொன் நூற்று நாற்பத்து ஒன்பதின் கழஞ்சேய் கால்;

சேரமானையும் பாண்டியர்களையும் மலை நாட்டு எறிந்து கொண்ட பண்டாரங்களில் பொன் கொண்டு செய்து குடுத்த திருப்பட்டம் ஒன்று பொன் தொளாயிரத்து எண்பத்து ஒரு கழஞ்சேய் கால்.

---

இக்கல்வெட்டு விமானத்தின் வடபுறச் சுவரிலும் மேற்புறச் சுவரிலும் உள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 1 ஆக அச்சிடப் பட்டுள்ளது.

உ

# முதல் இராஜராஜன் அளித்த கொடைகள்.

ஸ்வஸ்தி ஸ்ரீ:

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மநக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி, வேங்கை நாடுங் கங்கைபாடியும் தடிகைபாடியும் நுளம்ப பாடியும் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டி சை புகழ்தர ஈழ மண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்க முந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளருழியு ளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண் டேய் செழியரைத் தேசுகொள்;

மன்னவர் :

கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு,

ஆண்டு :

யாண்டு இருபத்தொன்பதாவது வரை;

நிறை எடுத்தது :

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்துக் காட்சி காட்டின நீக்கி உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்துக் கூடி முதலான பொன்னும் ரத் நங்களும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்தருளின ரத்நங்களுங் கொண்டு செய்து முதலான ரத்நத்தின் திருவாபரணங்கள் சரடுஞ் சட்டமும் நீக்கி அரக்கும் பிஞ்சும் உட்பட தக்ஷிணமேருவிடங்கன் என்னுங் காசு கல்லால் நிறை எடுத்தன;

கல்லில் வெட்டின :

சண்டேச்வரர் கோயிலில் ஜகதிப்படையிலும் உபபீடத்துக் கண்டப்படையிலும் கல்லில் வெட்டின நீக்கி உடையார் ஸ்ரீவிமானத்துக் கல்லில் வெட்டின;

கொடை :

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப் பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியுங் குன்றியும் அரக்கு நிறை எண் கழஞ்சே எழு மஞ்சாடியும் பிஞ்சு நிறை முக்காலுந் தடவிக் கட்டின பளிங்கு பதினைஞ் சினால் நிறை கழஞ்சும் பொத்தி மூன்றினால் நிறை மூன்று மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜதேவர் ஸ்ரீபாதபுஷ்ப மாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்தில் முத் தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டம் ஒப்பு முத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங்கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத்தைஞ்ஞூற்றொரு பத் திரண்டினால் நிறை நாற்பத்தொரு கழஞ்சே எழு மஞ்சாடி யும் பண்டாரத்தில் பவழத்தில் கோத்த பவழம் இருபத்து நாலினால் நிறை முக்காலே மூன்று மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை அறுபத்து முக் கழஞ்சே ஒன்பது மஞ்சாடிக்கு விலை காசு தொண்ணூறு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியும் அரக்கு நிறை எண் கழஞ்சே எழு மஞ்சாடியும் பிஞ்சு நிறை முக்காலுந் தடவிக் கட்டின பளிங்கு பதினைஞ்சினால் நிறை முக்காலே நாலு மஞ்சாடியுங் குன்றியும் பொத்தி மூன்றினால் நிறை மூன்று மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்ப மாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்தில் முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்பு

கொடை (தொடர்ச்சி)

முதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளூர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத் தைஞ்ஞூற்று இரண்டினுல் நிறை நாற்பத் தொரு கழஞ்சே ஒன்பது மஞ்சாடியும் பண்டாரத்துப் பவழத்தில் கோத்த பவழம் இருபத்து நாலினுல் நிறை முக்காலே மூன்று மஞ் சாடியுங் குன்றியும் ஆக நிறை அறு பத்து முக்கழஞ் சரையே மஞ்சாடிக்கு விலை காசு தொண்ணூறு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியும் அரக்கு நிறை ஒன்பதின் கழஞ்சே மூன்று மஞ்சாடியுங் குன்றியும் பிஞ்சு நிறை அரைக் கழஞ்சே மூன்று மஞ்சாடியுங் குன்றியும் பொத்தி மூன்றினுல் நிறை மூன்று மஞ்சாடியுந் தடவிக் கட்டின பளிங்கு பதினைஞ்சினுல் நிறை கழஞ்சே மஞ்சாடி யுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாத புஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளூர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத் தறு நூற்று ஐம் பத்து மூன்றினுல் நிறை நாற்பத் திரு கழஞ் சரையே மஞ் சாடியும் ஒன்பது மாவும் பண்டாரத்தில் பவழத்தில் கோத்த பவழம் இருபத்து நாலினுல் நிறை முக்காலே மூன்று மஞ்சாடியும் ஆறு மாவும் ஆக நிறை அறுபத்தைங் கழஞ் சரையே மஞ்சாடிக்கு விலை காசு தொண்ணூற் றைஞ்சு;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப் பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத்தண்ணிய பொன் பதின் கழஞ்சே முக்காலே மஞ்சாடியுங் குன்றியும் அரக்கு நிறை எண் கழஞ் சரையே மூன்று மஞ்சாடியுங் குன்றியும் பிஞ்சு நிறை முக்காலே இரண்டு மஞ்சாடியுந் தட விக் கட்டின பளிங்கு பதினைஞ்சினுல் நிறை கழஞ்சே மூன்று

கொடை (தொடர்ச்சி)

மஞ்சாடியுங் குன்றியும் பொத்தி மூன்றினல் நிறை மூன்று மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத் தறு நூற்று ஒரு பத் தைஞ்சினல் நிறை நாற்பத் திரு கழஞ் சரையே நாலு மஞ்சாடியும் சேரமானையும் பாண்டியர்களையும் எறிஞ்சு கொண்ட மாட்டில் மூலரத்ந பண்டாரத்தார் முதற்தந்த பவழத்தில் கோத்த பவழம் இருபத்து நாலினல் நிறை முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை அறுபத் தைங் கழஞ்சே காலுக்கு விலை காசு தொண்ணூறு;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியும் அரக்கு நிறை எண் கழஞ்சே ஆறு மஞ்சாடியும் பிஞ்சு நிறை முக்காலே மஞ்சாடியுந் தடவிக் கட்டின பளிங்கு பதினைஞ்சினல் நிறை கழஞ்சே காலே குன்றியும் பொத்தி மூன்றினல் நிறை இரண்டு மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத் தைஞ்ஞூற்றுத் தொண்ணூற்று ஒன்பதினல் நிறை நாற்பதின் கழஞ் சரையே இரண்டு மஞ்சாடியும் சேரமானையும் பாண்டியர்களையும் எறிஞ்சு கொண்ட மாட்டில் மூலரத்ந பண்டாரத்தார் முதற்தந்த பவழத்தில் கோத்த பவழம் இருபத்து நாலினல் நிறை கழஞ்சே ஆறு

கொடை (தொடர்ச்சி)

மஞ்சாடியும் ஆக நிறை அறுபத்து முக்கழஞ்சே காலே குன்றிக்கு விலை காசு தொண்ணூறு;

உடையார் பண்டாரத்துப்பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங்கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடியுங் குன்றியும் இதிற் கோத்த முத்து உடையார் ஸ்ரீராஜராஜதேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங்கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்றைம்பத் தொன்பதினால் நிறை பதின் கழஞ்சே மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை பதினைங் கழஞ் சரையே மஞ்சாடிக்கு விலை காசு இருபத்தைஞ்சு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் அறு கழஞ்சே மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜதேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங்கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று அறுபத்தெட்டினால் நிறை பதின் கழஞ்சும் ஆக நிறை பதினாறு கழஞ்சே மஞ்சாடிக்கு விலை காசு இருபத்தேழு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் அறு கழஞ்சே மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜதேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து நானூற்று ஒன்றினால் நிறை பதின் கழஞ்சேய்

கொடை (தொடர்ச்சி)

ஆறு மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை பதினறு கழஞ் சேய் எழு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு முப்பது;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சேய் இரண்டு மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித்தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று முப்பத் தேழினல் நிறை ஒன்பதின் கழஞ்சே காலும் ஆக நிறை பதிநாற் கழஞ்சேய் எழு மஞ்சாடிக்கு விலை காசு இருபத்து நாலு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சே எட்டு மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்திற் கோத்த முத்து முன்னூற்று ஐம்பத் திரண்டினல் நிறை ஒன்பதின் கழஞ் சரையே மூன்று மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை பதினைங் கழஞ்சே மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபத் தைஞ்சு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சே எட்டு மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொள

கொடை (தொடர்ச்சி)

மும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தி யுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று ஐம்பத் தொன்றினல் நிறை எண் கழஞ்சே முக்காலே மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை பதினற் கழஞ்சே நாலு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபத்து நாலு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சே எட்டு மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தி யுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று அறுபத் தொன்பதினல் நிறை பதின் கழஞ்சே எட்டு மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை பதினைங் கழஞ்சே முக்காலே மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபத் தைஞ்சு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ் சரையே நாலு மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டை யுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று எண்பத் தொன்பதினல் நிறை பதின் கழஞ் சரையே இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை பதினறு கழஞ்சே ஆறு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபத்தாறு;

கொடை (தொடர்ச்சி)

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சே எழு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித்தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற் றெழுபத் தைஞ்சினுல் நிறை பதின் கழஞ்சே எட்டு மஞ்சாடியும் ஆக நிறை பதினேங் கழஞ்சே முக்காலே குன்றிக்கு விலை காசு இருபத்தாறு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சே இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்பு முதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுங் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று நாற்பத் தொன்பதினுல் நிறை ஒன்பதின் கழஞ்சே ஆறு மஞ்சாடியும் ஆக நிறை பதினுற் கழஞ்சே எட்டு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபத்து நாலு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சே இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ்

சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று ஐம்பதினல் நிறை ஒன்பதின் கழஞ்சே எழு மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை பதிேற் கழஞ் சரைக்கு விலை காசு இருபத்து நாலு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சே இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் ப்யிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று முப்பத் தெட்டி னல் நிறை ஒன்பதின் கழஞ்சே மூன்று மஞ்சாடியும் ஆக நிறை பதிேற் கழஞ்சே காலே குன்றிக்கு விலை காசு இரு பத்து நாலு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சே ஆறு மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்ட மும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொள மும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று அறுபத் தொன்றினல் நிறை ஒன்பதின் கழஞ்சே முக்காலே மஞ்சாடியும் ஆக நிறை பதினைங் கழஞ்சே இரண்டு மஞ்சாடிக்கு விலை காசு இரு பத் தைஞ்சு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சே முக்காலே குன்றியும் உடை யார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திரு

[stamp]



வடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று அறுபத்து நாலினுல் நிறை ஒன்பதின் கழஞ் சரையே மஞ்சாடியும் ஆக நிறை பதினேங் கழஞ்சே ஆறு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபத்தாறு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ் சரையே இரண்டு மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று ஐம்பத்து மூன்றினுல் நிறை ஒன்பதின் கழஞ் சரையே இரண்டு மஞ்சாடியும் ஆக நிறை பதினேங் கழஞ்சேய் நாலு மஞ்சாடிக்கு விலை காசு இருபத் தைஞ்சு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த முத்து வளையில் ஒன்று பொன் ஐங் கழஞ்சே காலும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று ஐம்பத்து நாலினுல் நிறை ஒன்பதின் கழஞ் சரையே மஞ்சாடியும் ஆக நிறை பதினுற் கழஞ்சே முக்காலே மஞ்

கொடை (தொடர்ச்சி)

சாடிக்கு விலை காசு இருபத்து நாலு;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த ஸ்ரீமுடி ஒன்று பொன் முப்பத்தெண் கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியுங் குன்றியுந் தடவிக் கட்டின பளிங்கு நூற்றிருபத்து நாலினால் நிறை கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடியுங் குன்றியும் பளிக்கு வயிரம் எழுபத்தொன்றினால் நிறை மூன்று மஞ்சாடியுங் குன்றியும் பொத்தி முப்பத்திரண்டினால் நிறை எழு மஞ்சாடியுங் குன்றியும் பிஞ்சு நிறை கழஞ் சரையும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் பயிட்டமும் நிம்பொளமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து முன்னூற்று முப்பத்து நாலினால் நிறை எழு கழஞ்சும் ஆக நிறை நாற்பத்தொன்பதின் கழஞ் சரைக்கு விலை காசு எண்பத் தாறு;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருமாலை ஒன்று பொன் எழு கழஞ் சரையே மஞ்சாடியும் இரண்டு மாவும் பிஞ்சு நிறை ஆறு மஞ்சாடியுங் குன்றியும் பளிக்கு வயிரம் அறுபத் திரண்டினால் நிறை மஞ்சாடியும் பளிங்கு எழுபத் தொன்றினால் நிறை அரைக் கழஞ்சே மஞ்சாடியும் பொத்தி மூன்றினால் நிறை மூன்று மாவும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் பயிட்டமும் நிம்பொளமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்திற் கோத்த முத்து நாற்பத்தைஞ்சினால் நிறை முக்காலே மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை ஒன்பதின் கழஞ்சே ஆறு மஞ்சாடியுங்

கொடை (தொடர்ச்சி)

குன்றிக்கு விலை காசு பதினெட்டு;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த ஸ்ரீசந்தம் ஒன்று பொன் ஐங் கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியும் ஒரு மாவும் உள்ளரக்கு நிறை அரைக் கழஞ்சே மூன்று மஞ் சாடியுங் குன்றியும் பிஞ்சு நிறை காலுந் தடவிக் கட்டின பளிங்கு பதினெட்டினால் நிறை நாலு மஞ்சாடியும் நான்கு மாவும் பளிக்கு வயிரம் ஆறினால் நிறை குன்றியும் பொத்தி பதின் மூன்றினால் நிறை இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத முத்திற் கோத்த முத்து வட்டமும் அனு வட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட் டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக் கத் துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்துத் தொளாயிரத் தெண்பத் தொன்றினால் நிறை முப்பத்து முக் கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை நாற்பத்தொரு கழஞ்சே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு ஐம்பத் தைஞ்சு;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த ஸ்ரீசந்தம் ஒன்று பொன் அறு கழஞ்சே ஒன்பது மாவும் உள்ளரக்கு நிறை முக்காலே மஞ்சாடியும் ஒரு மாவும் பிஞ்சு நிறை காலே இரண்டு மாவும் தடவிக் கட்டின பளிங்கு பதி னெட்டினால் நிறை நாலு மஞ்சாடியுங் குன்றியும் பளிக்கு வயி ரம் ஆறினால் நிறை குன்றியும் பொத்தி பதின் மூன்றினால் நிறை இரண்டு மஞ்சாடியும் எட்டு மாவும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்ட மும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்ட மும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ்

சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து எழுநூற் றைம்பத்து ஒன்பதிஞல் நிறை இருபத் தறு கழஞ் சரையே நாலு மஞ்சாடியும் ஆக நிறை முப்பத்து நாற் கழஞ்சே நாலு மஞ்சாடிக்கு விலை காசு நாற்பத் தைஞ்சு;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த ஸ்ரீசந்தம் அறு கழஞ்சே எழு மஞ்சாடியும் உள்ளரக்கு நிறை முக்காலே இரண்டு மஞ்சாடியும் பிஞ்சு நிறை காலுந் தடவிக் கட்டின பளிங்கு பதினெட்டிஞல் நிறை நாலு மஞ்சாடியும் நான்கு மாவும் பளிக்கு வயிரம் ஆறிஞல் நிறை ஆறு மாவும் பொத்தி பதின் மூன்றிஞல் நிறை இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத முத்திற் கோத்த முத்து வட்டமும் அனு வட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்ட மும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத் துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற் றெட்டிஞல் நிறை முப் பத் தைங் கழஞ்சே குன்றியும் ஆக நிறை நாற்பத் திரு கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடிக்கு விலை காசு ஐம்பத் தாறு;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த ஸ்ரீசந்தம் ஒன்று பொன் அறு கழஞ்சே ஒன்பது மஞ்சாடியுங் குன்றியும் உள்ளரக்கு நிறை முக்காலே மஞ்சாடியுங் குன்றியும் பிஞ்சு நிறை காலுந் தடவிக் கட்டின பளிங்கு பதினெட்டிஞல் நிறை நாலு மஞ்சாடியும் ஒரு மாவும் பளிக்கு வயிரம் ஆறி ஞல் நிறை குன்றியும் பொத்தி புதின் மூன்றிஞல் நிறை மூன்று மஞ்சாடியும் ஒரு மாவும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்

துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து எண்ணூற்று நாற் பத் தாறினால் நிறை முப்பதின் கழஞ்சும் ஆக நிறை முப்பத் தெழு கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியும் எழு மாவுக்கு விலை காசு ஐம்பது;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த ஸ்ரீசந்தம் ஒன்று பொன் கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் அறு மாவரை யும் பிஞ்சு நிறை ஒரு மாவும் தடவிக் கட்டின பளிங்கு இரண்டினால் நிறை இரண்டு மாவும் உடையார் ஸ்ரீராஜ ராஜ தேவர் குடுத்த முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் ஆக முத்து இரு நூற் றறுபதினால் நிறை இரு கழஞ்சே ஐம்மா வரையும் ஆக நிறை முக் கழஞ்சே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு மூன்று;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப் பட்டிகை ஒன்று பொன் இரு கழஞ்சே மூன்று மஞ்சாடியும் மூன்று மாவும் பிஞ்சு நிறை மூன்று மாவும் பளிங்கு ஆறினால் நிறை எழு மாவும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த முத்திற் கோத்த முத்துந் தைப்பு முத்தும் வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் புஞ்ச முத்தும் ஆக முத்து இருநூற் றெழுபத் தேழினால் நிறை இரு கழஞ்சே ஒன்பது மஞ்சாடியும் இரண்டு மாவும் ஆக நிறை நாற் கழஞ் சரையே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு ஐஞ்சு;

உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப் புறக் குடை ஒன்று பொன் எழுபத் தொரு கழஞ்சே காலே ஒரு மாவும் தடவிக் கட்டின பளிங்கு எண்பத் தொன்றினால்

கொடை (தொடர்ச்சி)

நிறை இரு கழஞ்சும் பளிக்கு வயிரம் பதினாறினால் நிறை ஒன்பது மாவும் பிஞ்சு நிறை இரு கழஞ்சே எட்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த முத்திற் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் தோல் தேய்ந்தனவும் பழமுத்தும் ஆக முத்து ஆயிரத்து முன்னூற் றெழுபத் திரண்டினால் நிறை இருபத்து முக் கழஞ் சரையே நாலு மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை தொண்ணூற் றொன்பதின் கழஞ்சே ஒன்பது மஞ்சாடிக்கு விலை காசு நூற் றறுபது;

---

இக்கல்வெட்டு விமானத்தின் வடபுறச் சுவரில் உள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 3 ஆக அச்சிடப் பட்டுள்ளது.

ரு

# முதல் இராஜராஜன் குடுத்த திருவாபரணங்கள்

ஸ்வஸ்தி ஸ்ரீ:

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்த ருளி வேங்கை நாடுங் கங்கை பாடியுந் தடிகைபாடியும் நுளம்பபாடியுங் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ் தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன் னெழில் வளரூழியு ளெல்லா யாண்டுந் தொழுதக விளங் கும் யாண்டே செழியரைத் தேசு கொள்,

மன்னன் :

கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு,

ஆண்டு :

யாண்டு இருபத் தொன்பதாவது வரை,

குடுத்த திருவாபரணங்கள் :

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்துக் காட்சி காட்டின நீக்கி உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்துக் கூடி முதலான பொன்னும் ரத் நங்களும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்தருளின ரத்நங்களுங் கொண்டு செய்து முதலான ரத்நத்தின் திரு

வாபரணங்கள் சரடுஞ் சட்டமும் நீக்கி அரக்கும் பிஞ்சும் உட்பட தக்ஷிணமேருவிடங்கந் என்னும் காசு கல்லால் நிறை எடுத்துக் கல்லில் வெட்டின;

கொடை:

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்குச் செய்த வீர பட்டம் ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் முன்னூற்று நாற்பத்து முக்கழஞ் ------ தடவிக் கட்டின பளிங்கு-----ழு கழஞ்சே மஞ்சாடியும் பொத்தி மூன்றினல் நிறை மஞ்சாடியும் பளிக்கு வயிரம் பத்தினல் நிறை மஞ்சாடியுங் குன்றியும் உள்ளரக்கும் பந்தமும் ஆக நிறை இரு நூற்று எழுபத் தறு கழஞ் சரையே மூன்று மஞ் சாடியும் பிஞ்சு நிறை---கழஞ்சே முக்காலே நாலு மஞ் சாடியுங் குன்றியும் இதில் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் சேரமானையும் பாண்டியர்களையும் எறிந்து கொண்ட மாட் டில் மூலரத்ந பண்டாரத்தார் முதற் தந்த பவழத்துக் கோத்த பவழம் அறுபத்து நாலினல் நிறை எழு கழஞ்சே எட்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்பு முதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து பதின் மூவாயிரத்து முன்னூற் றிருபத் தெட்டினல் நிறை ஐஞ் ஞூற்று நாற்பத் தெழு கழஞ்சும் ஆக நிறை ஆயிரத் தொரு நூற்றுத் தொண்ணூற்று எழு கழஞ்சே எழு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு -----

உடையார்க்குச் செய்த தானைத் திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் எண் ணூற்று முக் கழஞ்சே எண்பது மஞ்சாடியுங் குன்றியும்

தடவிக் கட்டின பளிங்கு முப்---ஞல் நிறை முக் கழஞ்சே ஒன்பது மஞ்சாடியும் பிஞ்சு நிறை கழஞ் சரையே மூன்று மஞ்சாடியும் குன்றியும் இதில் கோத்த முத்து உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஐயாயிரத்து அறுநூற்று ஒருபத் தொன்றிஞல் நிறை இருநூற்று முப்பத்தைங் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியும் மலைநாட்டுச் சேரமானையும் பாண்டியர்களையும் எறிஞ்சு கொண்ட மாட்டில் மூலரத்ந பண்டாரத்தார் முதற் தந்த பவழத்துக் கோத்த பவழம் ஐம்பத்தேழிஞல் நிறை எழு கழஞ்சே குன்றியும் ஆக நிறை ஆயிரத் தைம்பத் தொரு கழஞ்சே ஒன்பது மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இரண்டாயிரம்;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ்சே முக்காலே குன்றியும் அரக்கு நிறை ஒன்பதின் கழஞ்சே ஆறு மஞ்சாடியும் பிஞ்சு நிறை முக்காலே இரண்டு மஞ்சாடியும் தடவிக் கட்டின பளிங்கு பதினைஞ்சிஞல் நிறை கழஞ்சே மூன்று மஞ்சாடியும் பொத்தி மூன்றிஞல் நிறை நாலு மஞ்சாடியும் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்து கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் சப்பத்தியும் சக்கத்தும் இரட்டையுங் குளுர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து இரண்டாயிரத்து எழுபத்து ஏழிஞல் நிறை ஐம்பத்து நாற் கழஞ் சரையே இரண்டு மஞ்சாடியும் சேரமானையும் பாண்டியர்

கொடை (தொடர்ச்சி)

களையும் எறிந்து கொண்ட மாட்டில் மூலரத்ந பண்டாரத் தார் முதற் தந்த பவழத்துக் கோத்த பவழம் முப்பதினால் நிறை முக்காலே இரண்டு மஞ்சாடியும் ஆக நிறை எழுபத் தேழு கழஞ்சே முக்காலுக்கு விலை காசு நூறு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ்சேய் முக்காலும் அரக்கு நிறை ஒன்ப பதின் கழஞ்சே எட்டு மஞ்சாடியுங் குன்றியும் பிஞ்சு நிறை முக்காலே இரண்டு மஞ்சாடியுந் தடவிக் கட்டின பளிங்கு பதினைஞ்சினால் நிறை கழஞ்சும் பொத்தி மூன்றினால் நிறை மூன்று மஞ்சாடியுங் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந் தரத்து முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத் தும் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத் தைஞ்னூற்று நாற்பத் தொன்றினால் நிறை நாற் பத்து முக் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியும் பண்டாரத்துப் பவழத்துக் கோத்த பவழம் இருபத்து நாலினால் நிறை கழஞ்சும் ஆக நிறை அறுபத்தெழு கழஞ்சே குன்றிக்கு விலை காசு தொண்ணூறு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ் சரையே நாலு மஞ்சாடியும் எட்டு மாவும் அரக்கு நிறை எண் கழஞ் சரையே மூன்று மஞ்சாடியுங் குன்றியும் பிஞ்சு நிறை முக்காலுந் தடவிக் கட்டின பளிங்கு பதினைஞ் சினால் நிறை முக்காலே மூன்று மஞ்சாடியுங் குன்றியும் பொத்தி மூன்றினால் நிறை மூன்று மஞ்சாடியும் இரண்டு

கொடை (தொடர்ச்சி)

மாவும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரந்துக் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்தும் குளுர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத்தைஞ் ஞூற்றுத் தொண்ணூறினல் நிறை நாற்பத்தைங் கழஞ்சேய் இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் பண்டாரத்தில் பவழத்துக் கோத்த பவழம் இருபத்து நாலினல் நிறை முக்காலே மூன்று மஞ்சாடி யுங் குன்றியும் ஆக நிறை அறுபத் தெழு கழஞ்சேய் ஆறு மஞ்சாடிக்கு விலை காசு தொண்ணூற்று ஐஞ்சு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ் சரையே நாலு மஞ்சாடியும் அரக்கு நிறை எண் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியும் பிஞ்சு நிறை முக்காலே மஞ்சாடியுங் குன்றியுந் தடவிக் கட்டின பளிங்கு பதினேஞ்சினல் நிறை கழஞ்சேய் இரண்டு மஞ்சாடியும் பொத்தி மூன்றினல் நிறை இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்துக் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம் பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளுர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத்து அறுநூற்று இருபத் தைஞ்சினல் நிறை நாற்பத்து முக் கழஞ்சேய் மஞ்சாடியும் பண்டா ரத்துப் பவழத்துக் கோத்த பவழம் இருபத்து நாலினல் நிறை கழஞ்சும் ஆக நிறை அறுபத்தைங் கழஞ் சரையே மூன்று மஞ்சாடிக்கு விலை காசு தொண்ணூறு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ் சரையே நாலு மஞ்சாடியும் அரக்கு நிறை எண் கழஞ்சே முக்காலே குன்றியும் பிஞ்சு நிறை முக்காலுந் தடவிக் கட்டின பளிங்கு பதினைஞ்சினால் நிறை கழஞ்சே குன்றியும் பொத்தி மூன்றினால் நிறை இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்ப மாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்துக் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிர --------னால் நிறை நாற்பத்தொரு கழஞ் சரையே குன்றியும் பண்டாரத்துப் பவழத்துக் கோத்த பவழம் இருபத்து நாலினால் நிறை கழஞ்சும் ஆக நிறை அறுபத்து முக் கழஞ்சே முக்காலே மூன்று மஞ் சாடிக்கு விலை காசு தொண்ணூறு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியும் அரக்கு நிறை எண் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் பிஞ்சு நிறை முக்காலே இரண்டு மஞ்சாடியுந் தடவிக்கட்டின பளிங்கு பதினைஞ்சினால் நிறை கழஞ்சே நாலு மஞ்சாடியுங் குன்றியும் பொத்தி மூன்றினால் நிறை இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்துக் கோத்த முத்து வட்டமும் அனுவட்ட மும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுங் சப்பத்தியுஞ் சக்கத்துங்

கொடை (தொடர்ச்சி)

குளுர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத்தைஞ் ஞூற்று எண்பத் தாறினால் நிறை நாற்பத்தொரு கழஞ்சே எழு மஞ்சாடியுங் குன்றியும் சேரமானையும் பாண்டியர்களை யும் எறிந்து கொண்ட மாட்டில் மூலரத்ந பண்டாரத்தார் முதற் தந்த பவழத்துக் கோத்த பவழம் இருபத்து நாலி னால் நிறை அரைக் கழஞ்சே நாலு மஞ்சாடியும் ஆக நிறை அறு பத்து நாற் கழஞ்சுக்கு விலை காசு தொண் ணூறு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ்சே முக்காலே மஞ்சாடியும் அரக்கு நிறை எண் கழஞ் சரையே குன்றியும் பிஞ்சு நிறை முக்காலுந் தடவிக் கட்டின பளிங்கு பதினைஞ்சினால் நிறை முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் பொத்தி மூன்றினால் நிறை இரண்டு மஞ்சாடியும் மூன்று மாவும் உடையார் ஸ்ரீராஜ ராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்துக் கோத்த முத்து வட்டமும் அனுவட்ட மும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளுர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத்... ......ற்று முப்பத்து நாலினால் நிறை நாற்பத் தொரு கழஞ்சே நாலு மஞ்சாடியும் ஒரு மாவும் பண்டாரத்துப் பவழத்துக் கோத்த பவழம் இரு பத்து நாலினால் நிறை கழஞ்சும் ஆக நிறை அறுபத்து முக்கழஞ்சே காலே நான்கு மாவுக்கு விலை காசு தொண்ணூறு;

பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருப்பட்டிகை ஒன்று தண்டவாணிக்குக்கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ்சே முக்காலும் அரக்கு நிறை ஒன்பதின் கழஞ்

கொடை (தொடர்ச்சி)

சரையும் பிஞ்சு நிறை முச்காலே இரண்டு மஞ்சாடியுந் தடவிக் கட்டின பளிங்கு பதினைஞ்சினால் நிறை கழஞ்சே இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் பொத்தி மூன்றினால் நிறை இரண்டு மஞ்சாடியுங் குன்றியும் உடையார் ஸ்ரீராஜ ராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத இரண்டாந்தரத்துக் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் உடைய முத்து ஆயிரத்து ஐஞ் ஞூற்று அறுபத்தாறினால் நிறை நாற்பதின் கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியும் சேரமானையும் பாண்டியர்களையும் எறிந்து கொண்ட மாட்டில் மூலரத்ந பண்டாரத்தார் முதற் தந்த பவழத்துக் கோத்த பவழம் இரு பத்து நாலினால் நிறை முக்காலே நாலு மஞ்சாடியும் ஆக நிறை அறுபத்து நாற் கழஞ்சே மூன்று மஞ்சாடிக்கு விலை காசு தொண்ணூறு;

---

இக்கல்வெட்டு விமானத்தின் கீழ்ப்புறச் சுவரில் உள்ளது. தென்னிந்திய கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 59 ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

# முதல் இராஜராஜன் குடுத்த திருவாபரணங்கள்

ஸ்வஸ்தி ஸ்ரீ:

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை பூண்டமை மநக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை நாடுங் கங்கபாடியுந் தடிகைபாடியும் நுளம்ப பாடியுங் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழி எல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டேய் செழியரைத் தேசு கொள்,

மன்னன் :

கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு,

ஆண்டு :

யாண்டு இருபத் தொன்பதாவது,

குடுத்த திருவாபரணங்கள் :

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடைய பரமஸ்வாமிக்கு உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் சேரமானையும் பாண்டியர்களையும் எறிந்து கொண்ட பண்டாரங்களிலுந் தம் பண்டாரங்களிலும் யாண்டு இருபத் தொன்பதாவது வரை குடுத்த ரத்நத்தின் திருவாபரணங்க - - - - - - - ன பொன்

னோடுங் கட்டப்பட்ட ------- கோத்த ரத்நங்கள்---- ---- தி ------ கு ------ மும் பேசியும் சரடும் சட்டமும் செப்பாணிகளும் நீக்கியும் கட்டப்பட்ட ரத்நங்களில் அரக்கும் பிஞ்சும் உட்பட தக்ஷிணமேரு விடங்கந் என்னுங் கல்லால் நிறை எடுத்து கல்லில் வெட்டின படி;

திருவாபரணங்கள் :

கண்டநாண் ஒன்றிற் கட்டின மாணிக்கம் பதினஞ்சும் மரகதம் பதினாறும் வயிரம் இருபத்தெட்டும் தைய்த்த முத்து ஒப்புமுத்துங் குறுமுத்தும் பயிட்டமும் ஆக முத்து நாற்பதும் உட்பட நிறை நூற்று எழுபதின் கழஞ்சேய் எழு மஞ்சாடிக்கு விலை காசு ஐஞ்ஞூறு;

கண்டநாண் ஒன்றிற் கட்டின வயிரம் இருபத்து நாலும் மாணிக்கம் இருபத்து மூன்றும் மரகதம் ஆறும் உட்பட நிறை நூற்று------பத்தொரு கழஞ்சேய் காலுக்கு விலை காசு முன்னூற்று அறுபது;

கண்டநாண் ஒன்றிற் கட்டின வயிரம் அறுபத்து நாலும் மாணிக்கம் மூன்றும் மரகதம் நாலும் உட்பட நிறை அறுபத்து நாற் கழஞ்சேய் ஆறு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருநூற்று இருபது;

கண்டநாண் ஒன்றிற் கோத்த நீலங் கோமளம் ஒன்றும் உட்பட நிறை ஐம்பத்தொரு கழஞ்சேய் காலுக்கு விலை காசு------

கண்டநாண் நடுவு ரத்நப் பட்டிகை உடையதொன்றிற் கட்டின வயிரம் அறுபத்தாறும் மாணிக்கம் நாற்பத்து மூன்றும் மரகதம் முப்பத்து நாலும்------துடர் பன்னிரண்டும் உட்பட நிறை அறுபத்து நாற் கழஞ்சேய் காலே ------க்கு விலை காசு இருநூற்றையம்பத்து இரண்டு;

திருவாபரணங்கள் (தொடர்ச்சி)

கண்டநாண் ஒன்றிற் கட்டின- - - - -

புல்லிகைக் கண்டநாண் ஒன்றில் நாண் மூன்றிற் கட்டின வயிரம் எழுபத்தாறும் மாணிக்கம் இருபத்து நாலும் மரகதம் பதினலும் உட்பட நிறை நூற்று இருபதின் கழஞ்சுக்கு விலை காசு முன்னூற்று ஒன்று;

புல்லிகைக் கண்டநாண் ஒன்றிற் கட்டின கண்டு ஒன்றும் மாணிக்கம் நாற்பதும் மரகதம் இர- - - - -நீலம்- - - - -விலை காசு நூற்று ஒன்று;

புல்லிகைக் கண்டநாண் ஒன்றிற் கட்டின வயிரம் ஐம்பத்து நாலும் மாணிக்கம் ஏழும் உட்பட நிறை எண்பத்து முக் கழஞ்சேய் அரைக்காலுக்கு விலை காசு இருநூற்று- - - - - தெய் கால்;

பாசமாலை ஒன்றிற் கட்டின வயிரம் எழுபத் தைஞ்சும் மாணிக்கம் எழுபதும் பொத்தி நாற்பத் தொன்றும் கோத்த முத்து ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் ஆக முத்து எண்பத்து மூன்றும் உட்பட நிறை- - -ஒன்பதின்- - - - - விலை காசு நூற்று- - - - -

- - - - - ஒன்றிற் கட்டின வயிரம் நாற்பத் தைஞ்சும் மாணிக் கம் - - - - - பத்தாறும் மரகதம் பத்தும் பொத்தி முப்பத் தொன்பதும் முத்து- - - - -உட்பட நிறை இருபத்து நாற் கழஞ்சேய் ஆறு மஞ்சாடிக்கு விலை காசு நூற்று இரண்டே கால்;

மாணிக்கத்தின் தாலி ஒன்றிற் கட்டின வயிரம் எட்டும் மாணிக்கம் ஒன்றும் தைத்த மாணிக்கம் ஹளஹளம் ஒன் றும் உட்பட நிறை இரு- - - - -காசு ஐம்பது;

ஸ்ரீபாஹ-வலயம் ஒன்றிற் தடவிக் கட்டின மணிங்கு

திருவாபரணங்கள் (தொடர்ச்சி)

இரண்டும் ஆகாவிசாதி ஒன்றும் சுகந்தி ஒன்றும் குப்பி மூன்றும் உட்பட நிறை - - - - - கழஞ்சே மஞ்சாடிக்கு விலை காசு ஐம்பத்து ஐஞ்சேய் கால்;

ஸ்ரீபாஹு வலயம் ஒன்றிற் கட்டின மாணிக்கம் ஒன்றும் ஸுகந்தி ஒன்றும் குருவிந்தம் மூன்றும் குப்பி மூன்றும் உட்பட நிறை இருபத் தொன்பதின் கழஞ்சேய் எழு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு - - - - - த்து நாலு;

பதக்கம் ஒன்றிற் கட்டின குருவிந்தம் ஒன்றும் உட்பட நிறை பதின் முக் கழஞ்சேய் முக்காலேய் மஞ்சாடிக்கு விலை காசு இருபத்தேழு;

ரத்நவளையில் ஒன்றிற் கட்டின மாணிக்கம் நாற்பத்து ஐஞ்சு உட்பட நிறை ஒன்பதின் கழஞ்சேய் மஞ்சாடியும் எட்டு மாவுக்கு விலை காசு இருபதரையே ஒரு மா;

ரத்நவளையில் ஒன்றிற் கட்டின மாணிக்கம் இருபதும் மரகதம் இருபதும் உட்பட நிறை நாற் கழஞ்சேய் எட்டு மஞ்சாடிக்கு விலை காசு- - - - -கால்;

ரத்நவளையில் ஒன்றிற் கட்டின மாணிக்கம் பதினெட்டும் மரகதம் பதினெட்டும் உட்பட நிறை - - - கழஞ் சரையே - - - -

- - - - -மாணிக்கம் எட்டும் உட்பட நிறை பதினாற் கழஞ் சரையே நாலு மஞ்சாடிக்கு விலை காசு முப்பத்து இரண்டே முக்கால்;

ரத்நவளையில் ஒன்றிற் கட்டின முத்து இருபதும் மாணிக்கம் இருபதும் பொத்தி நாற்பதும் உட்பட நிறை பதினறு கழஞ் சரையே இரண்டு மஞ்சாடிக்கு விலை காசு நாற்பத்து ஐஞ்சு;

ரத்நவளையி - - - - இரண்டு மஞ்சாடிக்கு விலை காசு முப்பது;

திருவாபரணங்கள் (தொடர்ச்சி)

திருக்கைய்க் காறை ஒன்றிற் கட்டின வயிரம் பதி-----மாணிக்கம் முப்பத்து நாலும் மரகதம் பதினெட்டும் உட்பட நிறை ஒன்பதின் கழஞ் சரையே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு முப்பதெய் கால்;

ரத்ந கடகம் ஒன்றிற் கட்டின வயிரம் முப்பத் தாறும் மாணிக்கம் இருபத் தைஞ்சும் மரகதம் பத்தும் உட்பட நிறை பதினற் கழஞ் சரையே மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு------;

-----ஒன்றிற்----மாணிக்கம்----முக்காலே மஞ்சாடிக்கு விலை காசு------கால்;

பவழ கடகம் ஒன்றிற் கட்டின பவழம் பத்தும் உட்பட நிறை இருபதின் கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடியும் மூன்று மாவுக்கு விலை காசு முப்பத்து எட்டு;

பவழ கடகம் ஒன்றிற் கட்டின பவழம் பத்தும் உட்பட நிறை இருபதின் கழஞ்சேய் முக்கால் மஞ்சாடியும் எட்டு மாவுக்கு விலை காசு நாற்பத் தொன்றரை;

திருப்பட்டிகை நாணும் அரசி மாணிக்கமும் படுகண்ணுங் கள்ளிப்பூவுங் கிங்கிணி பெரும் நாணும் மாங்காய் நாணுடையனவும் கிம்பிரி முகமும் உடையது ஒன்றிற்----நிம்பொளம் பதினை-----பதினாறும்------மும் பொத்தி பத்தொன்பதும் உட்பட நிறை இருநூற்று நாற்பத்து முக்கழஞ் சரையே மூன்று மஞ்சாடியும் மூன்று மாவுக்கு விலை காசு நானூற்று ஆறு;

இ------ ண்டலம் ஒன்றிற் கட்டின வயிரம் ஐஞ்சும் மாணிக்கம்------ உட்பட நிறை முக்காலே குன்றிக்கு விலை காசு இரண்டு;

திருவாபரணங்கள் (தொடர்ச்சி)

முத்தின் உழுத்து ஒன்றிற் கட்டின வயிரம் மூன்றும் மாணிக்கம் மூன்றும் பொத்தி மூன்றும் தைச்ச முத்து நிம் பொளமும் வரையும் ஒன்றும் உட்பட நிறை முக்காலே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபது;

முத்தின் உழுத்து ஒன்றிற் கட்டின வயிர மூன்றும் மாணிக்க மூன்றும் பொத்தி மூன்றும் தைச்ச முத்து நிம்பொளமும் வரையும் ஒன்றும் உட்பட நிறை - - - - - ரை - - - - - மஞ் சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபது;

மாணிக்கத்தின் உழுத்து ஒன்றிற் கட்டின வயிர மூன்றும் மாணிக்கம் மூன்றும் மரகதம் மூன்றும் தைச்ச மாணி - - - - - - - - - - ;

மாணிக்கத்தின் உழுத்து ஒன்றிற் கட்டின வயிர மூன்றும் மாணிக்க மூன்றும் மரகதம் மூன்றும் தைச்ச மாணிக்கம் சட்டமும் இலைசுனியும் ஒன்றும் உட்பட நிறை கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடிக்கு விலை காசு இருபத் தைஞ்சு;

வயிர உழுத்து ஒன்றிற் கட்டின வயிரம் ஐஞ்சும் மாணிக் கம் ஒ - - - - - ம் மாணிக்கம் - - - - - ரண்டும் உட்பட நிறை முக்காலே எழு மாவுக்கு விலை காசு - - - - - ;

சொனகச் சிடுக்கின் கூடு ஒன்றிற் கட்டின மாணிக்கம் ஒன்பதும் மரகதம் ஒன்பதும் உட்பட நிறை முக்காலே நாலு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு நாலு;

சொனகச் சிடுக்கின் கூடு ஒன்றிற் கட்டின மாணிக்கம் ஒன்பதும் மரகதம் ஒன்பதும் உட்பட நிறை கழஞ்சேய் ஒன்பது - - - - - விலை காசு நான்கே ஒருமா;

ரத்நமோதிரம் ஒன்றிற் கட்டின - - - - ம் பன்னிரண்டும்

திருவாபரணங்கள் (தொடர்ச்சி)

- - - - - ஒன்றும் உட்பட நிறை இரு கழஞ்சேய் முக்காலே நாலு - - - - - விலை காசு - - - - - து;

ரத்நமோதிரம் ஒன்றிற் கட்டின வயிரம் நாலும் மாணிக்கம் ஒன்றும் உட்பட நிறை கழஞ்சேய் - - - - - மஞ்சாடிக்கு விலை காசு;

...............................;

ரத்நமோதிரம் ஒன்றிற் கட்டின நீலம் ஒன்றும் உட்பட நிறை எழு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு ஒன்று;

ரத்நமோதிரம் ஒன்றிற் கட்டின ராஜாவர்த்தம் ......... உட்பட நிறை கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடிக்கு விலை காசு இரண்டு;

ரத்நமோதிரம் ஒன்றிற் கட்டின குருவிந்தம் ஒன்று உட்பட நிறை அரைக் கழஞ்சேய் நாலு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு ஒன்று;.

நவரத்ந மோதிரம் ஒன்றிற் கட்டின வயிரம் ஒன்றும் நீலம் ஒன்றும் முத்து ஒன்றும் புஷ்யராகம் ஒன்றுங் கோமேதகம் ஒன்றும் பவழம் ஒன்றும் மரகதம் ஒன்றும் வைடூர்யம் ஒன்றும் மாணிக்கம் ஒன்றும் உட்பட நிறை.........கழஞ் சேய் முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு......ல்;

நவரத்ந மோதிரம் ஒன்றில் நவரத்நம் ஒன்பதும் உட்பட நிறை இரு கழஞ்சேய் ஆறு மஞ்சாடிக்கு விலை காசு ஐஞ்சு;

நவரத்நமோதிரம் ஒன்றில் நவரத்நம் ஒன்பதும் உட்பட நிறை கழஞ்சேய் மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை

திருவாபரணங்கள் (தொடர்ச்சி)

காசு மூன்று;

நவரத்நமோதிரம் ஒன்றில் நவரத்நம் ஒன்பதும் உட்பட நிறை இரு கழஞ்சேய் ஏழு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு............

.........ருச்சக.........ஒன்றிற் கட்டின மாணிக்கம் இரண்டும் .........மூன்றும் க.........டு ஒன்றும் உட்பட நிறை அறுபத்தெழு கழஞ் சரையே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு .........;

.........பற்றும் பலகுழிவும் லசுநியும் உடையது குணவியது ஒன்று உட்பட நிறை நூற்றெண்பத் தொரு கழஞ்சுக்கு விலை காசு ஐஞ்ஞூறு;

பிருஷ்ட கண்டிகை ஒன்றிற் கட்டின வயிரம் நாலும் குப்பி வயிரம் இருபத்தாறும் பளிக்கு வயிரம் நாலும் பொத்தி ஆறும் குருவிந்தம் ஒன்பதும் ......... உட்பட நிறை ஐம்பத்தைங் கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு நூற்று மூன்று;

ஸ்ரீசந்தம் ஒன்றிற் கட்டின வயிரம் நாலும் மாணிக்க நாளமுங் கோமளமும் எட்டும் மரகதம் ஐஞ்சும் கோத்த முத்துந் தச்ச முத்தும் வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்புமுதுஞ் சக்கத்து து ......... து ஒன்று உட்பட நிறை முப்பத்தெண் கழஞ்சே எழு மஞ்சாடியும் ஒன்பது மாவுக்கு விலை காசு நாற்பது;

வலத் திருவடிநிலை ஒன்றில் தடவிக் கட்டின பளிங்கு பத்தும் பளிக்கு வயிரம் முப்பத் தெட்டும் உட்பட நிறை இரு பத்தென் கழஞ்சே காலுக்கு விலை காசு ஐம்பத்தேழு;

இடத் திருவடிநிலை ஒன்றில் தடவிக்கட்டின பளிங்கு பத்

திருவாபரணங்கள் (தொடர்ச்சி)

தும் பளிக்கு வயிரம் முப்பத் தெட்டும் உட்பட நிறை இரு பத்தெண் கழஞ்சே காலுக்கு விலை காசு ஐம்பத்தேழு;

வலத் திருவடிநிலை மரத்தின் மேல் பொன் போர்த்தது ஒன்றிற் கட்டின மாணிக்கம் ஹளஹளமுங் கோமளமுங் குணவியன தொண்ணூற் றேழும் வயிரம் ஐம்பதும் மரமும் பந்தமும் உட்பட நிறை நூற் றிருபதின் கழஞ்சுக்கு விலை காசு இரு நூறு;

இடத் திருவடிநிலை மரத்தின் மேல் பொன் போர்த்தது ஒன்றிற் கட்டின மாணிக்கம் ஹளஹளமுங் கோமளமுங் குணவியன தொண்ணூற் றெட்டும் வயிரம் ஐம்பத்தொன் றும் மரமும் பந்தமும் உட்பட நிறை நூற்றிருபத்து முக் கழஞ்சுக்கு விலை காசு இருநூறு;

வலத் திருவடிநிலை மரத்தின் மேல் மேற் பாகம் பொன் போர்த்தது ஒன்றிற் கட்டின மாணிக்கங் கோமளமும் ஹளஹளமுங் குணவியன நாலும் பொத்தி இருபத்தைஞ் சும் தடவிக் கட்டின பளிங்கு நூற் றெண்பதும் பளிக்கு வயிரம் முன்னூற் றிருபத்து நாலும் மரமும் பந்தமும் உட்பட நிறை ......... க் காலுக்கு விலை காசு அறுபத் தைஞ்சு;

இடத் திருவடிநிலை மரத்தின் மேல் மேற் பாகம் பொன் போர்த்தது ஒன்றிற் கட்டின மாணிக்கங் கோமளமும் ஹளஹளமுங் ......... முந் நூற் றிருபத் தொன்றும் மர மும் பந்தமும் உட்பட நிறை நூற்று நாற் பதின் கழஞ்சே காலுக்கு விலை காசு அறுபத் தைஞ்சு;

உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் சேரமானையும் பாண்டியர் களையும் எறிந்து கொண்ட பண்டாரங்களில் குடுத்த தொ

திருவாபரணங்கள் (தொடர்ச்சி)

.........டு மஞ்சாடியும் ஆறு மாவும் தடவிக் கட்டின பளிங்கு நாற்பத் தொன்றும் நிறை ......... மஞ்சாடியும் பளிக்கு வயிரம் எழுபத் தேழிநுல் நிறை மஞ்சாடியுங் குன்றியும் பொத்தி பதினெட்டிநுல் நிறை எட்டு மஞ்சாடியு நான்கு மாவும் வெ ......... நிறை இரு கழஞ்சே ஒன்பது மஞ்சாடியும் ஆக நிறை ......... இரண்டு மஞ்சாடியுங் குன்றி தக்ஷிணமேருவிடங்கனுல் நிறை ......... உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடித் தொழுத முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் ஆக முத்து அறுபத்து நாலிநுல் நிறை ......... மஞ்சாடியும் ஆக நிறை தொண்ணூற்றொரு கழஞ் சரையே மஞ்சாடிக்கு விலை காசு இரு நூறு;

---

இக்கல்வெட்டு விமானத்தின் தென்புறச் சுவரில் உள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 93 ஆக அச்சிடப் பட்டுள்ளது.

ரு

## முதல் இராஜராஜன் குடுத்த திருவாபரணங்கள்

ஸ்வஸ்தி ஸ்ரீ:

மன்னன் :

உடையார் ஸ்ரீராஜராஜ தேவர்,

பிள்ளையாருக்கு குடுத்தது :

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் கோயிலில் பரிவாராலயத்துப் பிள்ளையார் கணபதியார்க்கு,

ஆண்டு :

யாண்டு இருபத் தொன்பதாவது வரை,

ஆணை :

குடுத்த பொன் ஆடவல்லான் என்னுங் கல்லால் நிறை எடுத்துக் கல்லில் வெட்டிந;

குடுத்த திருவாபரணங்கள் :

ஸ்ரீபாஹு வலயம் ஒன்று பொன் இருபத் தைய்ங் கழஞ்சேய் காலே எழு மா;

ஸ்ரீபாஹு வலயம் ஒன்று பொன் இருபத் தைய்ங் கழஞ்சு;

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்கு ஸ்ரீகார்யஞ் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் ஸூர்யனை தென்னவன் மூவேந்த வேளான்,

இந்த கணபதியார்க்கு குடுத்த ரத்நங்கள் சரடு நீக்கி

திருவாபரணங்கள் (தொடர்ச்சி)

தக்ஷிணமேருவிடங்கந் என்னுங் கல்லால் நிறை எடுத்தும் பொன் ஆடவல்லான் என்னுங் கல்லால் நிறை எடுத்துங் கல்லில் வெட்டின படி;

கொம்பிற் கொள்கை ஒன்றில்த் தடவிக் கட்டின மாணிக்கம் எட்டுந் தடவிக் கட்டின பளிங்கு இரண்டும் பளிக்கு வயிரம் பதிநாலும் முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்துஞ் சப்பத்தியும் ஆக முத்து நூற்றொருபத் தொன்பதும் பொன்னும் அரக்கும் உட்பட நிறை பதினற் கழஞ்சே முக்காலே மஞ்சாடிக்கு விலை காசு இருபத்து மூன்று;

திருப்பொற்பூ ஒன்றில்த் தடவிக் கட்டின பளிங்கு ஒன்றும் பிஞ்சு நிறை ஆறு மஞ்சாடியும் உட்படப் பொன் எண்கழஞ் சரையே மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு பதினெட்டு;

கும்பத்தகடு ஒன்றில்த் தடவிக் கட்டின பளிங்கு ஒன்றும் பிஞ்சு நிறை ஆறு மஞ்சாடியும் உட்படப் பொன் இரு கழஞ்சே நாலு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு நாலு;

திருநயநம் ஒன்றில் கட்டின நீலம் ஒன்றும் பிஞ்சு நிறை நாலு மஞ்சாடியுங் குன்றியும் உட்படப் பொன் அரைக் கழஞ்சே மூன்று மஞ்சாடியும் ஒரு மாவுக்கு விலை காசு ஒன்றரை;

மாம்பழமாகச் செய்த தகடு ஒன்று பொன் முக்கழஞ்சு;

திருக்கைய்க் காறை ஒன்று பொன் அறு கழஞ்சே கால்;

திருக்கைய்க் காறை ஒன்று பொன் அறு கழஞ்சே மஞ்சாடி;

இவனே கோப்பரகேஸரி பந்மரான ஸ்ரீராஜேந்திர சோள

திருவாபரணங்கள் (தொடர்ச்சி)

தேவர்க்கு யாண்டு மூன்றுவது வரை குடுத்தன;

மத்தகத் தகடு ஒன்று பொன் பதின் கழஞ்சு;

---

இக்கல்வெட்டு திருச்சுற்றின் மேல்புறம் ஒரு தூணில் உள்ளது. தென்னிந்திய கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 86 ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

## முதல் இராஜராஜன் திருப்பதியம் விண்ணப்பம் செய்யக் குடுத்தது.

ஸ்வஸ்தி ஸ்ரீ:

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்த ருளி வேங்கை நாடுங் கங்க பாடியுந் தடிகைபாடியும் நுளம்பபாடியுங் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் முரட்டெழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வள ரூழியு ளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசு கொள்,

மன்னன் :

கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு,

ஆண்டு :

யாண்டு இருபத் தொன்பதாவது வரை,

ஆணை :

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்குத் திருப்பதி யம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும், இவர்களிளே நிலை

யாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும், இவர்களிலே நிலையாய்க் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும், ஆக ஐம்பதின்மர்க்குப் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தேய் பெறவும்.

இவர்களில் செத்தார்க்கும் அனுதேசம் போனார்க்குந் தலைமாறு அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் அந்நெல்லுப் பெற்றுத் திருப்பதியம் விண்ணபஞ் செய்யவும்.

அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் தாந்தாம் யோக்யர் அல்லாதுவிடில் யோக்யராயிருப்பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந்நெல்லுப் பெறவும்.

அவ்வவர்க்கு அடுத்த முறை கடவாரின்றியொழியில் அந்த நியாயத்தாரே யோக்யராயிருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய இட்டு இட்ட அவனே அவ்வவர் பெறும்படி நெல்லுப் பெறவும்.

ஆக இப்படி உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது;

திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் :

பாலன் திருவாஞ்சியத்தடிகளான ராஜராஜப் பிச்சனான சதாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

திருவெண்ணவல் செம்பொற் சோதியான தக்ஷிணமேருவிடங்கப்பிச்சனான ஞாநசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

பட்டாலகன் அம்பலத்தாடியான மநோத்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

பட்டாலகன் சீருடைக் கழலான் பூர்வசிவனுக்கு நிசதம்

திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் (தொடர்ச்சி)

நெல்லு முக்குறுணி;

பொற்சுவரன் திருநாவுக்கரையனை பூர்வசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

மாதேவன் திருநானசம்பந்தனை ஞானசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

கயிலாயன் ஆரூரான் தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

செட்டி எடுத்தபாதமான கவசசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

இராமன் சம்பந்தனை ஸத்யசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

அம்பலவன் பத்தர்கள்.........டனை வாமசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

கம்பன் திருநாவுக்கரையனை சதாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

நக்கன் சீராளனை வாமசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

அப்பி திருநாவுக்கரையனை நேத்ரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

சிவக்கொழுந்து சீராளனை தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

ஐஞ்ஞூற்றுவன் வெண்காடனை ஸத்யசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

அரையன் அணுக்கனை திருமறைக்கா.........னை தர்மசிவ

திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் (தொடர்ச்சி)

னுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

அரையன் அம்பலக்கூத்தனான ஓங்காரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

ஆரூரன் திருநாவுக்கரையனான ஞாநசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

கூத்தன் மழலைச் சிலம்பான் பூர்வசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

ஐஞ்ஞூற்றுவன் சீயாரூரான் தத்புருஷசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

சம்பந்தன் ஆரூரனான வாமசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

அரையன் பிச்சனான தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

காச்யபன் எடுத்தபாதப்பிச்சனான உருத்ரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

ஸுப்ரமண்யன் ஆச்சனான தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

கூத்தன் அமரபுஜங்கன் ஆன ஸத்யசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

.........வெண்காடனான அகோரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

மாதேவன் திருநாவுக்கரையனான விக்ஞானசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

கூத்தன் வெண்காடனான உருத்திரசிவனுக்கு நிசதம்

திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் (தொடர்ச்சி)

நெல்லு முக்குறுணி;

ஐஞ்ஞூற்றுவன் திருவாய்மூரான் அகோரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

திருமலை கூத்தனன் வாமசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

ஐஞ்ஞூற்றுவன் எடுத்தபாதமான தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

அரையன் தில்லைக்கரைசான பூர்வசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

காளிசம்பந்தனை தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

காபாலிகவர்லியான ஞானசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

வெண்காடன் நமச்சிவாயமான உருத்ரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

சிவனனந்தனை யோகசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

சிவக்கொழுந்து சம்பந்தனை அகோரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

இராமன் கணவதியான ஞானசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

பிச்சன் வெண்காடனை அகோரசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

மறைக்காடன் நம்பி ஆரூரனை ஞானசிவனுக்கு நிசதம்

திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் (தொடர்ச்சி)

நெல்லு முக்குறுணி;

சோமன் சம்பந்தனை ஞாநசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

சத்தி திருநாவுக்கரையனை ஈசானசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

பொற்சுவரன் நம்பியாரூரனை தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

ஆச்சன் திருநாவுக்கரையனை நேத்ர சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

ஐயாறன் பெண்ணோர்பாகனை ஹிருதய சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

ராஜாதித்தன் அம்பலத்தாடியான சிகாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

செல்வன் கணவதி தெம்பனை தர்மசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

கூத்தன் தில்லைக்கூத்தனை ஞானசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

உடுக்கை வாசிக்கும் தேவதை கோமபுறத்து தத்தயக்ரம வித்தன் மகன் ஸூர்யதேவக்ரமவித்தனை ஆ...லவிடங்க உடுக்கை விஜ்ஜாதிரனை சோமசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

கொட்டி மத்தளம் வாசிக்குங் குணப்புகழ் மருதனை சிகாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி;

---

இக்கல்வெட்டு திருச்சுற்றின் வடபுறத்தில் உள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 65 ஆக அச்சிடப் பட்டுள்ளது.

# முதல் இராஜராஜன் நியமித்த தளிச்சேரிப் பெண்டுகள்.

ஸ்வஸ்தி ஸ்ரீ:

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை பூண்டமை மநக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை நாடுங் கங்கபாடியுந் தடிகைபாடியும் நுளம்ப பாடியுங் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் முரட்டெழில் சிங்களர் ஈழ மண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப்பழந்தீவு பன்னீராயிரமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழியுள் எல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசு கொள்,

மன்னன் :

கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு,

ஆண்டு :

யாண்டு இருபத் தொன்பதாவது வரை,

ஆணை :

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்கு நிவந்தக் காறராக உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த நிவந்தக் காறர்க்கும், உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்

தளிச்சேரிப் பெண்டுகளாகச் சோழ மண்டலத்துத் தளிச் சேரிகளில் நின்றுங் கொண்டு வந்து ஏற்றின தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் நீவந்தமாகப் பங்கு செய்தபடி, பங்கு வழி பங்கு ஒன்றினுல் நிலன் வேலியினுல் ராஜகேஸரியோ டொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் நெல்லு நூற்றுக் கலமாகவும்.

இப்படி பங்கு பெற்ற இவர்களில் செத்தார்க்கும் அனுதே சம் போனுர்க்குந் தலைமாறு இவ்விவர்க்கு அடுத்த முறை கடவார் இக்காணி பெற்றுப் பணி செய்யவும்.

அடுத்த முறை கடவார் தாந்தாம் யோக்யர் அல்லாது விடில் யோக்யராய் இருப்பாரை ஆளிட்டுப் பணி செய் வித்துக் கொள்ளப் பெறவும்.

அடுத்த முறை கடவார் இல்லாது விடில் அவ்வவர் நியா யங்களுக்குத் தக்கவரில் அவ்வவர் நியாயங்களிலாரே யோக்யராய் இருப்பாரை ஆளிட்டு இட்ட அவனே காணி பெறவும்.

ஆக இப்படி உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது.

தளிச்சேரிப் பெண்டுகள் :

தளிச்சேரிப் பெண்டுகள்;

தெற்குத் தளிச்சேரித் தென் சிறகு:

தலை வீடு திருவையாற்று ஒலோக மஹாதேவி ஈச்வரத்து நக்கன் சேரமங்கைக்குப் பங்கு ஒன்றும்;

இரண்டாம் வீடு இத்தளி நக்கன் இரணமுக ராமிக்குப் பங்கு ஒன்றும்;

மூன்றும் வீடு இத்தளி நக்கன் உதாரத்துக்குப் பங்கு

ஒன்றும்;

நாலாம் வீடு இத்தளி நக்கன் பட்டாலிக்குப் பங்கு ஒன்றும்;

அஞ்சாம் வீடு இத்தளி நக்கன் எடுத்த பாதத்துக்குப் பங்கு ஒன்றும்;

ஆறும் வீடு இத்தளி நக்கன் சோழகுலசுந்தரிக்குப் பங்கு ஒன்றும்;

ஏழாம் வீடு இத்தளி நக்கன் ஏகவீரிக்குப் பங்கு ஒன்றும்;

எட்டாம் வீடு நாகபட்டனத்துத் திருக்காரோணத்து நக்கன் ராசகேசரிக்குப் பங்கு ஒன்றும்;

ஒன்பதாம் வீடு இவ்வூர்க் கோயில் தளி நக்கன் தேசிச்சிக்குப் பங்கு ஒன்றும்;

பத்தாம் வீடு இத்தளி நக்கன் பெரிய தேசிச்சிக்குப் பங்கு ஒன்றும்;

பதினொன்றும் வீடு இவ்வூர்த் திருக்காரோணத்து நக்கன் விச்சாதிரிக்குப் பங்கு ஒன்றும்;

பன்னிரண்டாம் வீடு இத்தளி நக்கன் மறைக்காட்டுக்குப் பங்கு ஒன்றும்;

பதின்மூன்றும் வீடு இவ்வூர் நடுவில் தளி நக்கன் அம்மாறிக்குப் பங்கு ஒன்றும்;

பதினாலாம் வீடு ராசகேசரிநல்லூர் நக்கன் திருவையாற்றுக்குப் பங்கு ஒன்றும்;

பதினேஞ்சாம் வீடு ஐந்நாதபுரத்து விக்ரமவிஜய ஈச்வரத்து நக்கன் தில்லை அழகிக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

பதினாறும் வீடு இத்தளி நக்கன் எச்சுமண்டைக்குப் பங்கு ஒன்றும்;

பதினேழாம் வீடு இவ்வூர்ப் பகவதிசேரி நக்கன் பரமிக்குப் பங்கு ஒன்றும்;

பதினெட்டாம் வீடு திருவிடைமருதில் நக்கன் தில்லைக் கரைசுக்குப் பங்கு ஒன்றும்;

பத்தொன்பதாம் வீடு இவ்வூர் நக்கன் அழகிக்குப் பங்கு ஒன்றும்;

இருபதாம் வீடு இவ்வூர் நக்கன் சதுரிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தொன்றாம் வீடு இவ்வூர் நக்கன் மதுரவாசகிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் திரண்டாம் வீடு இவ்வூர் நக்கன் மாதேவடிகளுக்குப் பங்கு ஒன்றும்;

இருபத்து மூன்றாம் வீடு இவ்வூர் நக்கன் ......... மணிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத்து நாலாம் வீடு கோமாக்கம்பீச்வரத்து நக்கன் இரவிகுலமாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தைஞ்சாம் வீடு பழையாற்று முள்ளூர் நக்கன் தளி நக்கன் ஆரூர்க்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தாறாம் வீடு இவ்வூர் வடதளி நக்கன் வீராணிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தேழாம் வீடு இத்தளி நக்கன் தென்னவன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

இருபத் தெட்டாம் வீடு இவ்வூர் அவனிநாராயணபுரத்து நக்கன் திருவையாற்றுக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தொன்பதாம் வீடு பழையாற்று தென்தளி நக்கன் மாதேவடிகளுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பதாம் வீடு அரபுரத்து ஸ்ரீதாழிவிண்ணகர் நக்கன் புகழிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தொன்றும் வீடு இவ்வூர் திகைப்பிராட்டி ஈச்வ ரத்து நக்கன் பாஞ்சாடிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் திரண்டாம் வீடு இத்தளி நக்கன் கரணவிச் சாதிரிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத்து மூன்றும் வீடு தஞ்சாவூர் எரியூர் நாட்டுத் தளி நக்கன் சங்கிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத்து நாலாம் வீடு இத்தளி நக்கன் தரணிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தைஞ்சாம் வீடு இத்தளி நக்கன் செட்டிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தாறும் வீடு இத்தளி நக்கன் அரவத்துக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தேழாம் வீடு இத்தளி நக்கன் நக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தெட்டாம் வீடு திருவாரூர்ப் பெரியதளிச்சேரி நக்கன் சீருடையாளுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தொன்பதாம் வீடு இவ்வூர் பிரம்மீச்வரத்து நக்கன் பரவைக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

நாற்பதாம் வீடு இவ்வூர்ப் பெரியதளிச்சேரி நக்கன் மழலைச் சிலம்புக்கு பங்கு ஒன்றும்;

நாற்பத் தொன்றும் வீடு இவ்வூர்த் திருவரநெறி நக்கன் ஆராஅமுதுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் திரண்டாம் வீடு இவ்வூர் அருமொழி ஈச்வரத்து நக்கன் சீகண்டிக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத்து மூன்றும் வீடு இவ்வூர் உலகீச்வரத்து நக்கன் பராந்தெருமானுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத்து நாலாம் வீடு இவ்வூர்த் திருவரநெறி நக்கன் நாராயணிக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தைஞ்சாம் வீடு இத்தளி நக்கன் அரவத்துக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தாறும் வீடு திருவாரூர் பிரம்மீச்வரத்து நக்கன் சோதிவிளக்குக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தேழாம் வீடு இவ்வூர் உலகீச்வரத்து நக்கன் திகைச் சுடருக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தெட்டாம் வீடு இவ்வூர் பிரம்மீச்வரத்து நக்கன் ஆலிக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தொன்பதாம் வீடு மட்டை தென்தளி நக்கன் சீகண்டிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பதாம் வீடு இவ்வூர் நக்கன் பெற்ற திருவுக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தொன்றும் வீடு தஞ்சாவூர்த் தஞ்சை மாமணிக் கோயில் நக்கன் வீர சோழிக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

ஐம்பத் திரண்டாம் வீடு சீகண்டபுரத்து நக்கன் திருவாலங் காடிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத்து மூன்றும் வீடு பராந்தகபுரத்து நக்கன் பெ ...... ... க்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத்து நாலாம் வீடு இவ்வூர் நக்கன் உத்தமதாணிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தைஞ்சாம் வீடு நியமத்து அரிகுலகேசரி ஈச்வரத்து நக்கன்.........த்துக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தாறும் வீடு இத்தளி நக்கன் வெண்காட்டுக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தேழாம் வீடு இத்தளி நக்கன் கூத்தாடிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தெட்டாம் வீடு இத்தளி நக்கன் சோழசூளாமணிக் குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தொன்பதாம் வீடு இவ்வூர் ஆயிரத்தளி நக்கன் பூங்காவிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபதாம் வீடு இவ்வூர் அரிகுலகேசரீ ஈச்வரத்து நக்கன் நாஞ்சூரிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தொன்றும் வீடு நியமத்து ஆயிரத்தளி நக்கன் தேவிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் திரண்டாம் வீடு அம்பர்த் திருமாகாளத்து நக் கன் நாங்கூரிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத்து மூன்றும் வீடு இத்தளி நக்கன் ராஜராஜிக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

அறுபத்து நாலாம் வீடு இத்தளி நக்கன் அதிமானிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தைஞ்சாம் வீடு இவ்வூர் அவனிநாராயண விண் ணகர் நக்கன் உதையத்துக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தாறும் வீடு இவ்வூர்த் திருமாகாளத்து நக்கன் காமக்கோடிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தேழாம் வீடு இவ்வூர் முதுபகவர்தளி நக்கன் நிச் சலுக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தெட்டாம் வீடு கடம்பூர்த் திருவிளங்கோயில் நக்கன் குப்பைக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தொன்பதாம் வீடு இத்தளி நக்கன் ......... வி .........க்குப் பங்கு ஒன்றும்;

எழுபதாம் வீடு இத்தளிச் சிறியநக்கன் நக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தொன்றும் வீடு இத்தளிப் பெரியநக்கன் நக்கத்துக் குப் பங்கு ஒன்றும்;

எழுபத் திரண்டாம் வீடு இவ்வூர் இட்டாச்சிகச்வரத்து நக்கன் தரணிவராஹிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத்து மூன்றும் வீடு திருமறைக்காட்டு நக்கன் மாதேவிக் குப் பங்கு ஒன்றும்;

எழுபத்து நாலாம் வீடு விடையபுரத்து நக்கன் அம்மாறிக் குப் பங்கு ஒன்று;

எழுபத் தைஞ்சாம் வீடு வேளூர் நக்கன்.........தாப்பகைக் குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

எழுபத் தாறும் வீடு நயதீரபுரத்து நக்கன் திருநீலகண்டிக் குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தேழாம் வீடு வீரபுரத்து நக்கன் மாணுபரணிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தெட்டாம் வீடு பாச்சில் திருமேற்றளி நக்கன் பெற்றதிருவுக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தொன்பதாம் வீடு இவ்வூர் திருவாச்சிராமத்து நக்கன் சோழத்துக்குப் பங்கு ஒன்றும்;

எண்பதாம் வீடு இவ்வூர்த் திருமேற்றளி நக்கன் செங் குளத்துக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தொன்றும் வீடு வீரபுரத்து நக்கன்.........க்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் திரண்டாம் வீடு திருக்கொள்ளம்பூதூர் நக்கன் பொற்கேசிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்து மூன்றும் வீடு இவ்வூர் நக்கன் ஆருயிரத்துக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்து நாலாம் வீடு கற்பக தானிபுரத்து நக்கன் தில்லைக்கூத்திக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தைஞ்சாம் வீடு இவ்வூர் நக்கன் ஆரூர்க்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தாறும் வீடு இவ்வூர் நக்கன் சாமுண்டிக்குப் பங்கு ஒன்றும்'

எண்பத் தேழாம் வீடு தளிச்சாத்தங்குடி நக்கன் அபை யத்துக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

எண்பத் தெட்டாம் வீடு தஞ்சாவூர்ப் பிரமகுட்டத்து நக்கன் திருமாகாளத்துக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தொன்பதாம் வீடு இத்தளி நக்கன் பிச்சிக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூறும் வீடு பல்லவ நாரணபுரத்து நக்கன் திருவடிகளுக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற் றொன்றும் வீடு திருமறைக்காட்டு நக்கன் சாத்தத்துக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற் றிரண்டாம் வீடு இவ்வூர் நக்கன் திருமலைக்குப் பங்கு ஒன்றும்;

இத்தளிச்சேரி வடசிறகு;

தலைவீடு திருவையாற்று ஒலோக மஹாதேவி ஈச்வரத்து நக்கன் விக்கிரமதொங்கிக்குப் பங்கு ஒன்றும்;

இரண்டாம் வீடு இத்தளி நக்கன் புகழிக்குப் பங்கு ஒன்றும்;

மூன்றும் வீடு மிறையில் நக்கன் மாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

நாலாம் வீடு திருவாரூர்ப் பெரிய தளிச்சேரி நக்கன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

அஞ்சாம் வீடு இத்தளி நக்கன் திருமூலட்டானத்துக்குப் பங்கு ஒன்றும்;

ஆறும் வீடு இவ்வூர் பிரம்மீச்வரத்து நக்கன் ஆரூர்க்குப் பங்கு ஒன்றும்;

ஏழாம் வீடு இவ்வூர்ப் பெரியதளிச்சேரி நக்கன் கண்டியூர்க்

குப் பங்கு ஒன்றும்;

எட்டாம் வீடு இவ்வூர் உலகீச்வரத்து நக்கன் ஆச்சத்துக்குப் பங்கு ஒன்றும்;

ஒன்பதாம் வீடு இவ்வூர்த் திருவரநெறி நக்கன் அரவத்துக்குப் பங்கு ஒன்றும்;

பத்தாம் வீடு இத்தளி நக்கன் கரம்பியத்துக்குப் பங்கு ஒன்றும்;

பதினொன்றாம் வீடு இவ்வூர்ப் பெரிய தளிச்சேரி நக்கன் கண்டியூர்க்குப் பங்கு ஒன்றும்;

பன்னிரண்டாம் வீடு இத்தளி நக்கன் வீதிவிடங்கிக்குப் பங்கு ஒன்றும்;

பதின் மூன்றாம் வீடு அம்பர் அவனி நாராயணவிண்ணகர் நக்கன் இன்னிளவஞ்சிக்குப் பங்கு ஒன்றும்;

பதினாலாம் வீடு இத்தளி நக்கன் மழலைச்சிலம்புக்குப் பங்கு ஒன்றும்;

பதினைஞ்சாம் வீடு இவ்வூர்த் திருமாகாளத்து நக்கன் செம்பொன்னுக்குப் பங்கு ஒன்றும்;

பதினாறாம் வீடு திருவையாற்று நக்கன் ......... க்குப் பங்கு ஒன்றும்;

பதினேழாம் வீடு இவ்வூர் நக்கன் ஐயாற்றுக்குப் பங்கு ஒன்றும்;

பதினெட்டாம் வீடு இவ்வூர் நக்கன் திருவெண்ணவலுக்குப் பங்கு ஒன்றும்;

பத்தொன்பதாம் வீடு பாச்சில் திருவாச்சிராமத்து நக்கன்

உமைக்குப் பங்கு ஒன்றும்;

இருபதாம் வீடு பழையாற்றுத் தென்தளி நக்கன் பெற்ற திருவுக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தொன்றும் வீடு கிள்ளிகுடிச் சிறிய நக்கன் சீருடையாளுக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் திரண்டாம் வீடு இவ்வூர் பெரிய நக்கன் சீருடையாளுக்குப் பங்கு ஒன்றும்;

இருபத்து மூன்றும் வீடு தளிச்சாத்தங்குடி நக்கன் ஒலோக மாதாவுக்குப் பங்கு ஒன்றும்;

இருபத்து நாலாம் வீடு ஜநநாதபுரத்துப் பகவதி சேரி நக்கன் திருவுக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தைஞ்சாம் வீடு தஞ்சாவூர்த் தஞ்சை மாமணிக் கோயில் நக்கன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தாறும் வீடு தலையாலங் காட்டு நக்கன் கலிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தேழாம் வீடு அரபுரத்து ஸ்ரீதாழி விண்ணகர் நக்கன் திருப்பூவணத்துக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தெட்டாம் வீடு கற்பக தானிபுரத்து நக்கன் மருத மாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தொன்பதாம் வீடு இவ்வூர் நக்கன் கற்பகமாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

முப்பதாம் வீடு நன்னிலத்துத் திருஅமலீச்வரத்து நக்கன் கயிலாயத்துக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தொன்றும் வீடு நியமத்து ஆயிரத்தளி நக்கன்

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

ஆச்சத்துக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் திரண்டாம் வீடு பாச்சில் திருமேற்றளி நக்கன் பராந்தெருமானுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத்து மூன்றும் வீடு பழையாற்று வடதளி நக்கன் சோழ குலசுந்தரிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத்து நாலாம் வீடு பழுவூர்ப் பகைவிடை ஈச்வரத்து நக்கன் ஆட வல்லாளுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தைஞ்சாம் வீடு கடம்பூர் நந்தி ஈச்வரத்து நக்கன் இளங்கோயிலுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தாறும் வீடு மாதேவி ஈச்வரத்து நக்கன் அறி வாட்டிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தேழாம் வீடு தஞ்சாவூர் எரியூர் நாட்டுத்தளி நக்கன் மாதேவடிகளுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தெட்டாம் வீடு ஜநநாதபுரத்து விக்ரம விஜய ஈச்வரத்து நக்கன் பொன்னுலமந்தாளுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தொன்பதாம் வீடு பாம்புணி ஸ்ரீபூதி விண்ணகர் நக்கன் காருயிலுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பதாம் வீடு.........நக்கன் திருவையாற்றுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தொன்றும் வீடு ஆயிரத்தளி நக்கன் ஐயாற்றுக் குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் திரண்டாம் வீடு நிறைமதி ஈச்வரத்து நக்கன் பெற்றமைக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத்து மூன்றும் வீடு திருமறைக்காட்டு நக்கன் மாறிக்

குப் பங்கு ஒன்றும்;

நாற்பத்து நாலாம் வீடு ஜநநாதபுரத்து விக்ரம விஜய ஈச்வரத்து நக்கன் திருவுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தைஞ்சாம் வீடு இத்தளி நக்கன் நந்தி எரு மானுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தாறும் வீடு பாச்சில் திருவமலீச்வரத்து நக்கன் தில்லைக் கரைசுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தேழாம் வீடு இவ்வூர்த் திருவாச்சிராமத்து நக்கன் உமைக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தெட்டாம் வீடு மாதேவி ஈச்வரத்து நக்கன் சிறியாளுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தொன்பதாம் வீடு திருவிடைமருதில் நக்கன் ஆச் சத்துக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பதாம் வீடு இவ்வூர் நக்கன் காடுகாளுக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தொன்றும் வீடு இவ்வூர் நக்கன் பஞ்சவன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் திரண்டாம் வீடு இவ்வூர் நக்கன் சீகண்டிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத்து மூன்றும் வீடு இவ்வூர் நக்கன் கல்லறைக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத்து நாலாம் வீடு அரபுரத்து ஸ்ரீதாழி விண்ணகர் நக்கன் சித்திரவல்லிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தைஞ்சாம் வீடு இவ்வூர் நிகளங்கி ஈச்வரத்து

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

நக்கன் நல்லூர்க்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தாறும் வீடு இத்தளி நக்கன் பெருவழிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தேழாம் வீடு கடம்பூர்த் திருவிளங்கோயில் நக்கன் சேமானிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தெட்டாம் வீடு இத்தளி நக்கன் கொனடிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தொன்பதாம் வீடு திருவாரூர்த் திருவரநெறி ஈச்வரத்து நக்கன் நம்புகரிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபதாம் வீடு இவ்வூர்ப் பெரிய தளிச்சேரி நக்கன் திருமூலட்டானத்துக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தொன்றும் வீடு இவ்வூர் பிரம்மீச்வரத்து நக்கன் சோமநாதிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் திரண்டாம் வீடு இவ்வூர்ப் பெரிய தளிச்சேரி நக்கன் இராமிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத்து மூன்றும் வீடு இவ்வூர் பிரம்மீச்வரத்து நக்கன் எச்சுமண்டைக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத்து நாலாம் வீடு இவ்வூர்த் திருமண்டளி நக்கன் சுந்தரசோழிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தைஞ்சாம் வீடு இவ்வூர் உலகீச்வரத்து நக்கன் பந்தலுக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தாறும் வீடு அம்பர் அவனிநாராயண விண்ணகர் நக்கன் காமிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தேழாம் வீடு இத்தளி நக்கன் ஆசாரபஞ்சரிக்குப்

பங்கு ஒன்றும்;

அறுபத் தெட்டாம் வீடு இவ்வூர் முதுபகவர்தளி நக்கன் ஏகவீரிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தொன்பதாம் வீடு இத்தளி நக்கன்.........க்குப் பங்கு ஒன்றும்;

எழுபதாம் வீடு இத்தளி நக்கன் சங்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தொன்றும் வீடு திருவையாற்று நக்கன் கண்டத் துக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் திரண்டாம் வீடு இவ்வூர் நக்கன் பாவைக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத்து மூன்றும் வீடு பழுவூர் அவநியமதற்ப்புரத்து நக்கன் துட்டிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத்து நாலாம் வீடு இவ்வூர்ப் பகைவிடை ஈச்வரத்து நக்கன் அரிகுலகேசரிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தைஞ்சாம் வீடு.........ந்தெளிப் புகழ் மதி ஈச் வரத்து நக்கன் குலமாணுக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தாறும் வீடு இத்தளி நக்கன் கருமாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தேழாம் வீடு புறையாச் சேரி நக்கன் நகரத் தாளுக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தெட்டாம் வீடு நியமத்து ஆயிரத்தளி நக்கன் சந்திரத்துக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தொன்பதாம் வீடு இவ்வூர் அரிகுலகேஸரி ஈச்வ

ரத்து நக்கன் வடவாயிலுக்குப் பங்கு ஒன்றும்;

எண்பதாம் வீடு இவ்வூர் நிருபகேசரி ஈச்வரத்து நக்கன் பராந்தெருமானுக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தொன்றும் வீடு இவ்வூர்ச் சந்திரமல்லீ ஈச்வரத்து நக்கன் திருவேங்கடத்துக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் திரண்டாம் வீடு இவ்வூர் அரிகுலகேஸரி ஈச்வரத்து நக்கன் சற்பதேவிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்து மூன்றும் வீடு நன்னிலத்து திருமேற்றளி நக்கன் ஆமாத்தூர்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்து நாலாம் வீடு காவிரிப்பூம்பட்டனத்து நக்கன் ஊதாரிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தைஞ்சாம் வீடு பழையாற்று அரையெருமான் தளி நக்கன் சீலசூளாமணிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தாறும் வீடு இவ்வூர் அவனி நாராயணபுரத்து நக்கன் விக்கிரமாதித்திக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தேழாம் வீடு இவ்வூர் நக்கன் தில்லை நிறைந் தாளுக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தெட்டாம் வீடு இவ்வூர் வடதளி நக்கன் நயன வல்லிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தொன்பதாம் வீடு இத்தளி நக்கன் பெற்ற திருவுக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூறும் வீடு ஆயிரத்தளி மல்லீச்வரத்து நக்கன் மதனவல்லிக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற் றொன்றும் வீடு கருப்பூர் நக்கன் எடுத்த

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

பாதத்துக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற்றிரண்டாம் வீடு வீரபுரத்து நக்கன் மீனவன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

வடக்கில் தளிச்சேரித் தென்சிறகு;

தலைவீடு திருவாரூர் பிரம்மீச்வரத்து நக்கன் மூவர்கண்டிக்குப் பங்கு ஒன்றும்;

இரண்டாம் வீடு நாகபட்டனத்துத் திருக்காரோணத்து நக்கன் சீருடையாளுக்குப் பங்கு ஒன்றும்;

மூன்றும் வீடு அரபுரத்து நிகளங்கி ஈச்வரத்து நக்கன் திருவுக்குப் பங்கு ஒன்றும்;

நாலாம் வீடு கொட்டூர்க்குணவதி ஈச்வரத்து நக்கன் பெற்ற திருவுக்குப் பங்கு ஒன்றும்;

ஐஞ்சாம் வீடு பாம்புணி ஸ்ரீபூதி விண்ணகர் நக்கன் பாலுக்குப் பங்கு ஒன்றும்;

ஆறும் வீடு கற்பகதானிபுரத்து நக்கன் கற்பகதானிக்குப் பங்கு ஒன்றும்;

ஏழாம் வீடு திருவாரூர்ப் பெரியதளிச்சேரி நக்கன் பந்தலுக்குப் பங்கு ஒன்றும்;

எட்டாம் வீடு இவ்வூர் நக்கன்.........க்குப் பங்கு ஒன்றும்;

ஒன்பதாம் வீடு தளிச்சாத்தங்குடி நக்கன் அம்பலத்துக்குப் பங்கு ஒன்றும்;

பத்தாம் வீடு திருவாரூர்ப் பெரிய தளிச்சேரி நக்கன் விரையாச்சிலைக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

பதினொன்றாம் வீடு ஆயிரத்தளி நக்கன் அனவரதசுந்தரிக்குப் பங்கு ஒன்றும்;

பன்னிரண்டாம் வீடு இவ்வூர் நக்கன் ராஜசூளாமணிக்குப் பங்கு ஒன்றும்;

பதின் மூன்றாம் வீடு நயதீரபுரத்து நக்கன் அரநெறிக்குப் பங்கு ஒன்றும்;

பதி நாலாம் வீடு ஆயிரத்தளி நக்கன் பட்டத்துக்குப் பங்கு ஒன்றும்;

பதினைஞ்ஞாம் வீடு இவ்வூர் நக்கன் இளங்காவுக்குப் பங்கு ஒன்றும்;

பதினாறாம் வீடு திருவாரூர் அருமொழி ஈச்வரத்து நக்கன் மோடிக்குப் பங்கு ஒன்றும்;

பதினேழாம் வீடு இவ்வூர் நக்கன் கருவூர்க்குப் பங்கு ஒன்றும்;

பதினெட்டாம் வீடு பராந்தக ஈச்வரத்து நக்கன் திருவானைக்காவிக்குப் பங்கு ஒன்றும்;

பத்தொன்பதாம் வீடு திருவையாற்று நக்கன் அரவத்துக்குப் பங்கு ஒன்றும்;

இருபதாம் வீடு கோட்டூர்ப் பஞ்சவன் மாதேவி ஈச்வரத்து நக்கன் சுந்தரிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தொன்றாம் வீடு இத்தளி நக்கன் நம்பாண்டிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் திரண்டாம் வீடு இத்தளி நக்கன் உமைக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

இருபத்து மூன்றும் வீடு இத்தளி நக்கன் திட்டைச்சேரிக் குப் பங்கு ஒன்றும்;

இருபத்து நாலாம் வீடு இத்தளி நக்கன் உமைக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தைஞ்சாம் வீடு திருவாரூர்த் திருவரநெறி ஈச்வ ரத்து நக்கன் சித்திரவல்லிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தாறும் வீடு ஆயிரத்தளி நக்கன் பிச்சிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தேழாம் வீடு விடையபுரத்துப் புகழீச்வரத்து நக்கன் பெற்ற திருவுக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தெட்டாம் வீடு திருவாரூர்த் திருமண்டளி நக்கன் சீகண்டிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தொன்பதாம் வீடு இத்தளி நக்கன் குந்தவைக்குப் பங்கு ஒன்றும்;

முப்பதாம் வீடு ஆயிரத்தளி மல்லீச்வரத்து நக்கன் பாக் கரிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தொன்றும் வீடு திருவாரூர் பிரம்மீச்வரத்து நக் கன் பொன்னுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் திரண்டாம் வீடு ஜநநாதபுரத்து விக்ரமவிஜய ஈச்வரத்து நக்கன் பொற் குமரனுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத்து மூன்றும் வீடு பராந்தக ஈச்வரத்து நக்கன் சோமகோனுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத்து நாலாம் வீடு திருவாரூர் அருமொழி ஈச்வரத்து நக்கன் ஏகவீரிக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

முப்பத் தைஞ்சாம் வீடு ஆயிரத்தளி நக்கன் தேவிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தாறும் வீடு இவ்வூர் நக்கன் திருவடிகளுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தேழாம் வீடு இவ்வூர்க்கரிய நக்கன் திருவடிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தெட்டாம் வீடு திருவேதிகுடி நக்கன் கண்டராச்சிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தொன்பதாம் வீடு இவ்வூர் நக்கன் குலமாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பதாம் வீடு ஆற்றுத்தளி நக்கன்.........க்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தொன்றும் வீடு இவ்வூர் நக்கன் வெம்பிக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் திரண்டாம் வீடு நிறைமதி ஈச்வரத்து நக்கன் பொற்கேசிக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத்து மூன்றும் வீடு திருச்சோற்றுத்துறை நக்கன் ஒற்றியூர்க்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத்து நாலாம் வீடு திருமறைக்காட்டு நக்கன் நி.........க்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தைஞ்சாம் வீடு நன்னிலத்து திருமேற்றளி நக்கன் சங்காணிக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தாறும் வீடு இவ்வூர்த் திருஅமலீச்வரத்து நக்கன் ஏறிக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தேழாம் வீடு உத்தமதானிபுரத்து நக்கன் பூ வணத்துக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தெட்டாம் வீடு நியமத்து ஆயிரத்தளி நக்கன் அடிகளுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தொன்பதாம் வீடு பழையாற்று அரையெருமான் தளி நக்கன் நிறணி பவழக்குன்றுக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பதாம் வீடு இத்தளி நக்கன் அருமொழிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தொன்றும் வீடு இவ்வூர் தென்தளி நக்கன் ஆச் சத்துக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் திரண்டாம் வீடு இத்தளிச் சிறிய நக்கன் ஆச் சத்துக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத்து மூன்றும் வீடு இவ்வூர் வடதளி நக்கன் அமுதத்துக் குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத்து நாலாம் வீடு இத்தளி நக்கன் சூளாமணிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தைஞ்சாம் வீடு இத்தளி நக்கன் ஏகவீரிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தாறும் வீடு இவ்வூர் முள்ளூர் நக்கன் தளி நக்கன் வீராணிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தேழாம் வீடு இத்தளி நக்கன் ஒருப்பனைக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தெட்டாம் வீடு கொற்ற மங்கலத்து நக்கன் கன்னரதேவிக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

ஐம்பத் தொன்பதாம் வீடு திருத்தெங்கூர் நக்கன் கன வதிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபதாம் வீடு செல்லூர் நக்கன் எட்டிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தொன்றும் வீடு திருவையாற்று நக்கன் அம்பலக் கூத்திக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் திரண்டாம் வீடு நாகபட்டனத்துச் சேனுமுகத்து நக்கன் அனந்தத்துக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத்து மூன்றும் வீடு தஞ்சாவூர்த் தஞ்சைமா மணிக் கோயில் நக்கன் வழுவாநிலைக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத்து நாலாம் வீடு ஒலோக மஹாதேவி ஈச்வரத்து நக்கன் சீதேவிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தைஞ்சாம் வீடு பராந்தகபுரத்து நக்கன் எழு வணைக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தாறும் வீடு திருவையாற்று நக்கன் பொன்னுக் குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தேழாம் வீடு பழுவூர்ப் பகை விடை ஈச்வரத்து நக்கன் பழுவூர்க்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தெட்டாம் வீடு கடம்பூர் இட்டாச்சி ஈச்வரத்து நக்கன் சிவதேவிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தொன்பதாம் வீடு திருவாரூர்ப் பெரிய தளிச் சேரி நக்கன் சீகுருகூருக்குப் பங்கு ஒன்றும்;

எழுபதாம் வீடு நன்னிலத்துத் திருமேற்றளி நக்கன் சங் காணிக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

எழுபத் தொன்றும் வீடு திருவிடை மருதில் நக்கன் செம்பி யன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் திரண்டாம் வீடு தஞ்சாவூர் ஜயபீமதளி நக்கன் காமமோகிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத்து மூன்றும் வீடு திருவாரூர்ப் பெரிய தளிச்சேரி நக்கன் பொன்னொலிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத்து நாலாம் வீடு நியமித்து நிருபகேசரி ஈச்வரத்து நக்கன் வீர சிகாமணிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தைஞ்சாம் வீடு பாம்புணி ஸ்ரீபூதிவிண்ணகர் நக்கன் ஆரூர்க்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தாறும் வீடு தலையாலங்காட்டு நக்கன் வீரபோகிக் குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தேழாம் வீடு இவ்வூர் நக்கன் பொன்னம்பலத்துக் குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தெட்டாம் வீடு பழையாற்று வடதளி நக்கன் ஒருப்பனைக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தொன்பதாம் வீடு கடம்பூர்த் திருவிளங்கோயில் நக்கன் உமைக்குப் பங்கு ஒன்றும்;

எண்பதாம் வீடு காவிரிப்பூம்பட்டனத்து நக்கன் அரங் கத்துக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தொன்றும் வீடு அம்பர் முதுபகவர்தளி நக்கன் பெற்ற திருவுக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் திரண்டாம் வீடு திருவிடை மருதில் நக்கன் ராஜ ராஜிக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

எண்பத்து மூன்றும் வீடு பாச்சில் திருவமலீச்வரத்து நக்கன் மூஞ்சிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்து நாலாம் வீடு திருவாரூர்ப் பெரியதளிச் சேரி நக்கன் பொற்காளிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தைஞ்சாம் வீடு இவ்வூர் உலகீச்வரத்து நக்கன் திகைமாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தாறும் வீடு அம்பர் முதுபகவர் தளி நக்கன் செய்ய பாதத்துக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தேழாம் வீடு விராலூர் நக்கன் ஐயாளுக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தெட்டாம் வீடு நாகபட்டனத்து நடுவில் தளிச்சேரி நக்கன் நம்புகமரிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தொன்பதாம் வீடு கோமாக்கம்பீச்வரத்து நக்கன் அரையத்துக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூறும் வீடு திருவாரூர்த் திருமண்டளி நக்கன் நித்தங்கைக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற் றொன்றும் வீடு பராந்தக ஈச்வரத்து நக்கன் சிறிய உமைக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற் றிரண்டாம் வீடு தஞ்சாவூர் ஐய்பீமதளி நக்கன் காமாமோகிக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற்று மூன்றும் வீடு இவ்வூர்த் தஞ்சை மாமணிக் கோயில் நக்கன் திருவழகுக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற்று நாலாம் வீடு திருக்கொள்ளம்பூதூர் நக்கன் செய்யசோழத்துக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

தொண்ணூற் றைஞ்சாம் வீடு கடம்பூர் நக்கன் திருக்குரவிக்குப் பங்கு ஒன்றும்;

வடக்கில் தளிச்சேரி வடசிறகு;

தலைவீடு நாகபட்டனத்துத் திருக்காரோணத்து நக்கன் இராமிக்குப் பங்கு ஒன்றும்;

இரண்டாம் வீடு இத்தளி நக்கன் கற்றளிக்குப் பங்கு ஒன்றும்;

மூன்றாம் வீடு இத்தளி நக்கன் கண்ணத்துக்குப் பங்கு ஒன்றும்;

நாலாம் வீடு கொட்டூர்ப் பஞ்சவன் மஹாதேவி ஈச்வரத்து நக்கன் உத்தமசுந்திரிக்குப் பங்கு ஒன்றும்;

ஐஞ்சாம் வீடு அந்தளி அவனிகேசரி ஈச்வரத்து நக்கன் குஞ்சரமல்லிக்குப் பங்கு ஒன்றும்;

ஆறாம் வீடு கற்பகதானிபுரத்து நக்கன் செய்யபாதத்துக்குப் பங்கு ஒன்றும்;

ஏழாம் வீடு திருவாரூர்ப் பெரிய தளிச்சேரி நக்கன் சிறிய அரவத்துக்குப் பங்கு ஒன்றும்;

எட்டாம் வீடு பழையாற்று வடதளி நக்கன் சீலசூளாமணிக்குப் பங்கு ஒன்றும்;

ஒன்பதாம் வீடு வேளூர் நக்கன் அனந்திக்குப் பங்கு ஒன்றும்;

பத்தாம் வீடு பாம்புணித்திருப்பாதாளி ஈச்வரத்து நக்கன் பொற்காளிக்குப் பங்கு ஒன்றும்;

பதினொன்றாம் வீடு உத்தமதானிபுரத்து நக்கன் ஆரா

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

அமுதுக்குப் பங்கு ஒன்றும்;

பன்னிரண்டாம் வீடு ஆயிரத்தளி நக்கன் வெண்காட்டுக்குப் பங்கு ஒன்றும்;

பதின் மூன்றும் வீடு இவ்வூர் நக்கன் பொற் கோயில் தில்லை அழகிக்குப் பங்கு ஒன்றும்;

பதினலாம் வீடு உத்தமதானிபுரத்து நக்கன் ஒக்கூரிக்குப் பங்கு ஒன்றும்;

பதினஞ்ஞாம் வீடு ஆயிரத்தளி நக்கன் அசங்கிக்குப் பங்கு ஒன்றும்;

பதிநாறும் வீடு திருவாரூர் அருமொழி ஈச்வரத்து நக்கன் புகலோக மாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

பதினேழாம் வீடு இவ்வூர்ப் பெரிய தளிச்சேரி நக்கன் தேவடிக்குப் பங்கு ஒன்றும்;

பதினெட்டாம் வீடு கொட்டூர்க் குணவதி ஈச்வரத்து நக்கன் கூத்தாடிக்குப் பங்கு ஒன்றும்;

பத்தொன்பதாம் வீடு மஹாதேவி ஈச்வரத்து நக்கன்...... ...ல்லிக்குப் பங்கு ஒன்றும்;

இருபதாம் வீடு தளிச்சாத்தங்குடி நக்கன் பரக்கரிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தொன்றும் வீடு கொட்டூர்ப் பஞ்சவன் மஹா தேவி ஈச்வரத்து நக்கன் எரணதேவிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் திரண்டாம் வீடு விடையபுரத்துத் திருப்புகழி ஈச்வரத்து நக்கன் நம்பிநங்கைக்குப் பங்கு ஒன்றும்;

இருபத்து மூன்றும் வீடு கொட்டூர்ப் பஞ்சவன் மஹா

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

தேவி ஈச்வரத்து நக்கன் சீபட்டாலிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத்து நாலாம் வீடு இத்தளி நக்கன் குஞ்சரமல்லிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தைஞ்சாம் வீடு விடையபுரத்துப் புகழீச்வரத்து நக்கன் காருயிலுக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தாறும் வீடு திருவாரூர்ப் பெரியதளிச் சேரி நக்கன் காமுத்திரிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தேழாம் வீடு நயதீரபுரத்து நக்கன் கரியஅரவத்துக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் வீடு தெட்டாம் அம்பர் அவனி நாராயண விண்ணகர் நக்கன் நம்பியமைக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தொன்பதாம் வீடு திருவாரூர்த் திருமண்டளி ஈச்வரத்து நக்கன் கருவூர்க்குப் பங்கு ஒன்றும்;

முப்பதாம் வீடு அம்பர்த் திருமாகாளத்து நக்கன் செம்பொன்னுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தொன்றும் வீடு ஆயிரத்தளி மல்லீச்வரத்து நக்கன் பொற்செய்யாளுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் திரண்டாம் வீடு ஜநநாதபுரத்து விக்ரம விஜய ஈச்வரத்து நக்கன் பட்ட திருவுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத்து மூன்றும் வீடு திருவிடை மருதில் நக்கன் வெண்காட்டுக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத்து நாலாம் வீடு அரபுரத்து நிகளங்கி ஈச்வரத்து நக்கன் முருங்கைக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தைஞ்சாம் வீடு ஆயிரத்தளி நக்கன் ஒற்றியூர்க்

குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தாறும் வீடு இவ்வூர் நக்கன் ஆடல் அழகிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தேழாம் வீடு இவ்வூர் நக்கன் குமாரடிக்குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தெட்டாம் வீடு திருவேதிகுடி நக்கன் நங்காளிக் குப் பங்கு ஒன்றும்;

முப்பத் தொன்பதாம் வீடு பராந்தக ஈச்வரத்து நக்கன் திரிபுவன மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பதாம் வீடு ஆற்றுத்தளி நக்கன் இராமிக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தொன்றும் வீடு நிறைமதி ஈச்வரத்து நக்கன் சீருடைக் கழலுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் திரண்டாம் வீடு திருச்சோற்றுத்துறை நக்கன் மறைக்காட்டுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத்து மூன்றும் வீடு திருக்கொள்ளம்பூதூர் நக்கன் உமைக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத்து நாலாம் வீடு நன்னிலத்துத் திருவமலீச்வரத்து நக்கன் இலவத்துக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தைஞ்சாம் வீடு இவ்வூர்த் திருமேற்றளி நக்கன் ஒற்றியூர்க்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தாறும் வீடு திருவமலீச்வரத்து நக்கன் சோழ மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தேழாம் வீடு நியமத்து ஆயிரத்தளி நக்கன் ஆட

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

வல்லாளுக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தெட்டாம் வீடு இவ்வூர் சந்திரமல்லி ஈச்வரத்து நக்கன் நம்பியமைக்குப் பங்கு ஒன்றும்;

நாற்பத் தொன்பதாம் வீடு பழையாற்று அரையெருமாந் தளி நக்கன் அமுதத்துக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பதாம் வீடு அம்பர் முதுபகவர் தளி நக்கன் சீதேவிக் குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தொன்றும் வீடு பழையாற்றுத் தென்தளி நக்கன் பிட்டிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் திரண்டாம் வீடு இவ்வூர் வடதளி நக்கன் இராமிக் குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத்து மூன்றும் வீடு இத்தளி நக்கன் சிங்கடிக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத்து நாலாம் வீடு இத்தளி நக்கன் சீலசூளாமணிக் குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தைஞ்சாம் வீடு இவ்வூர்ச் சங்கீச்வரத்து நக்கன் கோயிலுக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தாறும் வீடு இவ்வூர் முள்ளூர் நக்கன் தளி நக்கன் மலையமானுக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தேழாம் வீடு அவனி நாராயணபுரத்து நக்கன் ஐயாற்றுக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தெட்டாம் வீடு திருநெத்தாநத்து நக்கன் நக் கத்துக்குப் பங்கு ஒன்றும்;

ஐம்பத் தொன்பதாம் வீடு திருத்தெங்கூர் நக்கன் பெற்ற

மைக்குப் பங்கு ஒன்றும்;

அறுபதாம் வீடு நன்னிலத்துத் திருவமலீச்வரத்து நக்கன் பழிப்பிலிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தொன்றும் வீடு திருவாரூர் உலகீச்வரத்து நக்கன் பட்டாலிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் திரண்டாம் வீடு தஞ்சாவூர் எரியூர் நாட்டுத்தளி நக்கன் மன்றமுடையாளுக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத்து மூன்றும் வீடு வேளூர் நக்கன் குப்பைக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத்து நாலாம் வீடு பழுவூர்ப் பகை விடை ஈச்வரத்து நக்கனுதித்திக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தைஞ்சாம் வீடு நியமத்து அரிகுலகேஸரி ஈச்வரத்து நக்கன் நக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தாறும் வீடு திருவாரூர்ப் பெரியதளிச்சேரி நக்கன் வில்லவன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தேழாம் வீடு அம்பர் முதுபகவர்தளி நக்கன் எடுத்த பாதத்துக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தெட்டாம் வீடு கடம்பூர் நந்தீச்வரத்து பூமிக்குப் பங்கு ஒன்றும்;

அறுபத் தொன்பதாம் வீடு திருவையாற்று நக்கன் திருவடிகளுக்குப் பங்கு ஒன்றும்;

எழுபதாம் வீடு தஞ்சாவூர் பிரம்ம குட்டத்து நக்கன் தூதுவிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தொன்றும் வீடு கஞ்சாறநகரத்து நக்கன் மழலைச்

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

சிலம்புக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் திரண்டாம் வீடு பழுவூர் அவநியமதற்பபுரத்து நக்கன் பெற்ற திருவுக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத்து மூன்றும் வீடு ஒலோக மஹாதேவி ஈச்வரத்து நக்கன் புகலோக மாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத்து நாலாம் வீடு பாம்புணி ஸ்ரீபூதிவிண்ணகர் நக்கன் சுந்தரிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தைஞ்சாம் வீடு நாகப்பட்டனத்துத் திருக்காரோணத்து நக்கன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தாறும் வீடு கிள்ளிகுடி நக்கன் பொன்னம்பலத்துக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தேழாம் வீடு திருவிடைமருதில் நக்கன் மூ......... .........க்கை.........க்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தெட்டாம் வீடு திருவாரூர்ப் பெரியதளிச்சேரி நக்கன் வெம்பிக்குப் பங்கு ஒன்றும்;

எழுபத் தொன்பதாம் வீடு திருவிடைமருதில் நக்கன் புகலோக மாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

எண்பதாம் வீடு இவ்வூர் நக்கன் காரைக்காலுக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் தொன்றும் வீடு நியமத்து அரிகுலகேசரி ஈச்வரத்து நக்கன் வீரசோழிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத் திரண்டாம் வீடு காவிரிப்பூம்பட்டனத்து நக்கன் மூத்தாளுக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்து மூன்றும் வீடு நியமத்து அரிகுலகேஸரி ஈச்வ

ரத்து நக்கன் சந்திரசேகரிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்து நாலாம் வீடு இவ்வூர் ஆயிரத்தளி நக்கன் பூமிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்தைஞ்சாம் வீடு கிள்ளிகுடி நக்கன் சுந்தரிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்தாறும் வீடு மிறையில் நக்கன் ஐயாற்றுக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்தேழாம் வீடு கடம்பூர் நந்தீச்வரத்து நக்கன் ஐயாற்றுக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்தெட்டாம் வீடு திருவையாற்று நக்கன் அருமொழிக்குப் பங்கு ஒன்றும்;

எண்பத்தொன்பதாம் வீடு கோமாக்கம்பீச்வரத்து நக்கன் சண்டைக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூறும் வீடு தஞ்சாவூர் பிரம்ம குட்டத்து நக்கன் நல்லூர்க்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற்றொன்றும் வீடு பராந்தக ஈச்வரத்து நக்கன் பராந்தெருமானுக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற்றிரண்டாம் வீடு திருப்பழனத்து நக்கன் கணவதிக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற்று மூன்றும் வீடு பாம்புணித்திருப்பாதாளி ஈச்வரத்து நக்கன் குடிதாங்கிக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற்று நாலாம் வீடு திருக்கொள்ளம்பூதூர் நக்கன் சோழதேவிக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற்றைஞ்சாம் வீடு கடம்பூர் இட்டாச்சி ஈச்வ

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

ரத்து நக்கன் தூங்கானைக்குப் பங்கு ஒன்றும்;

தொண்ணூற்றுரும் வீடு தஞ்சாவூர் பிரம்ம குட்டத்து நக்கன் பெற்றமைக்குப் பங்கு ஒன்றும்;

................. தலைவிடு .........நக்கன்............க்குப் பங்கு ஒன்றும்;

இரண்டாம் வீடு இவ்வூர் நக்கன் நித்தசுந்தரிக்குப் பங்கு ஒன்றும்;

மூன்றும் வீடு திருநெத்தானத்து நக்கன் பட்டாலிக்குப் பங்கு ஒன்றும்;

நாலாம் வீடு அரபுரத்து நக்கன் காரோணத்துக்குப் பங்கு ஒன்றும்;

அஞ்சாம் வீடு ஆயிரத்தளி நக்கன் அத்தனப் பொன்னுக்குப் பங்கு ஒன்றும்;

ஆரும் வீடு அந்தளி அவனிகேசரி ஈச்வரத்து நக்கன் மழலைச் சிலம்புக்குப் பங்கு ஒன்றும்;

ஏழாம் வீடு இவ்வூர் இத்தளி நக்கன் திகைமாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

எட்டாம் வீடு இத்தளி நக்கன் குலமாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

ஒன்பதாம் வீடு மிறையில் நக்கன் தாயத்துக்குப் பங்கு ஒன்றும்;

பத்தாம் வீடு இவ்வூர் நக்கன் அரங்கத்துக்குப் பங்கு ஒன்றும்;

பதினொன்றும் வீடு புறயாச்சேரி நக்கன் செய்யவாய்மணிக்

குப் பங்கு ஒன்றும்;

பன்னிரண்டாம் வீடு மாதேவி ஈச்வரத்து நக்கன் பொன் மலைக்குப் பங்கு ஒன்றும்;

பதின் மூன்றும் வீடு திருவேதிகுடி நக்கன் பொன்னம் பலத்துக்குப் பங்கு ஒன்றும்;

பதினாலாம் வீடு தலையாலங்காட்டு நக்கன் நம்பாண்டிக் குப் பங்கு ஒன்றும்;

பதினைஞ்சாம் வீடு தங்கத்தார்தளி நக்கன் மண்டைக்குப் பங்கு ஒன்றும்;

பதினாறும் வீடு மண்ணிநகரத்து நக்கன் நீலத்துக்குப் பங்கு ஒன்றும்;

பதினேழாம் வீடு வயலூர் நக்கன் பட்டாலிக்குப் பங்கு ஒன்றும்;

பதினெட்டாம் வீடு இவ்வூர் நக்கன் சுணங்கைக்குப் பங்கு ஒன்றும்;

பத்தொன்பதாம் வீடு இவ்வூர் நக்கன் உமைக்குப் பங்கு ஒன்றும்;

இருபதாம் வீடு பழுவூர் அவனிகேஸரி ஈச்வரத்து நக்கன் பொற்கேசிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் தொன்றும் வீடு இவ்வூர்ப் பகைவிடை ஈச்வரத்து நக்கன் வானவன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

இருபத் திரண்டாம் வீடு இவ்வூர் நக்கன் அரியாளுக்குப் பங்கு ஒன்றும்;

இருபத்து மூன்றும் வீடு பந்தனநல்லூர் நக்கன் அறிஞ்சிக்

தளிச்சேரிப் பெண்டுகள் (தொடர்ச்சி)

குப் பங்கு ஒன்றும்;

இருபத்து நாலாம் வீடு திருவையாற்று நக்கன் பூவணத்துக் குப் பங்கு ஒன்றும்;

இருபத் தைஞ்சாம் வீடு கொட்டூர்க் குணவதி ஈச்வரத்து நக்கன் பஞ்சவன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்;

நிவந்தக்காறர்:

நட்டவஞ்செய்ய நட்டவம் ஒன்றுக்கு அரையன் சுந்தர சோழனை மும்மடி சோழநிருத்தமாராயனுக்குப் பங்கு இரண்டும்;

மேற்படி ஒன்றுக்குக் குமரன் வடவாயிலான மும்மடி சோழ நிருத்தப் பேரையனுக்குப் பங்கு இரண்டும்;

மேற்படி ஒன்றுக்கு விக்கி பட்டாலகனுக்குப் பங்கு இரண் டும்;

மேற்படி ஒன்றுக்கு அரையர் அபிமானதொங்கனை அரு மொழி நிருத்தப் பேரயனுக்குப் பங்கு இரண்டும்;

மேற்படி ஒன்றுக்கு மல்லன் இரட்டையனுக்கும் சித்திரன் கேசுவனுக்கும் பங்கு இரண்டும்;

மேற்படி ஒன்றுக்கு அரையன் மணஞ்சேரியான வகையிலி நிருத்தப் பேரையனுக்குப் பங்கு இரண்டும்;

ெ..............டபாட்டு ஒன்றுக்குக் குராவன் வீரசோழனை பஞ்சவன் மாதேவி நாடகமய்யனுக்குப் பங்கு ஒன்ற ரையும்;

மேற்படி ஒன்றுக்கு மறைக்காட்டுக் கணவதியான திரு வெள்ளறைச் சாக்கைக்குப் பங்கு ஒன்றரையும்;

நிவந்தக்காறர் (தொடர்ச்சி)

மேற்படி ஒன்றுக்கு ஒற்றியூரன் சிங்கனுக்குப் பங்கு ஒன்றரையும்;

மேற்படி ஒன்றுக்கு ஒற்றியூரன் இளங்காவனுக்குப் பங்கு ஒன்றரையும்;

மே............வியம் ஒன்றுக்கு அரையன் ராஜாஸ்ரீயனை நித்தவிநோத வாத்யமாராயனுக்குப் பங்கு இரண்டும்;

மேற்படி ஒன்றுக்கு அரையன் நின்ற நாராயணனுக்குப் பங்கு இரண்டும்;

கானபாடி மூவர்க்கு முண்டதாரி அணுக்கனுக்குப் பங்கு நாலரையும்;

மேற்படி இரண்டுக்கு ஆச்சன் கீர்த்தி பூஷணனன் அறிஞ்சிகை காமரப் பேரையனுக்குப் பங்கு மூன்றும்;

வங்கியம் ஒன்றுக்கு நிகரிலிசோழத் தெரிந்த உடநிலைக் குதிரைச் சேவகரில் நின்றும் புகுந்த தஞ்சை கணவதிக்குப் பங்கு ஒன்றரையும்;

மேற்படி ஒன்றுக்குச் சிறுதனத்து வடுகக்காலவரில் செருவத்தவிரையனுக்குப் பங்கு ஒன்றரையும்;

மேற்படி ஒன்றுக்கு ராஜேந்திரதசரையனுக்குப் பங்கு ஒன்றரையும்;

பாடவியம் ஒன்றுக்குக் கூத்தன் பஹ............விடங்கனுக்குப் பங்கு இரண்டும்;

மேற்படி ஒன்றுக்கு அரையன் வாத்யமாராயனுக்குப் பங்கு இரண்டும்;

மேற்படி ஒன்றுக்கு பிரம்ம குட்டன் கணவதியான இருமடி

நிவந்தக்காறர் (தொடர்ச்சி)

சோழ வாத்யமாராயனுக்குப் பங்கு இரண்டும்;

மேற்படி ஒன்றுக்கு பொகயன் பொரியிலனை மும்மடி சோழ வாத்யமாராயனுக்குப் பங்கு இரண்டும்;

உடுக்கை வாசிக்க ஒருவனுக்கு வீரசோழன் விடங்கனை ராஜராஜ ஸ்ரீ ஹஸ்தனுக்குப் பங்கு ஒன்றரையும்;

மேற்படி ஒன்றுக்குக் கூத்தன் ஆதித்தனை ராஜராஜ ஸஹஸ்ரபாஹுவுக்குப் பங்கு ஒன்றரையும்;

வீணை வாசிப்பார் இருவர்க்கு சுப்ரமண்யன் கூத்தனை செம்பியன் வீணை ஆதித்தனுக்குப் பங்கு மூன்றரையும்;

இவன் செத்தமையில் இவன் மகளைக் கொண்ட இவன் ...... ப.........மகன் அரையன் சதாசிவனுக்குக் காணியாகவும்;

ஆரியம் பாடுவார் மூவர்க்கு அரையன் அம்பலநாதன் ஆன செம்பியன் வாத்யமாராயனுக்குப் பங்கு நாலரையும்;

தமிழ் பாட ஒருவனுக்குப் பட்டாலகன் காமரப் பேரையனுக்குப் பங்கு ஒன்றரையும்;

மேற்படி ஒன்றுக்கு அமுதன் காளிக்குப் பங்கு ஒன்றரையும்;

மேற்படி ஒன்றுக்கு வாணராசி கூத்தனுக்குப் பங்கு ஒன்றரையும்;

மேற்படி ஒன்றுக்கு அரையன் சூற்றிக்குப் பங்கு ஒன்றரையும்;

கொட்டிமத்தளம் ஒன்றுக்கு காந்தர்வ தாசனுக்குப் பங்கு ஒன்றும்;

மேற்படி ஒன்றுக்கு காந்தர்வதுறைக் கவாலிக்குப்

நிவந்தக்காறர் (தொடர்ச்சி)

பங்கு ஒன்றும்;

முத்திரைச் சங்கு ஒன்றாதத் தயிலன் விக்கியண்ணனுக்குப் பங்கு ஒன்றும்;

மேற்படி ஒன்றுக்கு மும்மடி சோழத் தெரிந்த ஆனைப்பாகரில் சூற்றிநாதனுக்குப் பங்கு ஒன்றும்;

மேற்படி ஒன்றுக்கு தஞ்சாவூர் எரியூர் நாட்டுத்தளி உவைச்சன் பொற்காளி தொண்டயனுக்குப் பங்கு ஒன்றும்;

பக்கவாத்யர் அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் ஐயாரன் அந்தரிக்குப் பங்கு முக்காலும்:

மேற்படி க்ஷத்திரியசிகாமணித் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் சத்தி ஆரூர்க்குப் பங்கு முக்காலும்;

மேற்படி நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துக் கருகாவூர்ப் பாதசிவன் ஆச்சன் பிச்சனுக்குப் பங்கு முக்காலும்;

மேற்படி சத்துருபுஜங்கத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் சத்தி பொன்னனுக்குப் பங்கு முக்காலும்;

மேற்படி வீரசோழ அணுக்கரில் காமன் ஐயாறனுக்குப் பங்கு முக்காலும்;

காந்தர்வரில் எழுபத்தைய்வனுல் வாய்க்கும் பங்கு முக்காலும்;

ராஜகண்டியவத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் பட்டாலகன் அம்பலத்துக்குப் பங்கு முக்காலும்;

காந்தர்வரில் குப்பை திருமணஞ்சேரிக்குப் பங்கு முக்

நிவந்தக்காறர் (தொடர்ச்சி)

காலும்;

தஞ்சாவூர் பிரம்ம குட்டத்து உவைச்சன் ஐயாறன் கண்டராச்சனுக்குப் பங்கு முக்காலும்;

ராஜராஜத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் வரகுணன் சீராளனுக்குப் பங்கு முக்காலும்;

பராந்தகக் கொங்கவாளில் கீர்த்திநாதனுக்குப் பங்கு முக்காலும்;

இவன் செத்தமையில் இவன் தம்பி கீர்த்தி கிளைதாங்கிக்குக் காணியாகவும்;

அரிதுர்க்க லங்கனத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் நூற்றெண்மன் சூற்றிக்குப் பங்கு முக்காலும்;

இவன் செத்தமையில் இவன் தம்பி நூற்றெண்மன் ......... ள .........க்குக் காணியாகவும்;

மூர்த்த விக்ரமாபரணத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் மங்கலவன் மாணிக்குப் பங்கு முக்காலும்;

இப்படைத்தண்டன் கம்பனுக்குப் பங்கு முக்காலும்;

இப்படை ஆரூர் தேவனுக்குப் பங்கு முக்காலும்;

மும்மடி சோழத் தெரிந்த பரிக்காறரில் கண்டி காளிக்குப் பங்கு முக்காலும்;

இரணமுக பீமத்தெரிந்த வலங்கை வேளைக்காறரில் அடிகள் செட்டிக்குப் பங்கு முக்காலும்;

நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துக் கூனர்கள் முன்னியூர் உவைச்சன் களரி ஆச்சனுக்குப் பங்கு முக்காலும்;

நிவந்தக்காறர் (தொடர்ச்சி)

தஞ்சாவூர்த் தஞ்சை மாமணிக்கோயில் வீரசோழ அணுக்கன் பராந்தகன் வீமனுக்குப் பங்கு முக்காலும்;

இவ்வூர் ஜயபீமதளி வீரசோழ அணுக்கன் சுந்தரன் காலகாலனுக்குப் பங்கு முக்காலும்;

இத்தளி வீரசோழ அணுக்கன் பிசங்கன் சீராளனுக்குப் பங்கு முக்காலும்;

இத்தளி வீரசோழ அணுக்கன் தேவன் செங்குளவனுக்குப் பங்கு முக்காலும்;

விக்ரமாபரணத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் இராமன் கம்பனுக்குப் பங்கு முக்காலும்;

இளைய ராஜராஜத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் ஆச்சன் ஆடவல்லானுக்குப் பங்கு முக்காலும்;

ராஜகண்டீயவத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் உத்தமன் கூத்தனுக்குப் பங்கு முக்காலும்;

திருவாய்க் கேழ்வி ஒன்றுக்குக் குமரன் ஐயமானனுன மும்மடி சோழக் கடிகைமாராயனுக்குப் பங்கு ஒன்றும்;

மேற்படி ஒன்றுக்குக் குமரன் அருமொழியான ராஜராஜக் கடிகைமாராயனுக்குப் பங்கு ஒன்றும்;

மேற்படி ஒன்றுக்கு ராஜகேஸரி கோதண்டராமனை ஜயங்கொண்டசோழக்கடிகைமாராயனுக்குப் பங்கு ஒன்றும்;

மேற்படி ஒன்றுக்கு ஆச்சன் மதிகிழவனை அழகியசோழக் கடிகைமாராயனுக்குப் பங்கு ஒன்றும்;

மேற்படி ஒன்றுக்கு பாண்டிய குலாசனி வளநாட்டு மீய் செங்கிளி நாட்டு வங்காரமான திருநாராயணச் சதுர்

நிவந்தக்காறர் (தொடர்ச்சி)

வேதி மங்கலத்து மோகிலியன் சோமன் பராந்தெருமானுக்குப் பங்கு ஒன்றும்;

தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் காந்தர்விகளுக்கும் நாயகஞ் செய்ய சாலூர் பரஞ்சோதிக்குப் பங்கு இரண்டும்;

மேற்படி கோவிந்தன் சோமனுதனுக்குப் பங்கு இரண்டும்;

கணக்கு நித்தவிநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டுச் செம்பங்குடையாந் தன்னிச்சை சதுரவிடங்கனுக்குப் பங்கு இரண்டும்;

இவனுக்குக் கீழ்க் கணக்கு எழுதுவார் இருவர்க்குப் பேராற் பங்கு முக்காலாகப் பங்கு ஒன்றரையும்;

பாண்டிய குலாசனி வளநாட்டு மீய் செங்கிளி நாட்டுக் கடையக் குடையான் மாதேவன் சிவலோக சுந்தரனுக்குப் பங்கு இரண்டும்;

இவனுக்குக் கீழ்க்கணக்கு எழுதுவார் இருவர்க்குப் பேராற் பங்கு முக்காலாகப் பங்கு ஒன்றரையும்;

க்ஷத்திரியசிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துக் கீழ்க் குடையான் நக்கன் பெருமானுக்குப் பங்கு இரண்டும்;

இவனுக்குக் கீழ் கணக்கு எழுதுவார் இருவர்க்குப் பேராற் பங்கு முக்காலாகப் பங்கு ஒன்றரையும்;

நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டு மாங்குடையான் ஐயாறன் பொற்சுவரனுக்குப் பங்கு இரண்டும்;

இவனுக்குக் கீழ்க்கணக்கு எழுதுவார் இருவர்க்குப் பேராற் பங்கு முக்காலாகப் பங்கு ஒன்றரையும்;

நிவந்தக்காறர் (தொடர்ச்சி)

உவைச்சுக்கு உள்படும் நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டு நல்லூராகிய பஞ்சவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து ஐயன் பொய்யிலிக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவர்க்குப் பேராற் பங்கு அரையாகப் பங்கு ஐஞ் சரையும்;

மேற்படி சகடை கொட்டிகளில் தாமோதிரன் செட்டிக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவர்க்குப் பேராற் பங்கு அரையாகப் பங்கு அஞ்சரையும்;

மேற்படிக்கு உள்படும் சகடை கொட்டிகளில் ......... ழி அரங்கத்துக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவர்க்குப் பேராற் பங்கு அரையாகப் பங்கு ஐஞ்சரையும்;

மேற்படிக்கு உள்படும் சகடை கொட்டிகளில் சாத்தன் அம்பலத்துக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவர்க்குப் பேராற் பங்கு அரையாகப் பங்கு ஐஞ்சரையும்;

மேற்படிக்கு உள்படும் சகடை கொட்டிகளில் சத்தி இரண கோளனுக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவர்க்குப் பேராற் பங்கு அரையாகப் பங்கு ஐஞ்சரையும்;

மேற்படிக்கு உள்படுந்தடி மாறும் அரையன் உதையமாத் தாண்டனுக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவர்க்குப் பேராற் பங்கு அரையாகப் பங்கு ஐஞ்சரையும்;

ஆக இவர்களே பாத்தவக்காணி பெறவும் ஆக இப்படி காணி பெற்றுப்பணி செய்யவும் திருப்பள்ளித் தொங்கல் பிடிக்கும் ஆளுக்கு உள்படுவான் ஒருவனுக்குப் பங்கு ஒன்றும்;

ஆள் பதின்மர்க்குப் பேராற் பங்கு எட்டு மாவும் ஆக உடையான் திருவிசலூரான மும்மடி சோழத் தொங்கற்

நிவந்தக்காரர் (தொடர்ச்சி)

பேரையனுக்குமாகப் பங்கு ஐஞ்சும்;

விளக்குடையார்களுக்கு உள்படுவான் ஒருவனுக்குப் பங்கு ஒன்றும், ஆள் ஏழினுக்குப் பேராற் பங்கு அரையாகப் பங்கு மூன்றரையும்; ஆகப் புவனிசேகரன் கற்பகமான பஞ்சவன் பேரையனுக்குப் பங்கு நாலரையும்;

நீர்த்தெளியான் நால்வர்க்குப் பேராற் பங்கு அரையாக மேற்படியானுக்குப் பங்கு இரண்டும்;

சன்னலியள் இருவர்க்குப் பேராற் பங்கு முக்காலாக மேற்படியானுக்குப் பங்கு ஒன்றரையும்;

திருமடைப் பள்ளிக் குசவர்க்கு உள்படுவான் ஒருவனுக்குப் பங்கு ஒன்றும்; ஆள் பதின்மர்க்குப் பேராற் பங்கு அரையுமாக சூரசிகாமணிப் பெருந்தெருவில் குசவர்க்குப் பங்கு ஆறும்;

வண்ணத்தார்கள் இருவர்க்குப் பேராற் பங்கு ஒன்றாக இத்தெருவில் ஈரங்கொள்ளிகளுக்குப் பங்கு இரண்டும்;

காவிதிமை செய்ய ஒருவனுக்கு அரையன் மணலி லிங்கனை செம்பியன் பெருங் காவிதிக்குப் பங்கு அரையும்;

மேற்படி ஒன்றுக்கு ஆச்சன் திருவேங்கடமான ராஜராஜப் பெருங்காவிதிக்குப் பங்கு அரையும்;

நாவிசஞ் செய்ய இருவர்க்கு செயதரன் நெத்தானன் ஆன ராஜராஜப் பெருநாவிசனுக்குப் பங்கு ஒன்றும்;

திரு ஒருவனுக்கும் கீழ்ஆள் இரண்டுக்கும் துணையன் ஆதித்தனை செம்பியன் கொற்றப் பெருங்கணிக்குப் பங்கு இரண்டும்;

நிவந்தக்காரர் (தொடர்ச்சி)

மேற்படி ஒருவனுக்கும் கீழ்ஆள் இரண்டுக்கும் பராந்தகன் பாண்டிய குலாசனி ஆன ராஜராஜ கணிதாதிராஜனுக்குப் பங்கு இரண்டும்;

கொலினமை செய்வார் இருவர்க்கு அரையன் பவருத்திர ஞன பஞ்சவன்மங்கலப் பேரையனுக்குப் பங்கு மூன்றும்;

அம்பட்டன் கொன் சட்டங்கவியான ராஜராஜ ப்ரயோக தரையனுக்குப் பங்கு ஒன்றும்;

தய்யான் ஒருவனுக்குத் தேவன் கவாலியான வீரசோழப் பெருந்தய்யானுக்குப் பங்கு ஒன்றும்;

மேற்படி ஒன்றுக்கு சிப்பன் மழபாடியான கேரளாந்தகப் பெருந்தய்யானுக்குப் பங்கு ஒன்றும்;

ரத்நத் தய்யான் ஆச்சன் கருந்திட்டைக்குப் பங்கு ஒன்றரையும்;

கன்ஞன் ஒருவனுக்கு இடைக்கரைகாரியான க்ஷத்திரியசிகாமணிப் பெருங்கன்ஞனுக்குப் பங்கு ஒன்றும்;

தச்சாசார்யம் ஒன்றுக்குப் பங்கு ஒன்றரையும்; ஆள் இரண்டுக்குப் பங்கு ஒன்றரையும்; ஆக வீரசோழன் குஞ்சரமல்லஞன ராஜராஜப் பெருந்தச்சனுக்குப் பங்கு மூன்றும்;

தச்சு ஒன்றுக்குக் குணவன் மதுராந்தகஞன நித்தவிஞேதப் பெருந்தச்சனுக்குப் பங்கு முக்காலும்;

மேற்படி ஒன்றுக்கு இலத்தி சடையஞன கண்டராதித்தப் பெருந்தச்சனுக்குப் பங்கு முக்காலும்;

பாணன் உத்தமன் சூற்றியான அரிகுலகேஸரிச் சாக்கைக்குப் பங்கு ஒன்றரையும்;

மேற்படி ஐயாறன் அறிஞ்சிக்குப் பங்கு ஒன்றரையும்;

மேற்படி அபராயிதன் வடவாயிலான பல்லவன் சாக்கைக்குப் பங்கு ஒன்றரையும்;

மேற்படி வடுவூரறிஞ்சிக்குப் பங்கு ஒன்றரையும்;

கண்காணித் தட்டான்மை செய்ய ஒராளிட்டுப் பணி செய்வித்துக் கொள்ளப் பெறுவானாக உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் சிறுதனத்துக் கண்காணித்தட்டான் கூத்தன் கணவதியான க்ஷத்திரிய சிகாமணிப் பெருந்தட்டானுக்குப் பங்கு ஒன்று;

---

இக்கல்வெட்டு திருச்சுற்றின் வடபுறச் சுவரில் வெளியில் உள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 66 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீராஜராஜ தேவர் இட்ட பண்டாரிகளும், பரிசாரகர்களும், கணக்கெழுதுவார்களும்.

ஸ்வஸ்தி ஸ்ரீ:

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கை நாடுங் கங்க பாடியுந் தடிகைபாடியும் நுளம்பபாடியுங் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் முரட்டெழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழியு ளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டேய் செழியரைத் தேசு கொள்,

மன்னன் :

கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு,

ஆண்டு :

யாண்டு இருபத்தொன்பதாவது வரை,

ஆணை :

உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்குச் சோழ மண்டலத்தும் பாண்டி நாடான ராஜராஜ மண்டலத்தும் தொண்டை நாடான ஜயங் கொண்ட சோழ மண்டலத்தும் பிரம்ம தேயங்

களிலாரே அவ்வவ பிரம்ம தேயங்களில் பூமி சம்பத்தும் பந்து சம்பத்தும், அர்த்த சம்பத்தும் உடையராயிருப் பாரை;

திருப்பரிசாரகர் :

ஸ்ரீ பண்டாரஞ் செய்ய பிராமணரையும்;

திருப்பரிசாரகஞ் செய்ய மாணிகளையுங்;

கணக்கெழுத கரணத்தார்களையும்;

சந்திராதித்தவல் இடக் கடவார்களாக உடையார் ஸ்ரீராஜ ராஜ தேவர் திருவாய் மொழிந்தருள;

நெல் :

இட்ட அவர்களில் பண்டாரி ஒருவனுக்கு ஓராட்டைக்கு நெல்லு . . . . . றுக் கலமும்;

திருப்பரிசாரகஞ் செய்யும் மாணி ஒருவனுக்கு நிசதம் நெல் லுப் பதக்கும், ஆட்டை வட்டன் காசு நாலும்;

இவர்களிலே நிலையாய் தீக்ஷித்தார் பதின்மர்க்குப் பேராற் நிசதம் நெல்லு முக்குறுணியும், ஆட்டை வட்டன் காசு நாலும்;

இவர்களிலே நிலையாய் . . . . . . திரு . . . . . க் கட்டுவார் இருபதின்மர்க்குப் பேரால் நிசதம் நெல்லுப் பதக்கும் ஆட் டை வட்டன் காசு ஐஞ்சும்;

கணக்கெழுதுவான் ஒருவனுக்கு ஓராட்டைக்கு நெல்லு இரு நூற்றுக் கலமும்;

இவனிடக் கடவ கீழ்க் கணக்கு ஒருவனுக்கு ஓராட்டைக்கு நெல்லு எழுபத்தைங் கலமாக இருவர்க்கு நெல்லு நூற் றைம்பதின் கலமும் அ . . . . . . டி;

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

இவர்களில் திருப்பரிசாரகஞ் செய்யும் மாணிகள் பெறு நெல்லுங் காசும் உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தே பெறவும்:

பண்டாரிகளுங் கரணத்தார்களும் உடையார் ஸ்ரீராஜ ராஜீச்வரம் உடையார் நாட்டுப் பண்டாரத்தே பெறவும்; ஆக இப்படி நிவந்தமாக உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் திருவாய்மொழிந் தருளினபடி கல்லில் வெட்டியது.

அருமொழிதேவ வளநாட்டு மங்கல நாட்டு மங்கலத்து சபையார் இடக் கடவ ஸ்ரீபண்டாரஞ் செய்யும் பிராம ணன் ஒருவன்;

திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

அருமொழிதேவ வளநாட்டு நென்மலி நாட்டு நெடு மணலாகிய மதனமஞ்சரிச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக் கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுக் குன்றியூர் சபையார் இடக்கடவ திருப்பரிசார கஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுச் சுரான்குடி சபையார் இடக்கடவ திருப்பரி சாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு ஆராற்றூர் சபையார் இடக்கடவ திருப்பரிசார கஞ் செய்யும் மாண் ஒன்று;

அருமொழிதேவ வளநாட்டுப் புறங்கரம்பை நாட்டுப் பல்லவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக் கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுச் செம்பியன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக் கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண்

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

இரண்டு;

இந்நாட்டுப் பெரும்பலமருதூர் சபையார் இடக் கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுக் களப்பாழ் சபையார் இடக் கடவ திருப்பரி சாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுச் சிங்களாந்தகச் சதுர்வேதி மங்கலத்து சபை யார் இடக் கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுச் சங்க . . . . . . ாகிய அருமொழி தேவச் சதுர் வேதி மங்கலத்து சபையார் இடக் கடவ திருப்பரிசார கஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுக் கெழுவத்தூர் சபையார் இடக் கடவ திருப் பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

. . . . . . சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக் கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுக் கோயிலார் புதுக்குடியாகிய கோதண்ட ராமச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக் கடவ திருப் பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு வங்க நகர் சபையார் இடக் கடவ திருப்பரி சாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு வன்கொற்றங்குடி சபைய . . . . . . . . . . . . ;

. . . . . . து சபையார் இடக் கடவ திருப்பரிசாரகஞ் செய் யும் மாண் ஒன்று;

இந்நாட்டுப் பனையூர் சபையார் இடக்கடவ திருப் . . . . . ;

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

. . . . . . டவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

அருமொழிதேவ வளநாட்டு . . . . . ண்டாழை வேளூர்க் கூற்றத்துக் குறும்ப . . . . . ;

. . . . . ட்டுக் கூழூர் சபையார் இடக் கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுக் கொண்ணூரர் சபையார் இடக் க . . . . . . ;

. . . . . ஆர்வலக் கூற்றத்து ஆர்வலத்து சபையார் இடக் கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

அருமொழி தேவ . . . . . டவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு வலிவலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய் . . . . . ;

. . . . . ரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு மாலிநூரர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

. . . . . . . . . . சபையார் இடக் கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு அறிஞ்சிகைச் சதுர்வேதிமங்கலத்து . . . . . . செய்யும் மாண் ஒன்று;

அருமொழிதேவ வளநாட்டுப் புலியூர் நாட்டு . . . . . . . . திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

. . . . . அருமொழிதேவ வளநாட்டு . . . . . . . . டக் கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டு இரஞ் . . . . . . ;

. . . . . . கிய பரமேச்வரமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செ . . . . . . ;

. . . . . . மங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுச் செ . . . . . . ;

க்ஷத்திரியசிகாமணி வளநாட்டுக் . . . . . . சபையார் இடக்கடவ திருப்பரிசா . . . . . . ;

. . . . . . இடக்கடவ திருப் . . . . . . ;

க்ஷத்திரியசிகாமணி வளநாட்டுச் செற்று . . . . . . ;

. . . . . . குடவாயில் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு நாலூர். . . . .

. . . . . . ல் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

க்ஷத்திரியசிகாமணி வளநாட்டுத் தேவூர் நாட்டு . . . . . . இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் . . . . . . ;

. . . . . . சாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு . . . . . ப்பரிசாரகஞ் செய்யும் மாண் . . . . . ;

. . . . . ட்டுக் கள்ளூராகிய சன்னமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

. . . . . ட்டு மருகல் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

க்ஷத்திரியசிகாமணி வளநாட்டு வேளாநா . . . . . சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

க்ஷத்திரியசிகாமணி வளநாட்டு . . . . .ட்டு. . . . . ஞூராகிய தானதொங்கச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

க்ஷத்திரியசிகாமணி வளநாட்டு முழையூர் நாட்டுக் குந்தவைச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

உய்யக்கொண்டான் வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் தண்டத்தோட்டமான மும்மடிசோழச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

கணக்கெழுதுங் கரணத்தான் ஒருவன்;

இவன் இடக்கடவ கீழ்க்கரணத்தார்கள் இருவர்;

உய்யக்கொண்டான் வளநாட்டுப் பாம்பூர் நாட்டு திருக்குடமூக்கில் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

உய்யக்கொண்டான் வளநாட்டு அம்பர் நாட்டு அம்பபுறத்தூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் . . . . . ;

இந்நாட்டு அவ்வைநல்லூர் சபையாரும் பிரெட்டைகுடி சபையாரும் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

உய்யக்கொண்டான் வளநாட்டு வெண்ணுட்டுத் திரு

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

மழலை சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுக் கேரளாந்தகச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

கணக்கெழுதுங் கரணத்தான் ஒருவன்;

இவன் இடக்கடவ கீழ்க்கரணத்தார்கள் இருவர்;

இந்நாட்டு வைய்கலாகிய வானவன்மஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

உய்யக்கொண்டான் வளநாட்டுத் திரைமூர் நாட்டு ச . . . . . . சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

உய்யக்கொண்டான் வளநாட்டு திருவழுந்தூர் நாட்டு . . . . . . . . சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டு நல்லூர் புதுக்குடி சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டு வழகூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டு அக்களூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

உய்யக்கொண்டான் வளநாட்டு விளைநாட்டு விளைநகராகிய நித்தவிநோதச் சதுர்வேதிமங்கலத்து சபை

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

யார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுப் பெருமுளை சபையார் இடக்கடவ திருப்பரி சாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுப் பறியலூர் சபையார் இடக்கடவ திருப்பரி சாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

உய்யக்கொண்டான் வளநாட்டு ஆக்கூர் நாட்டு ராஜேந் திரசிம்மச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுத் திருக்கடவூர் சபையார் இடக்கடவ திருப் பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுத் தலைச்சங்காட்டு சபையார் இடக்கடவ திருப் பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

உய்யக்கொண்டான் வளநாட்டுக் குறும்பூர் நாட்டுக் காயாக்குடி சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய் யும் மாண் இரண்டு;

இந்நாட்டுத் தளிச்சேரியான பராக்ரமசோழச் சதுர் வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு உலகு . . . . . . . . சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுக் குறும்பபுறத்தூர் சபையார் இடக்கடவ திருப் பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

உய்யக்கொண்டான் வளநாட்டு . . . . . . மையூர் நாட்டு

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

சோள . . . . . சிம்மச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

உய்யக்கொண்டான் வளநாட்டுக் குறும்பூர் நாட்டு தேவ தானம் திருவிடைக்கழி சபையார் இடக்கடவ கணக்கெழு துங் கரணத்தான் ஒருவன்;

இவன் இடக்கடவ கீழ்க்கரணத்தார்கள் இருவர்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுப் பொய்கை நாட்டு கண்ட ராதித்யச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுப் பெரும்புலியூர் சபையார் இடக்கடவ திருப் பரிசாரகஞ் செய்யும் மாண் . . . . . ;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு மிறைக் கூற்றத்துக் காமர வல்லி சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

கணக்கெழுதுங் கரணத்தான் ஒருவன்;

இவன் இடக்கடவ கீழ்க்கரணத்தார்கள் இருவர்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்துத் தொழூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் . . . . . ;

. . . . . . ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் நாலு;

கணக்கெழுதுங் கரணத்தான் ஒருவன்;

இவன் இடக்கடவ கீழ்க்கரணத்தார்கள் இருவர்;

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

ராஜேந்திரசிம்ம வளநாட்டு இந்நம்பர் நாட்டு ஆதனூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுப் பழைய வானவன்மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் . . . . . . . ;

இந்நாட்டு அசுகூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு மிழலைந . . . . . சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு மண்ணிநாட்டு எமநல்லூராகிய திரைலோக்யமஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டு வெம்பற்றூராகிய அவனிநாராயணச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டு இடையர்நல்லூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு இடவை சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு . . . . . . . . . . . . சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலத்து சபையார்

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு நல்லாற்றூர் நாட்டுக் கத வாய்மங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு மஹேந்திரகோட்டூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் . . . . . ;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு . . . . . லமான புலியூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு ஸ்ரீவீரநாராயணச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ ஸ்ரீபண்டாரஞ் செய்யும் பிராமணந் ஒருவன் திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் பன்னிரண்டு;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுக் குறுக்கைநாட்டுக் குறுக்கை சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுக் காவிரிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுக் கடலங்குடி சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுத் திருவாலி நாட்டுக் கா . . . . . . . . . சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுத் தி . . . . . க்குடி சபையார்

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுத் திருநன்றியூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு மாற்பிடுகுதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு வெண்ணையூர் நாட்டுப் பெருங்கண்பூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுப் பாப்பர்குடி சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செ . . . . . . . . . . . . . . . ;

. . . . . . . . . . . . . இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு . . . . . . வ்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுத் திருக்கழுமலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டுத் தேனூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு நாங்கூர் நாட்டு நாங்கூர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுக் குன்றத்து சபையார் இடக்கடவ திருப்பரி

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

சாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு . . . . . . . . . மாண் ஒன்று;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு அதிகைமங்கை நாட்டு . . . வ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுக் கொண்ட நாட்டுப் பஞ்சவன்மஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு நெலுவூர் நாட்டுக் குமராதித்யச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுப் பிடவூர் நாட்டு நயதீரமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

. . . . . . . . . . . . . வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரக . . . . . . . . . . . ;

. . . . . . மஹேந்திரமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு க்ஷத்திரியசிம்மச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

ராஜாச்ரய வளநாட்டு வடவழி நாட்டுத் திருவெள்ளறை சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

ராஜாச்ரய வளநாட்டுக் கலாரக் கூற்றத்துப் பராக்கிரம

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

சோழச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ . . . . . . . . ;

. . . . . . சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் . . . . . . . ;

. . . . . . . க்கண்டத்துச் சங்கத்திச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து ராஜாச்ரயச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ ஸ்ரீபண்டாரஞ் செய்யும் பிராமணந் ஒருவன்; திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டு அறிஞ்சிகைச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் . . . . . ;

கேரளாந்தக வளநாட்டு . . . . . . தண்டலை சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

. . . . . . . திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

கேரளாந்தக வளநாட்டுத் தட்டைகள நாட்டுக் கற்றளிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

கேரளாந்தக வளநாட்டுச் சூரலூர்க் கூற்றத்துச் சோழ உத்தமச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

பாண்டியகுலாசநி வளநாட்டு விளாநாட்டு . . . . . . திமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

திருப்பரிசாரகர் (தொடர்ச்சி)

இந் . . . . . . மஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு மலரியாகிய ஸ்ரீகண்டச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

பாண்டியகுலாசநி வளநாட்டு இடையாற்று நாட்டு இடையாற்றுமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுத் தொண்டவைச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

இந்நாட்டு . . . . . . . ர் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

பாண்டியகுலாசநி வளநாட்டு . . . . . சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

பாண்டியகுலாசநி வளநாட்டு எயிநாட்டுத் திருப்பேர் சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று;

நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டு ராஜகேஸரிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ ஸ்ரீபண்டாரஞ் செய்யும் பிராமணந் ஒருவன்; திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் மூன்று;

நித்தவிநோத வளநாட்டு . . . . . . . ந்தார நாட்டு விசையாலயச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ. . . .

நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து இரும்புத லாகிய மனுகுலசூளாமணிச் சதுர்வேதிமங்கலத்து சபை யார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டு ஆமுத்திரவல்லி சபையார் இடக்கடவ திருப்பரி சாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

நித்தவிநோத வளநாட்டு முடிச்சோணாட்டு ஜநநாதச் சதுர் வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

கணக்கெழுதுங் கரணத்தான் ஒருவன்;

இவன் இடக்கடவ கீழ்க்கரணத் . . . . ;

. . . . . பரிசாரகஞ்செய்யும் மாண் ஒன்று;

நித்தவிநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்துக் கீழ்ப் பூண்டியாகிய ஒலோகமஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு;

இந்நாட்டுப் பூவணூராகிய அவனிகேஸரிச் சதுர்வேதிமங் கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று.

---

இக்கல்வெட்டு திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் வெளியில் உள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 69 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீராஜராஜ தேவர் இட்ட மெய்காப்பார்கள்

மெய்க் கீர்த்தி :

. . . . . . . . . . . . . ங் கங்க பாடியுந் தடிகை பாடியும் நுளம்ப பாடியுங் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் முரட்டெழில் சிங்களர் ஈழ மண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளருழியு ளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசு கொள்,

மன்னன் :

கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு,

ஆண்டு :

யாண்டு இருபத்தொன்பதாவது வரை,

ஆணை :

உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்குச் சோழ மண்டலத்து பிரம்ம . . . . . ;

நெல் :

. . . . . . . வும் இட்ட திருமெய்காப்பார்களுக்குப் பேரால் ஆட்டை வட்டன் நூற்றுக் கல நெல்லுத் திருமெய்காப்பார்களை இட்ட அவ்வவர் ஊர்களிலாரே அளக்கக் கடவார்களாகவும்;

நிவந்தம்:

இந்நெல் அவ்வவர் ஊர்களிலார்க்கு சந்திராதித்யவல் ஆட்டாண்டு தோறும் தன் கடமைக்குச் செலவு பெறவும், படி செலவு பெறவும்;

ஆக இப்படி நிவந்தமாக உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது;

திருமெய்காப்பு:

அருமொழிதேவ வளநாட்டு இங்கணாட்டு விமலசித்தமங் கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

அருமொழிதேவ வளநாட்டு நென்மலி நாட்டு நெடுமண லாகிய மதனமஞ்சரிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு . . . . . . ;

இந்நாட்டுக் குன்றியூர் சபையார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

அருமொழிதேவ வளநாட்டுப் புறங்கரம்பை நாட்டுப் பல்ல வன்மஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக் கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுச் செம்பியன்மஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுப் பெரும்பலமருதூர் சபையார் இடக்கடவ திரு மெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு . . . . . . . ங்கலத்து ஊரார் இடக்கடவ திரு மெய்காப்பு . . . . . . . ;

. . . . . . ர்க் கூற்றத்துச் சிற்றுமூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

திருமெய்காப்பு (தொடர்ச்சி)

அருமொழிதேவ வளநாட்டு இ . . . . ட்டுக்குறுக்கை சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

அருமொழிதேவ வளநாட்டு அளநாட்டுக் கீழையிலாகிய பரமேச்வரமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுச் செம்பியன்மஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

க்ஷத்ரியசிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் திருநறையூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுச் சீதோ . . . . . மான அபிமானபூஷணச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு . . . . . ராயகுடி சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு வண்டாழஞ்சேரி ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் கூரூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் கற்குடி ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

க்ஷத்ரியசிகாமணி வளநாட்டுச் செற்றூர்க் கூற்றத்துச் செற்றூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் குடவாயில் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

திருமெய்காப்பு (தொடர்ச்சி)

இந்நாட்டு நாலூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

க்ஷத்ரியசிகாமணி வளநாட்டு இங்கணுட்டு இங்கண் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

க்ஷத்ரியசிகாமணி வளநாட்டுத் தெவூர் நாட்டு ஆலத்தூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

க்ஷத்ரியசிகாமணி வளநாட்டு அள நாட்டுப் பெருங்கடம்பூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுப் பாப்பார்குடி சபையார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

இந்நாட்டுப் பொருந்தம்பொந்தை சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

க்ஷத்ரியசிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்துக் கொட்டாரக்குடி சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு திருக்கண்ணங்குடி சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் கள்ளூராகிய சன்னமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

க்ஷத்ரியசிகாமணி வளநாட்டு மருகல் நாட்டு மருகல் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு இ . . . . . க்குடி சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுப் பூதனூர் சபையார் இடக்கடவ திருமெய்

காப்பு ஒன்றும்;

இந்நாட்டு வைப்பூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுத் தஞ்சாவூர் ஊரார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

க்ஷத்ரியசிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்து ஆடியப்பி மங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

க்ஷத்ரியசிகாமணி வளநாட்டு ராஜமல்லச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுப் பெரும்போழ் ஊரார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

க்ஷத்ரியசிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டுப் புகலோக மாணிக்கச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

உய்யக்கொண்டான் வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் தண்டத்தோட்டமான மும்மடிசோழச் சதுர்வேதிமங் கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

உய்யக்கொண்டான் வளநாட்டுப் பாம்புர நாட்டுப் பாம் புரத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் கடைய்க்குடி சபையார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

இந்நாட்டு நல்லாவூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

திருமெய்காப்பு (தொடர்ச்சி)

உய்யக்கொண்டான் வளநாட்டு அம்பர்நாட்டு அதியரைய குறும்பல் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு நல்லழுந்தூர் ஊரார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

உய்யக்கொண்டான் வளநாட்டு மருகல் நாட்டு மருதலூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

உய்யக்கொண்டான் வளநாட்டு வெண்ணுட்டுத் திரு மழலை சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு வைய்கலாகிய வானவன்மஹாதேவிச்சதுர் வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுத் திருநால்லத்து சபையார் இடக்கடவ திரு மெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் கருவிலி ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு இரண்டும்;

இந்நாட்டு வயலூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

உய்யக்கொண்டான் வளநாட்டுத் திரைமூர் நாட்டுச் சாத்த னூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

உய்யக்கொண்டான் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு அக்களூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு அயிற்காட்டு ஊரார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

உய்யக்கொண்டான் வளநாட்டு விளைநாட்டு விளைநக

ராகிய நித்தவிநோதச்சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுப் பெருமுளை சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுப் பறியலூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுத் திரைமூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

உய்யக்கொண்டான் வளநாட்டு ஆக்கூர் நாட்டு ராஜேந்திரசிம்மச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுத் திருக்கடவூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுத் தலைச்சங்காட்டு சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

உய்யக்கொண்டான் வளநாட்டுக் குறும்பூர் நாட்டுத் தளிச்சேரியான பராக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு இறையான்சேரி சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுத் தேவதானந் திருவிடைக்கழி சபையார் இடக்கடவ திருமெய்காப்பு மூன்றும்;

இந்நாட்டு நெடுங்காட்டு ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

திருமெய்காப்பு (தொடர்ச்சி)

ராஜேந்திரசிம்ம வளநாட்டுப் பொய்கை நாட்டு கண்டராதித்யச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு இரண்டும்;

இந்நாட்டுப் பெரும்புலியூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு மிறைக் கூற்றத்து பார்த்திபசேகரச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்துக் கவையத் தலையாகிய பண்டிதசோழச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுச் சத்திமங்கலத்து ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு இன்னம்பர் நாட்டுப் பழைய வானவன்மஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு அசுகூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் கொட்டையூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு எராகிய மும்மடிசோழமங்கலத்தார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு இரண்டும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு மிழலை நாட்டுச் செய்நல்லூர்

சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு மண்ணி நாட்டு எமநல்லூ ராகிய த்ரைலோக்யமஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு வெம்பற்றூராகிய அவனிநாராயணச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன் றும்;

இந்நாட்டு இடவை சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுப் பனந்தாடி சபையார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு விளத்தூர் நாட்டுக் காட்டூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுக் கார்நாட்டு ஒ . . . . . . . . . . . . . . . . . ர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன் றும்;

தனியூர் ஸ்ரீவீரநாராயணச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஆறும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுக் குறுக்கை நாட்டுக் குறுக்கை சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் காவிரிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் காட்டியார் பிரமதேயத்து சபையார் இடக் கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

திருமெய்காப்பு (தொடர்ச்சி)

இந்நாட்டு வரகூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு . . . . . . ;

இந்நாட்டுக் கடலங்குடி சபையார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுத் திருவாலி நாட்டு மல்லிகுடி சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுத் திருவாலி சபையார் இடக்கடவ திருமெய் காப்பு . . . . . . ம்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு . . . . சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுத் திருநன்றியூர் சபையார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

இந்நாட்டு மாறபிடுகுதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் கஞ்சாறநகர் ஊரார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு வெண்ணையூர் நாட்டுப் பெருங் கண்பூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு மாதுலவெளூர் சபையார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

இந்நாட்டு . . . . . . த்தூர் சபையார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

இந்நாட்டு வெள்ளூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

திருமெய்காப்பு (தொடர்ச்சி)

இந்நாட்டுச் சொதியக்குடி சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுத் திருக்கழுமல நாட்டு உதையாதித்யச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுத் திருக்கழுமலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுத் தேனூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு நாங்கூர் நாட்டு நாங்கூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு இரண்டும்;

இந்நாட்டுக் குன்றத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு மருதூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு அதிகைமங்கை நாட்டுப் பெருந்தோட்டத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு இரண்டும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டுக் கொண்ட நாட்டுப் பஞ்சவன் மஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு இரண்டும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு நெலுவூர் நாட்டுக் குமராதித்யச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

திருமெய்காப்பு (தொடர்ச்சி)

ராஜேந்திரசிம்ம வளநாட்டுப் பிடவூர் நாட்டு நயதீரமங்க லத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு வெசாலிப்பாடி ஜயங்கொண்ட சோழச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திரு மெய்காப்பு ஒன்றும்;

ராஜேந்திரசிம்ம வளநாட்டு இருங்கொளப்பாடி வளவன் மஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜாச்ரய வளநாட்டு மீய்மலை மகேந்திரமங்கலத்து சபை யார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ராஜாச்ரய வளநாட்டு வடவழி நாட்டுத் திருவெள்ளறை சபையார் இடக்கடவ திருமெய்காப்பு இரண்டும்;

ராஜாச்ரய வளநாட்டுப் பாச்சிற்கூற்றத்துக் கீழ்பலாற்றுப் பெருமருதூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன் றும்;

பொயீடு இவ்விடத்து நிலம் போதாதாக இதில் குறை ராஜராஜன் திருவாசலில் தெற்கு அங்கிதேவர் ஆலயத் துக்கு வடக்கு ஆதிபூமியிற் கபோதத்தின் கீழ்ப்புறனில் உத்தரப் . . . . . துடங்கிக் கல்லில் வெட்டித்து;

---

இக்கல்வெட்டு திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் வெளியில் உள் ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 70 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த ஊர்கள்

ஸ்வஸ்தி ஸ்ரீ :

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கேய் உரிமை பூண்டமை மநக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கைநாடுங் கங்கபாடியுந் தடிகைபாடியும் நுளம்பபாடி யுங் குடமலைநாடுங் கொல்லமுங் கலிங்கமும் முரட்டெழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரையிலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழியுளெல்லா யாண் டுந் தொழுதக விளங்கும் யாண்டேய் செழியரைத் தேசு கொள்,

மன்னன் :

கோ ராஜகேஸரிவர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு,

ஆண்டு :

யாண்டு இருபத்தொன்பதாவது வரை,

குடுத்த ஊர்கள் :

உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் தஞ்சாவூர் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீராஜராஜீச்வரம் உடைய பரமஸ்வாமிக்கு வெண்டு நிவந்தங்களுக்கு(த்)

தேவதானமாகச் சோழமண்டலத்தும் புறமண்டலங்களிலும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த ஊர்களில்;

ஊர்நத்தமும் ஸ்ரீகோயில்களுங் குளங்களும் ஊடறுத்துப்போன வாய்க்கால்களும் பறைச்சேரியுங் கம்மாண சேரியுஞ் சுடுகாடும் உள்ளிட்டு இறைஇலி நிலங்களும்;

இறை கட்டின நிலத்தாற் காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லும், இடக்கடவ பொன்னுங் காசும் பேசிக் கல்லில் வெட்டின;

தென்கடுவாயான அருமொழிதேவ வளநாட்டு இங்கனுட்டுப் பாலையூர்;

பள்ளியுங் கணிமுற்றூட்டும் உட்பட அளந்தபடி நிலம் நூற்று முப்பத்து நான்கேய் எட்டு மாவின் கீழ் முக்காலே மும்மா வரை யரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவிலும்;

ஊர் நத்தமுங் குளமுங் கம்மாணசேரியும் பறைச்சேரியுஞ் சுடுகாடும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போன வாய்க்கால்களாலும் இறைஇலி நிலம் ஒன்பதேய் காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரை நீக்கி;

இறை கட்டின நிலம் நூற்று இருபத்து ஐஞ்சேய் ஏழுமாவரை முந்திரிகைக் கீழ் எண்மா வரை அரைக் காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவினால்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லுப் பன்னீராயிரத்து ஐஞ்ஞூற்று முப்பதின் கலனே இருதூணிக் குறுணி ஒருநாழி.

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

இன்னாட்டு ஆரப்பாழ்;

நாய்வாலமும் மருத்துவப்பேறும் பள்ளியும் உட்பட அளந்தபடி நிலம் நூற்று ஒருபத்து ஒன்றெய் அறுமா வரை அரைக்காணிக் கீழ் முக்காலே அரைக்காலின் கீழ் அரையே இரண்டு மாவிலும்;

ஊர்நத்தமுங் குளங்களும் ஸ்ரீகோயிலும் ஐய்யன் கோயிலும் பிடாரி கோயிலுங் கழனிக்குளங்களும் பறைச்சேரி நத்தமும் இறைஇலி நிலம் மூன்றறையே நான்கு மாக்காணி அரைக்காணி நீக்கி;

இறை கட்டின நிலம் நூற்று ஏழரையே இரண்டு மாக் காணிக் கீழ் முக்காலே அரைக்காலின் கீழ் அரையே இரண்டு மாவினல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக் க்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லுப் பதினயிரத்து எழுநூற்று நாற்பத்து ஐங்கலனே இருதூணிப் பதக்கு முன்னழி.

இன்னாட்டுக் கீரன்தேவன்குடி;

இரண்டே முக்காலே நான்கு மாக்காணி முந்திரிகைக் கீழ் அரையே மூன்று மா முக்காணி அரைக்காணிக் கீழ் எட்டு மாவிலும்;

ஊர்நத்தமும் . . . . . . ஸ்ரீகோயிலும் நந்தவனமுங் குளங்களும் இறைஇலி நிலம் இரண்டே ஒருமாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மா முந்திரி. . .

. . . . . . . ன நிலம் நாற்பதேய் முக்காலே இருமா வரை அரைக்காணிக்கீழ் ஒன்பது மா முக்காலே ஒரு

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

மாவினால்;

இறை கட்டின காணிக்கடன் இராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு நாலாயிரத்து எழுபதின் கலனே ஐஞ்ஞாழி;

இன்னாட்டு நாகன்க . . . . ;

. . . . . . யேய் இரண்டு மா முக்காணி அரைக்காணிக் கீழ் இருமாவரை அரைக்காணிக் கீழ் எட்டு மாவிலும்;

ஊரிருக்கையுங் குளங்களும் ஐய்யன் . . . . . . யும் இவ்வூர் நிலத்தை யூடறுத்துப்போன வாய்க்கால்களாலும் சுடுகாட்டாலும் இறைஇலி நிலம் முக்காலே ஒரு மா அரைக்காணி . . . . . . . . . ;

. . . . . . . . . நிலம் இருபத்து ஒன்றேய் முக்காலே ஒரு மாவரை அரைக்காணி முந்திரிகைக் கீழ் அரைக்காணிக் கீழ் எட்டு மாவினால்;

இறை கட்டின காணிக்கடன் இராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு இரண்டாயிரத்து ஒரு நூற்று எண்பத்து முக்கலனே ஐங்குறுணி நானாழி;

. . . . . . . . . . . . . . . . . . . ;

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ;

பறைச்சேரியும் குளங்களும் ஓடைகளும் இறையிலீ நீங்கு நிலம் ஐஞ்சின் கீழ் அரையே மூன்று மா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா நீக்கி;

இறை கட்டின நிலம் நூற்று ஒருபத்து ஐஞ்சே காலே அரைக்காணி முந்திரிகைக் கீழ் அரையே மூன்றுமா முந்திரிகைக் கீழ் அரையே இரண்டு மாவிஞல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லுப் பதிஞெராயிரத்து ஐஞ்ஞூற்று இருபத்து அறுகலனே குறுணி எழுநாழி;

இந்நாட்டுத் தண்ணீர்க் குன்றமான ராஜராஜநல்லூர்;

அளந்தபடி நிலம் முப்பத்து ஆறரையே ஒரு மா அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே மா காணிக் கீழ் முக்காலே ஒரு மாவிலும்;

ஊரிருக்கையும் குளமும் ஸ்ரீகோயில்களும் சுடுகாடும் பறைச்சேரியும் நாட்டா . . . . . . . நிலமும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் புறவூர்க்குப்போன வாய்க்காலாலும் இறைஇலி நிலம் இரண்டே எழுமா அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே ஒருமாவரை முந்திரிகைக் கீழ் அரையே இரண்டு மா நீக்கி;

நிலம் முப்பத்து நான்கே மூன்று மா முக்காணி அரைக் காணி முந்திரிகைக்கீழ் முக்காலே நான்மாவரை அரைக் காணி முந்திரைக் . . . ;

. . . . . . . ஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு மூவாயிரத்து முன்னூற்று எழுபத்து எண் கலனே பதக்கு நாஞழி;

இந்நாட்டு உச்சிபாடி;

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

அளந்தபடி நிலம் ஐம்பத்து ஏழரையே ஒருமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே நான்கு மா முக்காணியிலும்

ஊரிருக்கையுங் குளங்களும் ஸ்ரீகோயில்களும் ஈழச்சேரியும் க . . . . . . . க இறையிலி நிலம் ஒன்றே முக்காலே மூன்று மா முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் இருமாவரை முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மா நீக்கி;

இறை கட்டின நிலம் ஐம்பத் தைஞ்சரையே மூன்று மாவின் கீழ் அரையே இரண்டு மாவரைக்காணிக் கீழ் எட்டு மாவினுல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலா . . . . ற்று இருபத்து அறு கலனேய் தூணி நாழி.

இந்நாட்டுக் கீழ்வடுகக்குடி;

அளந்தபடி நிலம் இருபத்தேழரையே ஒருமாவரை அரைக்காணிக் கீழ் நான்கு மா அரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவிலும்;

ஊரிருக்கையும் குளமும் ஸ்ரீ கோயில்களும் சுடுகாடும் ஈழச்சேரியுங் கம்மாணசேரியும் பறைச்சேரியும் வண்ணரச்சேரியும் பறைக் குளக்குழியும் . . . . ;

. . . . . . . . ரைக்காணி முந்திரிகைக் கீழ் மூன்று மாக்காணி அரைக்காணிக் கீழ் எட்டு மா நீக்கி;

இறை கட்டின நிலம் இருபத்தாறேய் ஒன்பது மாக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காணிக் கீழ்

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

முக்காலே ஒரு மாவினல் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல்லு இரண்டாயிரத்து அறுநூற்று நாற் . . .

. . . ாட்டுக் கஞ்சாற (ன)கர்;

அளந்தபடி நிலம் ஆறேமுக்காலே இரண்டு மா முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே ஒருமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவிலும் ;

இவ்வூர்க் குளங்களால் இறையிலி நிலம் ஒரு மா முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் அறுமாக் காணி அரைக்காணிக்கீழ் எட்டுமா நீக்கி ;

இறை கட்டின நிலம் ஆறே முக்காலே ஒருமாவின் கீழ் அரையே காணி . . . . . . ;

இறைகட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கடவ நெல்லு அறுநூற்று எழுபத்து நாற்கலனே இருதூணிக் குறுணி நாழி.

இந்நாட்டு ஊசக்கண்ணங்குடிக்குள்;

தேவதானமாய் வருகின்ற நிலம் அளந்தபடி நிலம் ஐஞ்சரையே இருமாவரை அரைக்காணிக் கீழ் முக்காலே முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவிலும் ;

ஊரிருக்கையுங் குளமுஞ் சுடுகாடும் பாண்டவாய்க் கரைக்குலையுமாக இறையிலி நிலம் மும்மாவரை அரைக் காணிக்கீழ் முக்காலே மூன்று மா முக்காணிக் கீழ்

முக்காலே ஒருமா நீக்கி;

இறை கட்டின நிலம் ஐஞ்சே எட்டு மா முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலேயிரண்டு மா அரைக்காணிக் கீழ் எட்டு மாவினல் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல்லு ஐஞ்ஞூற்று ஒருபத்து எண்கலனே இரு தூணி இரு நாழி ;

இந்நாட்டு ஆர்வலக்கூற்றத்து வடவிறையான் பள்ளம் ;

அளந்தபடி நிலம் இருபத்து நாலே காலே அரைக் காணிக்கீழ் ஒன்பது மாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டு மாவிலும் ;

இவ்வூர் ஊர் நத்தமுங் குளங்களுஞ் சுடுகாடும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் புறவூர்களுக்கு நீர் பாயப்போன வாய்க்காலும் ஆக இறையிலி நிலம் ஆறு மாக்காணி அரைக்காணிக் கீழ் ஆறு மாக்காணி அரைக்காணிக் கீழ் எட்டு மா நீக்கி ;

நிலம் இருபத்து மூன்றே முக்காலே மூன்று மா முக் காணிக்கீழ் மூன்று மாவினல் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் ம(ர)க்காலால் அளக்கக்கடவ நெல்லு இரண்டாயிரத்து முன்னூற்றுத் தொண் ணூற்று முக்கலேனே இருதூணிக் குறுணி ஐஞ்ஞாழி;

இந்நாட்டு நகரம் திருத்தெங்கூர் ;

அளந்தபடி நிலம் முப்பத்து நாலே காலே முக்காணி

முந்திரிகைக்கீழ் முக்காலே ஒரு மா முக்காணி முந்திரி கைக்கீழ் இரண்டு மாவிலும்;

இவ்வூர் ஊர்நத்தமுங் குளங்களும் புலத்தில் குளங்களும் தீண்டாச்சேரியும் பறைச்சேரியுஞ் சுடுகாடும் ஆக இறையிலி நிலம் நான்கரையே முக்காணி அரைக் காணிக்கீழ் முக்காலே அரை மா அரைக்காணி முந் திரிகைக்கீழ் நான்கு மா நீக்கி;

நிலம் இருபத்தொன்ப தரையே நான்கு மா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் ஒருமா முந்திரிகைக் கீழ் முக்காலே மூன்று மாவினால் ;

இறை கட்டின பொன் இருநூற்றுத் தொண்ணூற்று எழு கழஞ்சேய் நாலு மஞ்சாடியும் மூன்று மா முக்காணி ;

வடகடுவாயான க்ஷத்திரியசிகாமணி வளநாட்டுத் திரு நறையூர் நாட்டு அரக்கன்குடி ;

அளந்தபடி நிலம் ஏழே ஆறு மாக்காணி அரைக்காணிக் கீழ் காணி முந்திரிகைக்கீழ் எட்டு மா முக்காணிக் கீழ் முக்காலே ஒரு மாவிலும் ;

இவ்வூர் ஊர்நத்தமுங் குளங்களாலும் இறையிலி நிலம் எட்டு மாக்காணிக்கீழ் ஒன்பது மா நீக்கி;

நிலம் ஆறே முக்காலே மூன்று மா முந்திரிகைக்கீழ் அரையே மா காணி முந்திரிகைக்கீழ் எட்டு மா முக் காணிக்கீழ் முக்காலே ஒரு மாவினால் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொ க்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக்

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

கடவ நெல்லு அறுநூற்று ஐய்ம்பத்து அறுகலனே எழு குறுணி முன்னுழி ;

இந்நாட்டுப் பிடாரசேரி;

அளந்தபடி நிலம் ஐஞ்சரையே இரண்டு மா முக்காணி முந்திரிகைக்கீழ் அரையே முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மாவிலும்;

இவ்வூர் ஊர்நத்தமுங் குளங்களும் ஆக இறையிலி நிலம் நான்கு மாக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் மா காணி அரைக்காணிக்கீழ் எட்டு மா நீக்கி;

நிலம் ஐஞ்சே எட்டு மாக்காணி அரைக்காணிக்கீழ் எண்மா வரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவினுல் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு ஐஞ்னூற்று முப்பத்தைங் கலநே இருதூணிப் பதக்கு நானுழி ;

இந்நாட்டு வேளாநாட்டு மணற்காலப்பள்ளியுந் திறப்பான் மஹாதேவர் தேவதானங்களும் திருவடிகள் தேவதானங்களும் இவ்வூரோடும் ஏறின பெண் பள்ளியும் ஆக;

அளந்தபடி நிலம் ஐய்ம்பத் தொன்றே முக்காலே ஒரு மாக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே மும்மாவரையரைக் காணிக்கீழ் அரையிலும் ;

ஊர் நத்தங்களுங் குளங்களும் பிடாரி கோயிலும் பெருவழியும் ஆக இறையிலி நீங்கு நிலம் ஒன்றே முக்காலே இரண்டு மாக்காணி முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மாக்காணிக்கீழ் முக்காலே ஒரு மா நீக்கி ;

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

நிலம் நாற்பத்தொந்பதே முக்காலே நான்கு மாவின் கீழ் ஆறு மாக்காணி முந்திரிகைக்கீழ் அரையே நான்கு மாவினுல் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு . . . . . ரத்துத் தொளாயிரத் தொருபத்தெண் கலநே இரு தூணி முக்குறுணி ஒரு நாழி ;

அரிசிலிக்குங் காவிரிக்கு நடுவான உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுப் பள்ளிச்சந்தம் இறங்கின நெற்குப்பை ;

அளந்தபடி நிலம் முப்பத் தொன்பதே முக்காணி அரைக் காணி முந்திரிகைக்கீழ் அரையே அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும் ;

ஊர் நத்தத்தாலுங் குளங்களாலுஞ் சுடுகாட்டாலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துக் கீழ்நாட்டுக்கு நீர் பாயப் போன ஆறுகளாலும் வாய்க்கால்களாலும் ஆக இறையிலி நீங்கு நிலம் ஒன்றரையே மும்மாவரை அரைக் காணிக்கீழ் அரையே ஒரு மா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மா நீக்கி ;

நிலம் முப்பத்தேழே எழு மாக்காணிக்கீழ் முக்காலே நான்கு மாவினுல் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு மூவாயிரத் தெழு நூற்று இருபத் திரு கலநே ஐஞ்ஞாழி ;

வடகரை ராஜேந்திரசிங்க வளநாட்டு இன்னம்பர் நாட்டு

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

மருத்துவக்குடி ;

அளந்தபடி நிலம் முப்பதரையே நான்கு மா முக்காணி அரைக்காணிக்கீழ் அரையே மூன்று மாவிலும் ;

ஊரிருக்கையும் ஸ்ரீகோயில்களாலுந் திருமுற்றங்களா லுந் திருநந்தவனங்களாலும் பறைச்சேரியாலும் சுடு காடும் ஆக இறையிலி நீங்கு நிலம் முக்காலே இரண்டு மா அரைக்காணிக்கீழ் ஒரு மாவரை முந்திரிகை நீக்கி ;

நிலம் இருபத்தொன்பதே முக்காலே இரண்டு மா முக்காணிக்கீழ் அரையே ஒரு மா காணி அரைக்காணி முந்திரிகையினல் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக் கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு இரண்டாயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெழு கலநே இரு தூணிப் பதக்கு இரு நாழி;

---

இக்கல்வெட்டு விமானத்தின் தென்புறச் சுவரில் உள்ளது. தென் னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 4 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த ஊர்கள்

ஸ்வஸ்தி ஸ்ரீ :

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கைநாடுங் கங்கபாடியுந் தடிகைபாடியுந் நுளம்பபாடியுங் குடமலைநாடுங் கொல்லமுங் கலிங்கமும் முரட்டெழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழியுளெல் . . . . . ,

குடுத்த ஊர்கள் :

. . . . . . யார் ஸ்ரீராஜராஜதேவர் குடுத்த ஊர்களில்;

ஊர் நத் . . . . . . வாய்க்கால்களும் பறைச்சேரியுங் கம்மாண சேரியுஞ் சுடுகாடும் உள்ளிட்டு இறையிலி நிலங்களும்;

இறை கட்டின நிலத்தால் காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லும் இடக்கடவ பொன்னுங் காசும் பேசிக் கல்லில் வெட்டின;

வடகரை ராஜேந்திரசிங்க வளநாட்டு இன்னம்பர் நாட்டுக் கருப்பூர் (த்);

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

தேவதானமுஞ் சாலாபோகமும் நீக்கி வெள்ளான் வகையாய் வருகின்ற நிலம் ஐஞ்சரையே நான்கு மாக் காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே அரை மா அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே ஒரு மாவிலும்;

ஊர் நத்தமுங் குளமுங் கரையும் ஸ்ரீகோயிலுந் திரு முற்றமும் பிடாரி கோயிலுஞ் செங்கழுநீர் நட்ட குளத் தில் மூன்றொரு பாதியுஞ் சுடுகாடும் ஆக . . . . . . . வ நெல்லு ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்பதின் கலநே ஏழு குறுணி நாழி;

இந்நாட்டு . . . . . லி நாட்டுத் திருத்தேவன்குடி ;

உள்ளூர்க் கடதேவர்க்கு நீக்கி ஏற அபஹரித்து உண்டு வருகின்ற நிலமென்று வேறு முதலாக்கி வெள்ளான் வகையாக்கி வெள்ளான் வகையால் வரு கின்ற நிலம் வெள்ளான் வகையில் முதல் தவிர்ந்து இவ்வூர் ஊர்நத்தமுஞ் சுடுகாடுமுள்ளிட்டு இறையிலி யாக நீக்கின நிலன் பொதுவே அனுபவிக்கக் கடவ தாக நீங்கல் நீக்கி;

அளந்தபடி நிலம் இருபத்தொன்பதே காலே முக் காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாக்காணி அரைக் காணிக்கீழ் காலே அரை மாவினல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக் கும் ஆடவல்லானென்னு மரக்காலால் அளக்கக்கடவ நெல் இரண்டாயிரத்துத் தொளாயிரத்து . . . . . . ங் கலனே இருதூணி ஒருநாழி;

இந்நாட்டுத் திருவாலி நாட்டுக் குறுவாணியக்குடி;

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

பள்ளியுட்பட அளந்தபடி நிலம் நாற்பத்தாறே அரை மா வரைக்காணிக்கீழ் மூன்று மா முக்காணிக் கீழ் முக்காலே ஒரு மாவிலும்;

ஊரிருக்கையும் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமு . . . . . . . . இந்நிலத்தாறே . . . . . . . . நீக்கி;

இறை கட்டின நிலம் முப்பத்தொன்பதரையே மூன்று மாக்காணி அரைக்காணிக்கீழ் முக்காலே நான்கு மா முக்காணிக்கீழ் முக்காலே ஒரு மாவினுல்;

இறை கட்டின பொன் முன்னூற்று நாற் கழஞ்சே மூன்று மஞ்சாடியும் ஒன்பது மாவரை;

மழநாடான ராஜாச்ரய வளநாட்டுப் பாச்சிற் கூற்றத்து மீய்பலாற்று ஆன்பனூர்;

அளந்தபடி நிலம் எண்பதேய் முக்காலின் கீழ் அரையே நான்கு மா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும்;

ஊரிருக்கையும் இவ்வூர்க் களமுங் குளமுங் கரையும் இவ்வூரை யூடறுத்து போய் நாட்டுக்கு பாயும் பெருவள வாயும் பெருவளவாய் நின்றும் இல்வூரை யூடறுத்துப் போய்ச் செட்டிமங்கலத்துக்குப் பாயும் வாய்க்காலா லும் இவ்வூர் மஹாதேவர் திருவன்னிபகவர் ஸ்ரீகோயி லுந் திருமுற்றமும் பிடாரி கோயிலுந் திருமுற்றமுஞ் சேட்டையார் கோயிலுந் திருமுற்றமும் திருப்பைஞ்ஞீலி மாதேவர் குளமுங் கரையும் இவ்வூர் ஈழச்சேரியும் பறைச்சேரியும் வெள்ளான் சுடுகாடும் பறைச் சுடுகா டும் கற்கிடையும் ஆக இறையிலி நீங்கு நிலம் நான்கே முக்காலே மூன்று மா முக்காணி முந்திரிகைக்கீழ்க்

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

காலே . . . . . . . . கீழ் அரையே இரண்டு மா நீக்கி;

நிலம் எழுபத்தைஞ்சே முக்காலே ஒ . . . . . மா வரை முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மாவினுல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு ஐயாயிரத் தெண்ணூற்று ஐம்பதின் கலனே இருதூணிக் குறுணி ஒருநாழி;

இன்னாட்டுப் பாச்சிற் கூற்றத்துக் கீழ்பலாற்று ஈங்கையூர்;

அளந்தபடி நிலம் நாற்பத்தைஞ் சரையே அரை மா அரைக்காணிக்கீழ் அரையிலும் ஊர் நத்தமும் இவ்வூர்ப் பிடாரி கோயிலுந் திருமுற்றமும் . . . . . . . . . கோயிலுந் திருமுற்றமும் இவ்வூர் மஹாதேவர் ஸ்ரீ கோயிலுந் திருமுற்றமும் இத்தேவர் திருமஞ்சனக் குளத்தாலும் பறைச்சேரியாலும் வெள்ளான் சுடுகாட்டாலும் பறைச் சுடுகாட்டாலும் ஆக இறைஇலி நீங்கு நிலம் இரண்டே முக்கால் நீக்கி;

நிலம் நாற்பத்திரண்டே முக்காலே அரை மா அரைக் காணிக்கீழ் அரையினுல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு நாலாயிரத் திருநூற்று எழுபத்தெண் கலனே முக்குறுணி நாஞழி;

இன்னாட்டுப் பாச்சிற் கூற்றத்துக் கீழ்பலாற்றுப் பணமங்கல வனகரைப் பற்று . . . . . ஞூரான பணமங்கலம்;

அளந்தபடி நிலம் நாற்பத்திரண்டே எண் மா . . . . க்

கீழ் எட்டு மா முக்காணிக்கீழ் முக்காலே ஒரு மாவி லும்;

ஊரிருக்கை நத்தமும் இவ்வூர் மஹாதேவர் ஸ்ரீகோயி லுந் திருமுற்றமும் இவ்வூரை ஊடறுத்துப் புறவூர் களுக்கு நீர் பாயும் வாய்க்காலும் பிடாரி கோயிலுந் திருமுற்றமும் ஊருணி குளமுங் கரையும் ஐயன் கோயிலுந் திருமுற்றமும் கொட்டகாரமும் வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும் பறைச்சேரியும் ஈழச்சேரி யும் ஆக இறைஇலி நீங்கு நிலம் ஒன்றரையே இரண்டு மா . . . . முந்திரிகைக்கீழ் அரையே ஒருமா அரைக் காணி முந்திரிகைக்கீழ் நான்கு மா நீக்கி;

நிலம் நாற்பதே முக்காலே முக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே இருமாவரை முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மாவினுல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக் கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு நாலாயிரத் தெழுபத் திருகலனே குறுணி எழு நாழி;

இன்னுட்டுப் பாச்சிற் கூற்றத்துக் கீழ்பலாற்றுப் பணமங் கல வனகரைப் பற்றுச் சாத்தந்பாடி;

அளந்தபடி நிலம் பத்தொன்பதே ஒருமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மா முக்காணி அரைக் காணிக்கீழ் எட்டு மாவிலும்;

ஊர் நத்தமும் பறைச்சேரியும் இவ்வூர் நிலத்தை யூட றுத்துப் போய்ப் புறவூர்களுக்கு நீர் பாயும் பைங் கேணி வாய்க்காலாலும் ஆக இறையிலி நீங்கு நிலம்

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

நான்கு மாக்காணி அரைக்காணிக்கீழ் முக்காலே ஒரு மா நீக்கி;

நிலம் பதினெட்டே முக்காலேய் ஒருமா முக்காணிக் கீழ் எட்டு மா முக்காணி அரைக்காணிக்கீழ் எட்டு மாவினால்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக் கும் ஆடவல்லானென்னு மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு ஆயிரத் தெண்ணூற்று எண்பத்து முக்கலனே இருதூணி முக்குறுணி;

இந்நாட்டுப் பாச்சிற் கூற்றத்து கீழ்பலாற்று செம் ..... ப்பற்று ....... க்கன்குடி;

அளந்தபடி நிலம் நான்கே முக்காலே இரண்டு மா முக்காணிக்கீழ் ஆறு மா முக்காணிக்கீழ் மூன்று மா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும்;

ஊர்நத்தமும் ஈழச்சேரியுங் கொட்டகாரமும் பறைச் சேரியுமாக இறையிலி நீங்குந் நிலம் மும்மாவரை முந்தி ரிகைக்கீழ் நான்கு மா வரைக்காணிகீழ் முக்காலே இருமாவரை முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மா நீக்கி ;

நிலம் நான்கரையே நான்கு மா அரைக்காணி முந்தி ரிகைக்கீழ் இருமாவரை முந்திரிகைக்கீழ் காலே அரை மா முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மாவினால்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக் கும் ஆடவல்லானென்னு மரக்காலால் அளக்கக் கடவ நெல் நானூற்று அறுபத்து ஒன்பதின் கலனே தூணி ஒரு நாழி ;

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

இந்நாட்டுக் கலாரக் கூற்றத்து மாந்தோட்டம்;

அளந்தபடி நிலம் பதினேஞ்சரையே காணி அரைக் காணி முந்திரிகைக்கீழ் அரையே மும்மாவரை முந்திரி கைக்கீழ் அரையே இரண்டு மாவிலும்;

ஊரிருக்கையும் இவ்வூர்க் களமும் கம்மாண சேரியும் இவ்வூர்ப் பறைச்சேரியும் இவ்வூர் அகையாறும் ஆக இறையிலி நீங்குந் நிலம் முக்காலே நான்கு மா அரைக் காணிக்கீழ் எழுமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மா நீக்கி;

நிலம் பதினன்கரையே மா காணி முந்திரிகைக்கீழ் ஆறு மாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டு மாவினல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக் கும் ஆடவல்லானென்று மரக்காலால் அளக்கக்கடவ நெல் ஆயிரத்து நாநூற்று ஐம்பத்து அறுகலனே ஐங்குறுணி எழு நாழி;

இந்நாட்டு கலாரக் கூற்றத்து இறையான்சேரி;

அளந்தபடி நிலம் பன்னிரண்டரையே இருமாவரை முந்திரிகைக்கீழ் காலே முக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவிலும்;

ஊர்நத்தமும் குடியிருக்கையும் பறைச்சேரியும் இவ் வூரை ஊடறுத்துப் போய் புறவூர்க்கு பாயும் வாய்க் கால் கண்ணன் வாய்க்கால் நீரோடுகாலாலும் இவ்வூர் ஊர்க்களத்தாலும் இவ்வூர்க் குளமுங் கரையும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமும் இத்தேவர் திரு மஞ்சனக் குளமும் ஆக இறையிலி நீங்கு நிலம் முக் காலே இரண்டு மாக்காணி அரைக்காணிக்கீழ் அரையே

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

மூன்று மாவின்கீழ் மூன்று மா அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காணிக்கீழ் முக்காலே ஒரு மா நீக்கி;

நிலம் பதிஞென்றே முக்காலே அரைக்காணிக் கீழ் அரையே இரண்டு மா முக்காணிக்கீழ் அரையே இரண்டு மா முக்காணிக்கீழ் முக்காலே நான்கு மா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிஞல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல் ஆயிரத்தொருநூற்று அறுபத்தொன்பதின் கலனே இரு தூணி இரு நாழி உரி;

இந்நாட்டு வெண்கோன்குடிக் கண்டத்து வெண்கோன்குடி;

அளந்தபடி நிலம் ஐம்பதே எழு மாக்காணிக்கீழ் முக்காலே ஒரு மாவிலும்;

ஊர் நத்தமுங் குடியிருக்கையும் ஊருணி குளமுங் கன்று மேய் பாழாக கிடந்த நிலமுங் கண்மாணசேரி குடியிருக்கையும் பிடாரி கோயிலுந் திருமுற்றமும் வெள்ளான் சுடுகாட்டுக்கு போம் வழியும் வெள்ளான் சுடுகாடும் பறைச் சுடுகாடும் களமாய்க் கிடந்த நிலமும் ஐய்யன் கோயிலுந் திருமுற்றமும் உழப்பறையரிருக்கும் கீழைச் சேரியும் பெருவ .... கரையும் உழப்பறையர் இருக்கும் மேலைப் பறைச்சேரியும் இவ்வூர் நிலத்தாறே யூடறுத்துப்போன் நாட்டார் வாய்க்காலும் ஆக இறையிலி நீங்கு நிலம் இரண்டேகாலே காணிக்கீழ் ஒருமாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மா நீக்கி;

நிலம் நாற்பத்தெட்டே இரண்டு மாவின் கீழ் அரையே

நான்கு மாக்காணிக்கீழ் எட்டு மாவினுல் இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லா னென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல் நாலா யிரத்து எழுநூற்று எண்பத்து நாற்கலனே இரு தூணி அறு நாழி;

இந்நாட்டு வெண்கோன்குடிக் கண்டத்து மாகாணிகுடி;

அளந்தபடி நிலம் இருபத்து மூன்றறையே மூன்று மா அரைக்காணிக்கீழ் காணி அரைக்காணிக்கீழ் எட்டு மாவிலும்;

ஊரிருக்கையும் ஊர்க்களமும் இவ்வூர்க்காளர் பிடாரி யார் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் பிடாரியாரிது தெங்கு மரம் நின்ற நந்தாவனமும் இவ்வூரை ஊடறுத்துப் புறவூர்களுக்கு நீர் பாயும் வாய்க்காலாலும் ஈழச்சேரி யும் வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும் பறைச் சேரியும் ஆக இறையிலி நீங்கு நிலம் ஒன்பது மா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் ஒன்பது மா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மா நீக்கி;

நிலம் இருபத்து மூன்றே மூன்று மா அரைக்காணிக் கீழ் அரையே ஒருமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவினுல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக் கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல் இரண்டாயிரத்து முந்நூற்று ஒரு பத்து ஐங் கலனே குறுணி;

இந்நாட்டு செம்புறைக் கண்டத்து சிறுசெம்புறை;

அளந்தபடி நிலம் ஆறரையே மும்மாவரை முந்திரி

கைக்கீழ் அரையே நான்கு மா முக்காணி அரைக்காணி முந்திரிகையிலும் ;

ஊரிருக்கையுங் கொட்டகாரமும் மாதேவர் இருந்த திடலுங் கண்ணன் வாய் நின்றும் இவ்வூர் நிலத்தாறே குறங்கறுத்துப் புறவூர்க்கு நீர் பாயும் வாய்க்காலும் வெள்ளான் சுடுகாடுங் கண்மாண சேரியும் பறைச் சேரியும் பறைச்சுடுகாடும் ஆக இறையிலி நீங்கு நிலம் எழு மாக்காணிக்கீழ் எழுமாவரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்கு மா நீக்கி ;

நிலம் ஆறே அறு மாக்காணி முந்திரிகைக்கீழ் எழுமா வரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே ஒரு மாவினுல் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக் கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல் அறுநூற் றிருபத் திரு கலனே பதக்கு ;

இந்நாட்டுப் பாச்சில் கூற்றத்துக் கீழ்பலாற்றுத் துறை யூர் ;

நிலன் நூற்றைம்பத் திரெண்டே முக்காலே அரைக் காணி முந்திரிகைக்கீழ் அரையே மூன்று மாக்காணிக் கீழ் முக்காலே மூன்று மா முக்காணியிலும் ;

இவ்வூர் நத்தம் குடியிருக்கையும் கிணறும் தொட்டியும் வெள்ளான் சுடுகாடும் கொட்டகாரங்களும் தலைவாய்ச் சேரியும் ஈழச்சேரியும் கம்மாணசேரியும் பறைச்சேரியும் பறைச் சுடுகாடும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போய்ப் புறவூர்களுக்கு நீர் பாயும் வாய்க்காலும் பிடாரி புன்னைத்துறை நங்கை கோயிலுந் திருமுற்றமும்

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

பிடாரி பொதுவகை ஊருடையாள் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் இவ்வூர்க் காடுகாள் கோயிலுந் திருமுற்றமும் இவ்வூர் துர்க்கையார் கோயிலுந் திருமுற்றமும் இவ்வூர் எருடு கடக்கும் இவ்வூர்க்காளர் பிடாரியார் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமும் ஐயன் கோயிலுந் திருமுற்றமும் இவ்வூர்ப் பிடாரி குதுரைவட்டமுடையாள் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமும் இவ்வூர்க் குளமுங் கரையும் ஆக இறையிலி நீங்கு நிலன் மூன்றே காணி அரைக்காணிக்கீழ் முக்காலே இரண்டு மா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் எழுமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மா நீக்கி;

நிலன் நூற்று நாற்பத் தொன்ப தரையே நான்கு மா முக்காணிக்கீழ் முக்காலே காணி முந்திரிகைக்கீழ் அரையே ஒரு மா வரைக்கீழ் முக்காலே ஒரு மாவினுல்;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லுப் பதிநாலாயிரத் தெண்ணூற்று எண்பத் தெண் கலநே தூணிப் பதக் கொரு நாழி;

இந்நாட்டுக் காரிமங்கலம்;

நிலன் பதினொன்றே ஒன்பது மாக்காணிக்கீழ் முக்காலே முக்காணி முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மாவிலும்;

இவ்வூர் நத்தமும் களமும் வெள்ளான் சுடுகாடும் பிடாரி திருவாலுடையாள் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமுங் காடுகாள் கோயிலுந் திருமுற்றமும் ஈழச்சேரியும் கம்மாண சேரியும் பறைச்சேரியும் பறையர் சுடுகாடும் ஆக இறையிலி நீங்கு நிலன் எழுமாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே அரை மாவிந் கீழ் ஆறு மாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டு மா நீக்கி;

நிலன் பதினொன்றே ஒரு மாவரை முந்திரிகைக்கீழ்க் காணி முந்திரிகைக்கீழ் காலே அரைமா முந்திரிகைக் கீழ் அரையே இரண்டு மாவினுல் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு ஆயிரத்தென்பத்து முக்கலனே ஐஞ்ஞாழி ;

நீத்தவினோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து நகரம் வெண்ணி நிலன் ;

இருபத்தொன்றரையே அரைக்காணிக்கீழ் எட்டு மா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவிலும் ;

இவ்வூர் இருக்கையும் குளங்களும் கரைகளும் திருக்கோயிலும் ஐயன் கோயிலும் பறைச்சேரியும் சுடுகாடும் சிறுமுன்னியூரேரியில் நீர் கோத்துப் பள்ளவாயாக கிடந்த நிலமும் ஆக இறையிலி நீங்கு நிலன் நாலே அரைக்காணிக்கீழ் இருமாவரை நீக்கி ;

நிலன் பதினேழரையின்கீழ் ஆறுமாக்காணிக்கீழ் முக்காலே ஒரு மாவினுல் பொன் தொண்ணூற்று முக் கழஞ்சே மூன்று மஞ்சாடியு நாலு மாக்காணியும்;

இவ்வூரோடும் ஏறின இந்நாட்டுப் பூதமங்கலம் நிலன் இருபத்தைஞ்சே முக்காலே இருமாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே மூன்று மா முக்காணி அரைக்காணிக்கீழ் அரையிலும் ;

குளமுங் கரையும் சுடுகாடும் பறைச்சேரி நத்தமும் ஊர் நத்தமும் ஆய் இறையிலி நீங்கு நிலன் அரையே நாலு மா முக்காணி முந்திரிகைக்கீழ் ஒன்பது மா முக்காணி முந்திரிகை நீக்கி ;

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

நிலன் இருபத்தைஞ்சே இரண்டு மா முக்காணி அரைக் காணிக்கீழ் ஒன்பது மா முந்திரிகைக்கீழ் அரையினல் பொன் இரு நூற்று நாற்பத்தறு கழஞ்சரையே மூன்று மா முக்காணியும் ;

இவ்வூரோடும் ஏறின இந்நாட்டுப் பூதமங்கலத்துப் பால் மீது வேலி நிலன் மூன்றே காலின்கீழ் எட்டு மா விலும் ;

ஊர் நத்தத்தால் இறையிலி நீங்கு நிலன் நாலு மாக் காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே இரு மாவரை முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மா நீக்கி ;

நிலன் மூன்றே அரைமாவின்கீழ் அரையேகாணி அரைக் காணிக்கீழ் எட்டு மாவினல் ;

பொன் முப்பதின் கழஞ்சே காலே மூன்று மா முக் காணியும் ;

இவ்வூரோடும் ஏறின இந்நாட்டு நகரக் காரிகுறிச்சி நிலன் இரண்டே முக்காலே ஒரு மா முக்காணி அரைக் காணி முந்திரிகைக்கீழ் ஆறு மா அரைக்காணி முந்திரி கைக்கீழ் நான்கு மாவினல் பொன் இருபத்தெண் கழஞ்சே ஒன்பது மஞ்சாடியும் எழுமா வரையும்;

இவ்வூரோடும் ஏறின இந்நாட்டு வடதாமரை நிலன் ஆறே முக்காலே இரண்டு மாக்காணிக்கீழ் அரையே அரை மா முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மாவி லும் ;

ஊர்நத்தமாய் இறையிலி நீங்கு நிலன் இரண்டு மா அரைக்காணி முந்திரிகைக்கீழ் எட்டு மா நீக்கி ;

நிலன் ஆறே முக்காலே முந்திரிகைக்கீழ் இருமாவரை முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மாவினுல்;

பொன் அறுபத்து நாற் கழஞ்சே முக்காலே மஞ்சாடியும் எட்டு மா முக்காணியும்;

இவ்வூரோடும் ஏறின இந்நாட்டு வெண்ணித் திறப்பான் பள்ளி;

நிலன் பத்தரையே இரண்டு மாக்காணி அரைக்காணிக் கீழ் அரையே இரண்டு மாக்காணிக்கீழ் முக்காலே ஒரு மாவிலும்;

குளமுங் கரையும் சேட்டை கோயிலும் ஊர் நத்தமும் ஆய் இறையிலி நீங்கு நிலன் இரண்டரையே நாலு மா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே மூன்று மாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டு மா நீக்கி;

நிலன் ஏழே முக்காலே இரண்டு மாக்காணி அரைக் காணிக்கீழ் அரையே மூன்று மா முக்காணி அரைக் காணிக்கீழ் எட்டு மாவினுல் பொன் எழுபத்தெழு கழஞ்சே முக்காலே மஞ்சாடியும்;

ஆக வெண்ணியும் பூதமங்கலமும் பூதமங்கலத்துப்பால் மீதுவேலியும் நகரக் காரிகுறிச்சியும் வடதாமரையும் வெண்ணி திறப்பான் பள்ளியும் உட்பட நிலன் எழுபதே முக்காலே நான்மாவரை முந்திரிகைக்கீழ் நான்கு மா முக்காணிக்கீழ் முக்காலே முன்று மாவிலும்;

இறையிலி நீங்கு நிலன் ஏழே முக்காலே ஒரு மாவரை அரைக்காணிக்கீழ் முக்காலே மா காணி முந்திரிகைக் கீழ் நிலன் அறுபத்து மூன்றே இரண்டு மா முக்காணி அரைக்காணிக்கீழ் எட்டு மாக்காணி அரைக்காணி முந்

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

திரிகைக்கீழ் முக்காலே மூன்று மாவினால் ;

இறை கட்டின பொன் ஐஞ்ஞூற்று நாற்பத்தொரு கழஞ்சே மஞ்சாடியும் எட்டு மா ;

அருமொழிதேவ வளநாட்டுத் தக்களூர் நாட்டுச் சாலா போகங் கொடிமங்கலம் ;

நிலன் ஐம்பத்து மூன்றே காலே அரை மா முந்திரிகைக் கீழ் அரையே மூன்று மா அரைக்காணியிலும் ஊர் நத்தமுங் குளமும் ஸ்ரீகோயிலும் தீண்டாச் சேரியும் ஆக இறையிலி நீங்கு நிலன் இரண்டரையே ஒரு மா வரை அரைக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவரை முந் திரிகைக்கீழ் அரையே இரண்டு மாவும் ;

இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போய் திருமின்குன்றத் துக்குப் பாயப்போன வாய்க்காலால் இறையிலி நீங்கு நிலன் இருமாவரை அரைக்காணியும் ;

இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போய்ப்பருத்தியூர்க்குப் பாயும் வாய்க்கால்களால் இறையிலி நீங்கு நிலன் முக் காணி அரைக்காணிக்கீழ் அரையே இரண்டு மா முக் காணிக்கீழ் முக்காலே ஒரு மாவும் ;

ஆக இறையிலி நீங்கு நிலன் இரண்டே முக்காலே அரைக்காணி முந்திரிகைக்கீழ் ஒன்பது மாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டு மா நீக்கி ;

நிலன் ஐம்பதரையே காணி அரைக்காணிக்கீழ் மும்மா வரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மாவினால் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு ஐய்யாயிரத் தைம்பத் தொரு கலனே இரு தூணி முக்குறுணி நானாழி ;

அருமொழிதேவ வளநாட்டுத் தக்களூர் நாட்டு நகரம் வெநேல்விடுகு பல்லவபுரம் ;

அளந்தபடி நிலன் இருபத்தேழே முக்காலே மும்மா வரைக்கீழ் அரையே அரைமாவின்கீழ் எட்டு மாவிலும் ;

இவ்வூர் ஊரிருக்கையும் பறைச்சேரியும் கம்மாண சேரியும் ஊரின் நடுவுபட்ட குளமும் புலத்திற் குளமுங் கரையும் இவ்வூர்த் திருவடிகள் ஸ்ரீகோயிலும் நந்தவானமும் பாண்டவாய்க்குலையும் இவ்வூர்ப் புகழீச்வரகிருஹத்து தேவர் ஸ்ரீ கோயிலுந் திருமுற்றமுந் தளிச்சேரியுஞ் சுடுகாடும் ஆக இறையிலி நீங்கு நிலன் ஏழரையே இருமாவரை முந்திரிகைக்கீழ் அரையே நான்குமா முக்காணி அரைக்காணிக்கீழ் எட்டு மா நீக்கி நிலன் இருபதே காலே முக்காணி அரைக்காணிக்கீழ் முக்காலே அரைமா அரைக்காணியினால் ;

இறை கட்டின பொன் நூற்றறுபத்தெழு கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் இருமாவரை ;

---

இக்கல்வெட்டு விமானத்தின் வடபுறச் சுவரில் உள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 5 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த ஊர்கள்

ஸ்வஸ்தி ஸ்ரீ :

தொண்டை நாடான ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஒய்மா நாட்டுப் பேராயூர் நாட்டுப் பேராயூர் ;

முன்னுடையாரை மாற்றிக் குடிநீக்கிக் காராண்மை மீய்காட்சியும் மிகிதிக் குறைமையும் உள்ளடங்க இவ் வூர் இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோ டொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக் கக்கடவ நெல்லு . . . . . . . . ரண் . . . . . . . . . . தறு கலநே . . . . . . . . முநாழி, பொன் நூற்றெரன்பதின் கழஞ்சே ஒன்பது மஞ்சாடியு மூன் . . . . . . ;

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ;

முன்னுடையாரை மாற்றிக் குடிநீக்கிக் காராண்மை மீய்காட்சியும் மிகிதிக் குறைமையும் உள்ளடங்க இவ் வூர் இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோ டொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக் கக்கடவ நெல்லு . . . . . . . . . ; பொன் இருநூற் றிரு கழஞ்சேய் பதின்மூன்று மஞ்சாடியும் ஒரு மா முக்காணி ;

பாண்டி நாடான ராஜராஜ மண்டலத்துப் பெரும்பூர் நாட்டு அண்டக்குடி ;

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

முன்னுடையாரை மாற்றிக் காராண்மை மீய்காட்ச்சியும் மிகுதிக் குறைமையும் உள்ளடங்க வெள்ளான் வகை மு . . . . . . . பழவிறையும் முதல் தவிர்ந்து இவ்வூர் நிலன் பதினுறரையே நான்கு மா முக்காணிக்கீழ் அரையினுல் இறை கடனும் . . . . . . . வு கோல் நிலன் காசும் காட்ச்சிஎருது காசும் ஊர்க்கழஞ்சு காசும் உட்பட இவ்வூர் இறை கட்டின காணிக்கடன் ராஜ கேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்கா லால் அளக்கக்கடவ நெல்லு நூற்றிருபத்து முக்கலனே எழுகுறுணி எழு நாழி, காசு இரு நூற்று எண்பத்து நான்கரையே இரண்டு மாக்காணி அரைக்காணி ;

கங்கபாடிப்பதி நாட்டு ஆலூர் ;

முன் உடையாரை மாற்றிக் காராண்மை மீய்காட்ச்சி யும் மிகுதிக்குறைமையும் உள்ளடங்க இவ்வூர் இறை கட்டின . . . . . . ஐஞ்ஞூற்றுக் கழஞ்சு ;

கங்கபாடி . . . நாட்டு இ . . . . . . மூர் ;

முன்னுடையாரை மாற்றிக் காராண்மை மீய்காட்ச்சி மிகுதிக்குறைமையும் உள்ளடங்க இறை கட்டின பொன் ஐஞ்ஞூற்றுக் கழஞ்சு ;

நுளம்பபாடியான நிகரிலிசோழபாடிப் பறிவை நாட்டுத் தேவதான பிரம்மதேயம் குசலூர் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக் கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல்லு ஒன்பதிநாயிரத்து . . . . . பத்துநாற்க . . . . . ;

. . . . . . . . . . . . பாடியான நிகரிலிசோழபாடிப் பறிவை நாட்டுத் தேவதான பிரம்மதேயம் கூடலூர் ;

இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல்லு பன்னீராயிரத்து எண்ணூற்று நாற்பத்து இரு கலனே இ . . . . . . . . பொன் . . . . . . ;

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ;

. . . . . . . . . . ய்காட்ச்சியும் மிகுதிக்குறைமையும் உள்ளடங்க . . . . . . . . . . ;

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . றார் ;

முன் உடையாரை மாற்றிக் காராண்மை மீய்காட்ச்சி மிகுதிக்குறைமையும் உள்ளடங்க இட்டது ;

மலைநாட்டு வெள்ளப்ப நாட்டுப் புதுக்கொடு ;

முன் உடையாரை . . . . . . . . மயும் உள்ளடங்க . . . . . மலைநாட்டு வெள்ளப்ப நாட்டு . . . . . ;

. . . . . . ய்காட்ச்சியும் மிகுதிக்குறைமையும் உள்ளடங்க இட்டது ;

ஈழமான மும்மடிசோழ மண்டலத்து மாப்பிசும்பு கொட்டியாரமான ராஜராஜ வளநாட்டு . . . . . . . . . ;

. . . . நூற் . . . . . . . . . பாயப்பாகாடி தருண்டுவச்சாலுட்பட இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல்லு மூவாயிரத்து ஒருநூற்று அறுபத்து நாற்கலனே இரு தூணி இரு நாழி, காசு பன்னிரண்டரை, இலுப்பைப் பால் இருகலனே . . . . . க்கு ;

ஈழமான மும்மடிசோழ மண்டலத்து மாப்பிசும்பு கொட்டி

குடுத்த ஊர்கள் (தொடர்ச்சி)

யாரமான ராஜராஜ வளநாட்டு . . . . . . ;

நிலன் பத்தொன்பதே காலிநால் பாவுமனைத்தும் பாயப் பாகாடி தருண்டுவச்சாலுட்பட இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லா னென்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல்லு நூற்று ஒருபத்து எழு கலனே இரு தூணி முக்குறுணி இரு நாழி, காசு இருபத்திரண்டு, இலுப்பைப் பால் முக் கலனே குறுணி நாஞழி ;

ஈழமான மும்மடிசோழ மண்டலத்து மாப்பிசும்பு கொட் டியாரமான ராஜராஜ வளநாட்டு . . . . . . நட்டு விட்டி;

நிலன் நூற்று எண்பத்து மூன்றே மூன்று மாவினுல் பாவுமனைத்தும் . . . . . . ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மர . . . . . . று பத்தாறு, இலுப் பைப்பால் நாற் கலனே அறுநாழி ;

ஈழமான மும்மடிசோழ மண்டலத்துக் கணக்கன் கொட்டி யாரமான விக்கிரமசோழ வளநாட்டு மாசார் ;

நிலன் முன்னூற்றைம்பத்து மூன்றே இருமாவரையி ஞல் பாவுமனைத்தும் பாயப்பாகாடி . . . தருண்டுவச்சா லும் உட்பட . . . நானூற்றைம்பத்தெட்டே முக்கால்;

ஈழ . . . . . . . . . . . ான விக்கிரமசோழ வளநாட்டு இ . . . ண . . . ல் ;

நிலன் . . . . . . . இருப . . . . . ஒரு மா வரையினுல் பாவு மனைத்தும் பாயப்பாகாடி தருண்டுவச்சா . . . . . .

---

இக்கல்வெட்டு விமானத்தின் தென்புறச் சுவரில் உள்ளது. தென் னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 92 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீராஜராஜ தேவர் திருவிளக்குக் குடுத்தவை

ஸ்வஸ்தி ஸ்ரீ :

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கைநாடுங் கங்கபாடியு நுளம்பபாடியுந் தடிகைபாடி யுங் குடமலைநாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வள ரூழியுளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசு கொள்,

மன்னன் :

கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு,

ஆண்டு :

யாண்டு இருபத்தொன்பதாவது வரை,

திருவிளக்குக் குடுத்தவை :

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்குத் திருவிளக் குக்கு,

உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டிலுங், குடுத்தார் குடுத்த கால்மாட்டிலுங்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

காசு குடுத்து முதலான கால்மாட்டிலும்,
திருவிளக்குக்கு நெய் அளக்கக் கடவர்களாக இடையர் வழி
திருவிளக்கு ஒன்றினுக்கு,
ஆடு தொண்ணூற் றுருகவும்,
பசு நாற்பத் தெட்டாகவும்,
எருமை பதிநாறுகவும்,
இவையிற்றுக்கு பசுவின் கன்றும், எருதும், பசுச் சார்த்திக் குடுத்தன பசுவாகவும்,
ஆட்டுக்குட்டியுங் கிடாயும் ஆடு சார்த்திக் குடுத்தன ஆடாகவும்,
எருமைக்கன்றுங் கிடாவும் எருமை சார்த்திக் குடுத்தன எருமையாகவும்,
மாடடுத்து, மாடு கொண்ட இடையரும்,
இவர்கள் உறவு முறையாய் அடைகுடிகளானரும்,
இவர்கள் அடைகுடிகளுந்,
திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடவல்லாநால் நிசதம் நெய் உழக்காகத்,
தாங்களுந், தங்கள் வர்க்கத்தாரும் சந்திராதித்யவத் உடையார் பண்டாரத்தே நெய் அளக்கக் கடவர்களாக கல்லில் வெட்டினபடி,
உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் திருவிளக்குக்கு அடுத்தபடி;

தஞ்சாவூர்ப் புறம்படி காந்தர்வத் தெருவில் இருக்கும் இடையன் சூற்றி பாக்கரநுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தாநும்,
இவன் அடைகுடி இவன் உடன் பிறந்த சூற்றி நாரணனும், சூற்றி சீராளநும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

சிற்றப்பன் மகன் சோலை குரவனும்,
வடகரைக்குன்றக் கூற்றமான உத்துங்கதுங்க வளநாட்டு பழுவூர் இருக்கும் இடையன் தாழி நெத்தானனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவினோத வளநாட்டு நல்லூர் நாட்டுப் பெருங்கறை இருக்கும் இடையன் ஆனை சாத்தனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன் பிறந்த ஆனை செல்வனும்,
நித்தவிநோத வளநாட்டுக் கரம்பை நாட்டுக் குந்தவை நல்லூர் இருக்கும் இடையன் பிரமன் செவ்வாய் மணியும்,
இவ்வூர் இருக்கும் இடையன் பரமன் பட்டனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் ஆச்சன் நக்கனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி மடைப்பள்ளித் தெருவில் இருக்கும் இடையன் பனையன் தெற்றிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த பனையன் வெண்காடனும்,
இத்தெருவில் இருக்கும் இடையன் கொன்றை நீலனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி ராஜவித்யாதரப் பெருந்தெருவில் இருக்கும் இடையன் ஊரன் வேம்பனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு மீசெங்கிளி நாட்டுக் காவநூர் இருக்கும் இடையன் நீலன் அங்காடியும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு மீசெங்கிளி நாட்டுக் கிள்ளிகுடி இருக்கும் இடையன் நக்கன் பூதிக்கு,

*திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)*

அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றிநுக்கு,
இவன் தாநும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த நக்கன் தூதுவநும்
உடன்பிறந்தான் மகன் காளி நக்கநும்,
தஞ்சாவூர்ப் புறம்படி உத்தமசீலியார் வேளத்து இருக்கும்
இடையன் மருவூர் அரையநும்,
தஞ்சாவூர்ப் புறம்படி வீரசோழப் பெருந்தெருவில் இருக்கும் இடையன் சுவரன் அனந்தநும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டுப் பொயிற் கூற்றத்துக் கொற்றமங்கலத்து இருக்கும் இடையன் ஊரநாட்டாநுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றிநுக்கு,
இவன் தாநும்,
இவன் அடைகுடி இவன் உடன் பிறந்த ஊரன் மருதநும்,
ஊரன் கொணேயும் ஊரன் குன்றநும்,
தந் பேரப்பன் மகன் பூதி திருவநும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி வீரசோழப் பெருந்தெருவில் இருக்கும் இடையன் வடுகன் கணவதிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றிநுக்கு,
இவன் தாநும்,
இவன் அடைகுடி இவன் உடன் பிறந்த வடுகன் பிசங்கநும்,
உடன்பிறந்தான் மகன் பிசங்கன் சூற்றியும் வேம்பன் . . .
நும்,
ராஜராஜ வளநாட்டுத் தெங்கம்பூண்டியான சத்யாச்ரய குலகாலச் சதுர்வேதி மங்கலத்து இருக்கும் இடையன் பூதி அடிகளும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

தஞ்சாவூர்ப் புறம்படி வில்லிகள் தெருவி லிருக்கும் இடையன் மாயான் சூற்றிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் சூற்றி தூதுவனும்,
உடன் பிறந்த மாயா நூரநும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பிரம்பில் இருக்கும் இடையன் நீங்காநிலை கூனனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி ராஜவித்யாதரப் பெருந்தெருவில் இருக்கும் இடையன் கணிச்சன் திருமலையும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி மடைப்பள்ளித்தெருவில் இருக்கும் இடையன் அரட்டன் திருவடிகளுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தாநும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த அரட்டன் சந்தநும்,
அரட்டநாகனும்,
நன்மச்சுனன் அண்ணகாமடியனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து ஓதவேலி இருக்கும் இடையன் குரங்கன் தேவனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டுப் பொயிற் கூற்றத்துப் பாச்சிலிருக்கும் இடையன் ஆலத்தூருழவனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தாநும்,
இவன் அடைகுடி இவன் சிற்றப்பன் உழவன் தொங்கநும்,
உழவன் மூப்பநும்,
பேரப்பன் மகன் சேந்தன் சாக்கூரும்,
அருமொழிதேவ வளநாட்டு நென்மலி நாட்டுக் கோட்டூர்

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இருக்கும் இடையன் தண்ணலன் வன்னியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

ராஜராஜ வளநாட்டுப் பொயிற் கூற்றத்துக் கொற்றமங்
மலத்து இருக்கும் இடையன் காரி சாத்தநுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தாநும்,
இவன் அடைகுடி இவன் மகன் சாத்தன் காரியும்,
உடன் பிறந்த காரி சாத்தனுங். காரி கட்டியும்,
உடன் பிறந்தான் மகன் வெட்டி காரியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி அபிமாநபூஷணத் தெரிந்த வேளத்து
இருக்கும் இடையன் நக்கன் சாத்தனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றிநுக்கு,
இவன் தாநும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த நக்கன் குமரனும்,
நக்கன் நக்கனும், நக்கன் கண்டனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு மீசெங்கிளி நாட்டுக் கோயில்
நல்லூர் இருக்கும் இடையன் சிங்கன் பரமடியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டு இளம்புலிவாய் சுற்றிய பெரும்புலி
வாயிலிருக்கும் இடையன் நக்கன் அரையனுக்கு
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் சிற்றப்பன் குருடன் கணவதியும்,
பேரப்பன் மகன் அமரன் மூவரையனும்,
நன்மாமன் அரையன் கடுவூரும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்செங்கிளி நாட்டு மங்
கலநல்லூர் இருக்கும் இடையன் எறன் மண்ணியும்,

திருவிளக்குக் குடித்தவை (தொடர்ச்சி)

ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டு இளம்புலிவாய் சுற்றிய பெரும்புலி வாயிலிருக்கும் இடையன் அரையன் தூதுவனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றிநுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த அரையன் உறையூரனும், அரையன் சடையனும், அரையன் தான்றியும்,
ராஜராஜ வளநாட்டு பிரம்மதேயம் உப்பூராந ரட்டகுலகாலச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் ஆமாயில் வீரனும்,
ஆடவல்லாநால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டார் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் தாழி ஆச்சனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த மூத்ததாழி குப்பையும்,
இளையதாழி குப்பையும், தாழி குருடனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டார் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் காரி எறனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்சக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்துக் கோட்டையூர் இருக்கும் இடையன் பழியன் குமரனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த பழியன் கோட்டை

யும், பழியன் இராமனும், பழியன் அரங்கனும்,
நன்மாமன் கணத்தான் வேளதரையனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டு கீழ்வேங்கை நாட்டு ராஜவித்யாதர நல்லூர் இருக்கும் இடையன் சாத்தன் களரிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் களரி . . . . . . றநும்,
ராஜராஜ வளநாட்டு கீழ்வேங்கை நாட்டு சுந்தரசோழ நல்லூர் இருக்கும் இடையன் காரி கண்டனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் நக்கன் பட்டனும்,
இன்னாட்டு நம்பன்காரை இருக்கும் இடையன் என்பான் காடனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டுக் கமுகஞ் சேந்தன்குடி இருக்கும் இடையன் வேம்பநாச்சனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவ்வூர் இருக்கும் இடையன் வண்ணக்கன் பனங்காடனும்,
ராஜராஜ வளநாட்டுப் பொயிற் கூற்றத்துப் பாச்சில் இருக்கும் இடையன் நக்கன் சூரனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் நக்கன் அரையனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் குருந்தன் தான்றியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் விளக்கன்

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

அணுக்கனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் பேரப்பன் மகன் புலியூர் சேரியும், நன்மச்சுனன் ஐய்யாறன் தளியனும்,
ராஜராஜ வளநாட்டுப் பொயிற் கூற்றத்து அழகிய சோழ புரத்து இருக்கும் இடையன் பராந்தகன் அரங்கனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுப் புன்றிற் கூற்றத்துச் சாத்த மங்கலத்து இருக்கும் இடையன் கண்டன் கருவேலனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்சூதி நாட்டுக் குறுக்கை இருக்கும் இடையன் செட்டி நா . . . . . . னுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த செட்டி காடனும், சிற்றப்பன் மகன் நந்நன் நீலநும்,
இன்னாட்டு வடவாயிடத் திருக்கும் இடையன் பட்டன் எட்டியுந்,
தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திரு மஞ்சனத்தார் வேளத்திருக்கும் இடையன் கூடல்காரியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு மீய்பொழி நாட்டுக் கோயில் நல்லூர் இருக்கும் இடையன் தேவனரங்கனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் அரங்கன் சாத்தனும், அரங் கன் சேந்தனும்,

*திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)*

சிற்றப்பன் மகந் சாத்தன் அமரனும்,
இந்நாட்டுக் கீழ்கூதி நாட்டு வடவாயிடத்து இருக்கும் இடையன் சாத்தநாகனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

ராஜராஜ வளநாட்டுப் பொயிற் கூற்றத்துக் கொற்றமங் கலத்து இருக்கும் இடையன் தேவனுரணனுக்கு,
அடுத்த பசு நாற்பத்தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த தேவனுழவனும்,
தேவன் பட்டனும்,
உடன் பிறந்தான் மகன் பட்டன் குன்றனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் நக்கன் முன்னூற்றுவனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

ராஜராஜ வளநாட்டு பொயிற் கூற்றத்து . . . . . இடையன் தாழி குளவனுக்கு,
அடுத்த பசு நாற்பத்தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த தாழி பொன்னக்கனும், தாழி தேவனும், தாழி குன்றனும்,
சிற்றப்பன் காரி ஆச்சனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

ராஜராஜ வளநாட்டு இளம்புலிவாய் சுற்றிய பெரும்புலி வாயில் இருக்கும் இடையன் திருவூறல் நக்கனுக்கு,
அடுத்த பசு நாற்பத்தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த திருவூறல் சூற்றியும்,
இன்னுட்டுப் புலிவலக் கூற்றத்து திருபுவனத்திருக்கும் இடை

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

யன் கழனி சுவரனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் சுவ . . . . க . . . . . யும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுப் புன்றிற் கூற்றத்துச் சாத்தமங்கலத்து இருக்கும் இடையன் குருந்தன் வேம்பனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்திருக்கும் இடையன் சுரும்பன் காளிக்கு,
அடுத்த பசு நாற்பத்தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவ்வேளத்து இருக்கும் இடையன் குருந்தன் முனைப்பகையும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் பகையன் திறலனும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் பகையன் காளியும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுப் பனங்காட்டு நாட்டுப் பெருஞ்சோலை இருக்கும் இடையன் சாத்தன் சிறுகொள்ளியும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு எரியூர் நாட்டுக் கருவுகல்வலத்திருக்கும் இடையன் குமரன் சங்கனுக்கு,
அடுத்த பசு நாற்பத்தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த குமரன் சூற்றியும்,
குமரன் இராமனும், குமரன் பனையனும்,
இன்னாட்டு விண்ணனேரியான மும்மடிசோழ நல்லூர் இருக்கும் தண்ணலன் வைகுந்தனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

திருவிளக்குக் குடித்தலை (தொடர்ச்சி)

பாண்டியகுலாசநி வளநாட்டு சுண்டைமூலை நாட்டுக் கொற்ற மங்கலத்து இருக்கும் இடையன் மழபாடி பட்டனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த மழபாடி . . . . . . . . கன்றியும்,
இன்னாட்டு மீய்வழி நாட்டுக் காட்டிஞாழல் இருக்கும் இடையன் வடுகன் பாண்டனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் சூற்றியன் மழபாடியும்,
தஞ்சாவூர் உள்ளாலைச் சாலியத்தெருவில் இருக்கும் இடையன் மாயான் சூற்றியும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு மீசெங்கிளி நாட்டு விராற் குடி இருக்கும் இடையன் தேவன் அரிஞ்சவனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த தேவன் மக்கியும்,
தேவன் பூங்காவனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் எழுவனெமடியும்,
தஞ்சாவூர்ப் புறம்படி . . . . . . திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் சூரநாட்டானும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படித் திரிபுவனமாதேவிப் பேரங்காடி இருக்கும் இடையன் இராசிங்கன் முப்பளிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவன் அடைகுடி இவனுடன் பிறந்தான் மகன் திருவடிகள் தத்தையும்,
இவ்வங்காடி இருக்கும் இடையன் நிலாவி ஆவரங்காடனும்
இவ்வங்காடி இருக்கும் இடையன் நிலாவி பொற்காரியும்,
இவ்வங்காடி இருக்கும் இடையன் காடநிலாவியும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

தஞ்சாவூர்ப் புறம்படித் திரிபுவனமாதேவிப் பேரங்காடி இருக்கும் இடையன் அரங்கன் சீராளனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த அரங்கன் ம . . . . . . யும்,
சிற்றப்பன் மகன் ஆயிரவன் சுப்பிரனும்,
. . . . . . . . . நாகனும்,
இவ்வங்காடி இருக்கும் இடையன் . . . . . . . . . யும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

நித்த விநோத வளநாட்டு முடிச்சோழ நாட்டு சிற்றின வாழ் இருக்கும் இடையன் புஞ்சை சாத்தனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் சாத்தனிராமனுஞ், சாத்தன் ஏறனும்,
அருமொழி தேவ வளநாட்டு நென்மலி நாட்டுக் கோட்டூர் இருக்கும் இடையன் அரங்கன் மனந்தானும்,
நித்தவிநோத வளநாட்டு ஆலூர்க் கூற்றத்துப் பட்டத் திருக்கும் இடையன் விளவன் கலியனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

நித்தவிநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டுப் பெண்டடு கலத்து இருக்கும் இடையன் அமரன் கருவூர்க்கு;
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் கருவூர் அமரனும்,
ராஜராஜ வளநாட்டுக் கீழ்வேங்கை நாட்டு ஜயங்கொண்ட சோழ நல்லூர் இருக்கும் இடையன் பட்டன் மழபாடியும்,
உ . . . . . . . . . . . . . பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கி லிருக்கும் இடையன் சூற்றி வேம்பனும்,
நித்தவிநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டுக் குளப் பாட்டு இருக்கும் இடையன் கலியாளன் வெ . . . . . . . யும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜேந்திரசிங்க வளநாட்டு மிறைநாட்டுத் திருத்தேவன் குடி இருக்கும் இடையன் அமுதன் குஞ்சிரனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றினுக்கு இவன் தானும்,
இவன் அடைகுடி இவ்வூர் இருக்கும் இடையன் பற்பநாபன் வெண்காடனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் பகையன் பட்டனும்,
இந்நாட்டுக் கள்ளூர் இருக்கும் இடையன் கேசன் சூற்றியும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து ஆயிரத்தளி இருக்கும் இடையன் ஆனை அரையனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்துக் கீழ்ப் பூண்டியான லோகமஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் வேம்ப . . . . . . . . னுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றினுக்கு இவன் தானும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவன் அடைகுடி இவனுடன் பிறந்த வேம்பன் கணவதியும்,
நன் மருமகன் சேரி செருவடையும்,
நன் மருமகன் குருடன் நாகடியும்,
ராஜராஜ வளநாட்டு எமப்பேர்க் கூற்றத்துக் கண்ணிகுடி இருக்கும் இடையன் கலியன் பரமனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு மீய்பொழி நாட்டுக் காட்ட ஞாழல் இருக்கும் இடையன் ஆச்சன் தாழிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த ஆச்சன் விதியனும்,
இந்நாட்டு எரியூர் நாட்டுக் கருவுகல் வல்லத்திருக்கும் இடையன் காடன் பூதியும்,
இவ்வூர் இருக்கும் இடையன் காடன் அறுநூற்றுவநும்,
இந்நாட்டுப் புன்றிற் கூற்றத்து விரைக்குடி இருக்கும் இடையன் அணுக்கன் சிற்றெமனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்சூதி நாட்டுக் குறுக்கை இருக்கும் இடையன் காரி சூற்றிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த காரி குளவனும்,
காரி . . . . . . . . . பானும்,
இந்நாட்டுப் பனங்காட்டு நாட்டுப் பெருங்கொளூர் இருக்கும் இடையன் நக்கன் சாத்தனும்,
ராஜராஜ வளநாட்டுப் பன்றியூர் நாட்டுப் பன்றியூர் இருக்கும் இடையன் இளையான் சாத்தனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

ராஜராஜ வளநாட்டு க்ஷத்திரியசிகாமணிபுரத்து இருக்கும் இடையன் வேம்பன் என்பானுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த வேம்பநானையும்,
வேம்பன் களரியும்,
சிற்றப்பன் ஆனை சூற்றியும்,
ராஜராஜ வளநாட்டுக் கீழ்வேங்கை நாட்டுத் தலைவாய் மங்கலத்து இருக்கும் இடையன் சீலன் கருவூரும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டுக் கீழ்வேங்கை நாட்டு ஜயங்கொண்ட சோழநல்லூர் இருக்கும் இடையன் குளவன் திருமுற் . . . .
அடுத்த பசு நாற்பத்தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த குளவன் சாத்தனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் நாறலூர் கருவிடையும்,
இந்நாட்டுப் பொயிற் கூற்றத்துப் பாச்சில் இருக்கும் இடையன் நக்கனூரும்,
இந்நாட்டு உப்பூரான ரட்டகுலகாலச் சதுர்வேதிமங்கலத்துப் பிடாகை பழங்குளத்து இருக்கும் இடையன் முனையநாரூரும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உத்தமசீலியார் வேளத்திருக்கும் இடையன் மாறன் புவநிமாணிக்கத்துக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் மாணிக்கன் மாறனும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

மாணிக்கன் அண்ணுமலையும்,
பேரப்பன் மகன் தாழி பனையனும்,
நன்மருமகன் நக்கன் அரியானும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உத்தமசீலியார் வேளத்திருக்கும் இடையன் மூலன் அணுக்குடிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் அணுக்குடி பட்டனும்,
நன்மருமகன் வண்ணக்கன் தேவனும்,
நன்மருமகன் காரி கள்வனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி ஆனையாட்கள் தெருவில் இருக்கும் இடையன் கசவன் தளியனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உத்தமசீலியார் வேளத்திருக்கும் இடையன் நக்கன் சூற்றிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் சூற்றி வேம்பனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுப் புன்றிற் கூற்றத்து விரைக் குடி இருக்கும் இடையன் நீலகண்டன் நரியனும்,
இவ்வூரிருக்கும் இடையன் நரியன் தாழியும்,
தஞ்சாவூர்ப் புறம்படி அபிமாநபூஷணத் தெரிந்த வேளத் திருக்கும் இடையன் பனையன் சண்டனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்ததிரு

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

மஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் சூரன் ஊரநுக்கு;
அடுத்த பசு நாற்பத் தெட்டிஞல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தாநும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்தான் மகன் சோழன் குப்பையும்,
உடன் பிறந்தான் மகன் பனையன் களக்குடியுந்,
தஞ்சாவூர்ப் புறம்படி ஆனைக்கடுவார் தெருவில் இருக்கும் இடையன் கரம்பை நக்கநும்,
நித்தவிநோத வளநாட்டுப் பொயிற் கூற்றத்து கரச்சேரி இருக்கும் இடையன் நரன் திருவனும்,
ஆடவல்லாஞல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு மீசெங்கிளி நாட்டுக் கிள்ளி குடி இருக்கும் இடையன் எழுவன் தாழிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிஞல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்தான் மகன் கணவதி சீராமனும்,
உடன் பிறந்தான் மகன் கண்ணன் கலியனும்,
நித்தவிநோத வளநாட்டு நல்லூர் ராஜராஜபுரத்து இருக்கும் இடையன் . . . . . ள . . . . . சீகாளியும்,
தஞ்சாவூர்ப் புறம்படி ஜயங்கொண்டசோழப் பெருந்தெருவில் இருக்கும் இடையன் பிரண்டை பட்டனும்,
ஆடவல்லாஞல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

வடகரைக் குன்றக்கூற்றமான உத்துங்கதுங்க வளநாட்டு இரைக்குடி இருக்கும் இடையன் நக்கன் தேவனுக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற் ருறிஞல் திருவிளக்கு ஒன்றி

னுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் தேவன் அடவியும், தேவ நாரணநும்,
முடிச்சோழ நாட்டு ஜநநாதச் சதுர்வேதிமங்கலத்துத் தென் பிடாகை குட்டிமங்கலத்து இருக்கும் இடையன் சீகிட்டன் காருயிலும்,
இவ்வூர் இருக்கும் இடையன் காருயில் வாகையும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி திரிபுவனமாதேவிப் பேரங்காடி இருக்கும் இடையன் மனநிலை பொதுவனுக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற் றுறினல் திருவிளக்கு ஒன்றி னுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த மனநிலை பெருமா னும்,
சிற்றப்பன் மகன் புனவாயில் பண்டிதனும்,
இவ்வங்காடி இருக்கும் இடையன் சாத்தன் தணக்கனும்,
இவ்வங்காடி இருக்கும் இடையன் நாகன் அரங்கனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெல் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி ராஜவித்யாதரப் பெருந்தெருவில் இருக்கும் இடையன் பிடாரன் சத்துருவுக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற் றுறினல் திருவிளக்கு ஒன்றி னுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் சத்துரு சியாருரும், சத் துரு பிடாரனும்,

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

தஞ்சாவூர்ப் புறம்படி சூரசிகாமணிப் பெருந்தெருவில் இருக்கும் இடையன் காரி நக்கனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு எரியூர் நாட்டு விண்ணனேரியான மும்மடிசோழநல்லூர் இருக்கும் இடையன் ஆயிரவன் பிடாரனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்துப் பாம்புணி இருக்கும் இடையன் வேம்பன் தச்சனுக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற்றுறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் தச்சன் கரம்பனும்,
உடன் பிறந்த வேம்பன் வடுகனும், வேம்பன் பிரவாகனும்,
உடன் பிறந்தான் மகன் வடுகன் வேம்பனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி கொங்கவாளார் அங்காடி இருக்கும் இடையன் திருவடி தாழிக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற்றுறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவ்வங்காடி இருக்கும் இடையன் என்பான் துக்கையனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி திரிபுவனமாதேவிப் பேரங்காடி இருக்கும் இடையன் நாராயணன் பக்கனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி பன்மையார் தெருவில் இருக்கும் இடையன் சாத்தன் பொன்னனும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

வடகரை ராஜேந்திரசிங்க வளநாட்டுப் பொய்கை நாட்டு கண்டராதித்யச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் புகழன் திருவடியும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் அணுக்கன் விளக்கனுக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற் ருறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு.
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடம் பிறந்த அணுக்கன் களரியும், அணுக்கன் அரங்கனும், அணுக்கன் காரியும், அணுக்கன் செல்வனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டு பெருங்கறை இருக்கும் இடையன் மழபாடி பூவடிக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற் ருறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த மழபாடி வாஞ்சியப் பெரையனும், மழபாடி மழவனும், மழபாடி சோழனும்,
வடகரை ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டு மிறைக் கூற்றத்து பிரம்மதேயம் காமரவல்லி இருக்கும் இடையன் குட்டன் ஐயாறனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டு பொயிற் கூற்றத்துக் கொற்றமங்கலத்து இருக்கும் இடையன் பட்டன் தேவனுக்கு,

திருவிளக்குக் குடித்தலை (தொடர்ச்சி)

அடுத்த ஆடு தொண்ணூற் ருறினுல் திருவிளக்கு ஒன்றி னுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த பட்டன் குருந்தனும்,
பட்டன் குன்றனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் அமரன் காரியும்,
இந்நாட்டு பாச்சில் இருக்கும் இடையன் ஊரன் பிரமனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

நித்தவினேத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து ஸ்ரீபூதி இருக்கும் இடையன் சூரன் எழுநூற்றுவனுக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற் ருறிநால் திருவிளக்கு ஒன்றி னுக்கு
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் எழுநூற்றுவன் நக்கனும்,
எழுநூற்றுவன் ஊதாரியும்,
உடன் பிறந்த சூரன் காரியும்,
உடன் பிறந்தான் மகன் காரி எழுநூற்றுவநும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

. . . . . . . . . . . . . . . . . . ராஜராஜ வளநாட்டு வெட்டியார் படை வீட்டு இருக்கும் இடையன் சுப்பிரன் திருவடிகளுக்கு
அடுத்த ஆடு தொண்ணூற் ருறினுல் திருவிளக்கு ஒன்றி னுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் திருவடி சேந்தனும், திருவடி அமரபுசங்கனும்,
இத்தெருவில் இருக்கும் இடையன் குமிழி பகையனும்,
நித்தவினேத வளநாட்டு காந்தார நாட்டு விசையாலேயச்

திருவிளக்குக் குடித்தவை (தொடர்ச்சி)

சருப்பெதிமங்கலத்து இருக்கும் இடையன் சாத்தன் கோலனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி ராஜராஜபிரும்மமஹாராஜந் அங்காடி இருக்கும் இடையன் கரந்தை காவனுக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற் றுறிநால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் காவன் கரந்தையுஞ் சிற்றப்பன் மகன் மழபாடி சேரமானும்,
இவ்வங்காடி இருக்கும் இடையன் பூமி . . . . . மியனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி உத்தமசீலியார் வேளத்து இருக்கும் இடையன் குருடன் குளவனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து பிரம்மதேயஞ் சந்திரலெகைப் பிடாகை நரிக்குடிச்சேரி இருக்கும் இடையன் ஆனூர் கருவூர்க்கு,
அடுத்த ஆடு தொண்ணூற் றுறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் சிற்றப்பன் மகன் மாணி கூத்தனும் மாணி வீரசோழனும்,
சிற்றப்பன் மகன் உலகன் தேவனும்,
நன்மாமன் பாலன் சூற்றியும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் சூரன் அமரனுக்கு,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் நன்மாமன் பூசலும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் ஆரூர்ப . . . . . . . . . . .
இவ்வேளத்து இருக்கும் இடையன் பட்டன் தளியனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு புன்றிற் கூற்றத்து சாத்த மங்கலத்து இருக்கும் இடையன் அரையன் தாழியும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

நித்த விநோத வளநாட்டுக் காந்தார நாட்டு இரவிகுல மாணிக்கநல்லூர் இருக்கும் இடையன் எழுநூற்றுவன் கூத்தனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் சிற்றப்பன் நக்கனரும்,
சிற்றப்பன் மகன் இரணி கண்ணியும்,
உடன்பிறந்தான் மகன் எழுநூற்றுவனும்,
சிற்றப்பன் மகன் பூவடி திருமழலையும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

ராஜராஜவளநாட்டு கீழ்வேங்கைநாட்டு பாண்டியகுலாந் தகநல்லூர் இருக்கும் இடையன் சிறியான் சூற்றிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் சூற்றி . . . . . . . . . . . . . .
சூற்றி கண்ணனும்,
உடன்பிறந்த சிறியார் அருரும்,
ராஜராஜ வளநாட்டு பொயிற்கூற்றத்து சிறுகுளத்தூர் இருக்கும் இடையன் புளியன் சூற்றியும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி .......... அங்காடி இருக்கும் இடையன் இராமன் மருதனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த இராமன் வளவனும்,
உடன்பிறந்தான் மகன் ஆச்சன் இராமனும்,
ராஜராஜ வளநாட்டு க்ஷத்திரிய சிகாமணிபுரத்திருக்கும் இடையன் உழக்கன் வட்டிலும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்திருக்கும் இடையன் பனையன் தனியானுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி தஞ்சாவூர் உள்ளாலைச் சாலியத் தெருவில் இருக்கும் இடையன் .......... ம்,
பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்செங்கிளி நாட்டு மங்கலநல்லூர் இருக்கும் இடையன் காரி பனையனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு எரியூர் நாட்டுக் கருவுகல்வல்லத்து இருக்கும் இடையன் கோவன் ஊரனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த கோவன் வைய்குந்தனும், கோவன் .......... டியும்,
இவ்வூர் இருக்கும் இடையன் ஊரன் கூற்றியும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்சூதி நாட்டு வடவா யிடத்திருக்கும் இடையன் மாறன் கட்டிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் கட்டி கொனையும்,
உடன்பிறந்த மாறன் வடுகனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் தேவன் காரியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு மீய்பொழி நாட்டுக் கோயில் நல்லூர் இருக்கும் இடையன் சாத்தன் கண்ணிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவ்வூர் இருக்கும் இடையன் தனியன் மறவனும்,
இந்நாட்டு புன்றிற் கூற்றத்து வீரைக்குடி இருக்கும் இடையன் கொளி கோயிலும்,
ராஜராஜ வளநாட்டு பன்றியூர் நாட்டு பெருமுள்ளூர் இருக்கும் இடையன் கிலாதிரன் ஒற்றியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு ஆலூர்க் கூற்றத்துப் பட்டத்து இருக்கும் இடையன் ஐய்யாறன் . . . . . . க்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவ்வூர் இருக்கும் இடையன் விளவன் உத்தமனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் மண்டை ஐய்யாறனும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவ்வூர் இருக்கும் இடையன் ஆச்சன் அண்ணுமலையும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்கூதி நாட்டு நாவலூர் இருக்கும் இடையன் தளியன் அரங்கனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இந்நாட்டுப் புன்றிற் கூற்றத்து மழையூர் இருக்கும் இடையன் பட்டன் தேவனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் பொற்ருழி தூதுவனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி ராஜவித்யாதரப் பெருந்தெருவில் இருக்கும் இடையன் கணிச்சன் நாகனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டுப் பெருங்கறை இருக்கும் இடையன் பிசங்கன் சிங்கனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த பிசங்கன் பாண்டனும்,
உடன் பிறந்தான் மகன் . . . . . . . . . ம . . . . . . . . . . யும்,
இந்நாட்டு பிரமதேயம் ராஜகேஸரிச் சதுர்வேதிமங்கலத்துப் பிடாகை மாங்குடி இருக்கும் இடையன் குறக்களன் பட்டனும்,
ராஜேந்திரசிங்க வளநாட்டு மிறைக் கூற்றத்துக் காமரவல்லிச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் மருதன் நக்கனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு எரியூர் நாட்டுக் கருவுகல்வல்

லத்து இருக்கும் இடையன் ஊரி குருந்தனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த ஊரி கொண்டியும்,
இவன் சிற்றப்பன் ஊரன் பட்டனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் குன்றன் . . . . னும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவினோத வளநாட்டுக் காந்தார நாட்டு விசையாலேயச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் கம்பன் கவடிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்தான் மகன் எரேவயனுரும்,
அருமொழிதேவ வளநாட்டு அளநாட்டு செம்பியன் மாதேவிச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் கொற்றன் மழலேயும்,
இவ்வூர் இருக்கும் இடையன் கொற்றன் காஞ்சனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் தாழி காளியும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி ராஜராஜத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் சாத்தன் அம்பலத்துக்கு,
அடுத்த எருமை எட்டினுலும் ஆடு நாற்பத் தெட்டிநாலுந் திருவிளக்கு ஒன்றிநுக்கு,
இவன் தானும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவன் அடைகுடி இவ்வேளத்து இருக்கும் இடையன் தளி யன் வீரட்டனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுப் புன்றிற் கூற்றத்து விரைக் குடி இருக்கும் இடையன் தாழி மழபாடியும்,
இந்நாட்டு மீய்பொழி நாட்டு . . . . . . . . இருக்கும் இடை யன் களப்பாளன் புன்றிற்காரியும்,
ஆடவல்லாநால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உத்தமசீலியார் வேளத்து இருக்கும் இடையன் காரி மழபாடிக்கு,
அடுத்த எருமை எட்டினுலும் ஆடு நாற்பத் தெட்டினுலுந் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த காளி அணுக்கனும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் காரி சூற்றியும்,
அபிமானபூஷணத் தெரிந்த வேளத்து இருக்கும் இடையன் திருவன் மல்லனும்,
ஆடவல்லாஞல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக் குடமூக்கில் இருக்கும் இடையன் ஆச்சன் சித்திரகுத்தனு க்கு,
அடுத்த எருமை இரண்டினுலும் ஆடு எண்பத்து நாலி நாலுந் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த ஆச்சன் மொ . . . . . னும்,
ஆச்சன் அருமொழியும், ஆச்சன் தூதுவனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு எயி ஞட்டு அட்டுப்பள்ளிநிய

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

மத்து இருக்கும் இடையன் . . . . ணிடை பெரும்புளியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி ஆனைக்கடுவார் தெருவில் இருக்கும் இடையன் அன்னகையன் சூற்றிக்கு,
அடுத்த எருமை எட்டினாலும் ஆடு நாற்பத் தெட்டினாலுந் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் சூற்றி திருவேதியும், சூற்றி மோடனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பூதிகுடி இருக்கும் இடையன் மழபாடி சீகிட்டனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் நக்கன் நாராயணனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படித் திரிபுவனமாதேவிப் பேரங்காடி இருக்கும் இடையன் திருவடி குறுக்களனுக்கு,
அடுத்த எருமை நாலினாலும் ஆடு எழுபத் திரண்டினாலுந் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் குறுக்களன் . . . . . . . . ,
இவ்வங்காடி இருக்கும் இடையன் வடுகன் மழலையும்,
இவ்வங்காடி இருக்கும் இடையன் மூர்க்கன் ஐய்யாறனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி ராஜராஜபிரமமஹாராஜந் அங்காடி இருக்கும் இடையன் கணத்தான் பெற்றானுக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற் றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,

*திருவிளக்குக் குடித்தவை (தொடர்ச்சி)*

இவன் அடைகுடி தஞ்சாவூர்ப் புறம்படி மடைப்பள்ளி தெரு வில் இருக்கும் இடையன் சாத்தன் கண்டராச்சனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு கிளியூர் நாட்டுப் பள் . . . டி கோயிலும்,
தஞ்சாவூர்ப் புறம்படி அருமொழிதேவத் தெரிந்த திருப்பரி கலத்தார் வேளத்து இருக்கும் இடையன் பட்டன் பூவடியும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டு கமுகன் சேந்தன்குடி இருக்கும் இடையன் மண்ணை வேம்பனுக்கு,
அடுத்த ஆடு தொண்ணூற் றுறினல் திருவிளக்கு ஒன்றி னுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த மண்ணை நாரணனும்,
மண்ணை பட்டனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டுப் புன்றிற் கூற்றத்து சாத்த மங்கலத்து இருக்கும் இடையன் தீய்மை மாலைக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் கண்டன் பனையனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜேந்திரசிங்க வளநாட்டு மண்ணி நாட்டு இடவை யிருக் கும் இடையன் சூற்றி புகழனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவன் அடைகுடி இவன் தமப்பன் புகழன் சூற்றியும்,
உடன்பிறந்த சூற்றி கருமாணிக்கமும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு புன்றில் கூற்றத்து மழையூர்
இருக்கும் இடையன் சாத்தன் குணமடிக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் குணமடி வேம்பனும்,
உடன்பிறந்த சாத்தன் காளியும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்துப் பூவணூர்
இருக்கும் குடையன் குருந்தன் மருதனுக்கு,
அடுத்த பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி உடன்பிறந்த குருந்தன் பட்டனும்,
உடன்பிறந்தான் மகன் தச்சன் கணபுரவனும்,
நன்மச்சுனன் வெண்காடன் கண்டனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

---

இக்கல்வெட்டு கோயிலின் வடக்கு சுற்றுச் சுவரின் வெளிப்பக்கத்தில் உள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 63, 94 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவிளக்குக் குடுத்தவை

ஸ்வஸ்தி ஸ்ரீ :

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டிலுங்,
குடுத்தார் குடுத்த கால்மாட்டிலுங்,
காசும் அக்கமுங் குடுத்து முதலான கால்மாட்டிலுந்,
திருவிளக்குக்கு அடுத்தபடி கல்லில் வெட்டின;

தஞ்சாவூர்ப் புறம்படி காந்தர்வத் தெருவில் இருக்கும் இடையன் வி . . . . . . .
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு அறுபத் தொன்பதும்,
பெருந்தரம் உத்தரங்குடையான் கேரளவீதிவிடங்கனை வில்லவமூவேந்தவேளான், தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு ஒன்பதினால் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்றாக . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . தொண்ணூற் றாறினால்,
தி . . . . . . . . . . . . . . . . . . . . . . விளக்கொன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் சிற்றப்பன் மகன் மாதேவன் மதியானும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து சந்திரலேகை இருக்கும் இடையன் ஆவூர் எச்சிலும்,
இவ்வூர் இருக்கும் இடையன் ஆவூர் கண்ணியும்,

தஞ்சாவூர்ப் புறம்படித் திரிபுவனமாதேவிப் பேரங்காடி இருக்கும் இடையன் திருவடி சூற்றியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி காந்தர்வத் தெருவில் இருக்கும் இடையன் அடவி கூத்தனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்,
பெருந்தரம் உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனை வில்லவன்மூவேந்தவேளான் தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு நாற் பத்து நாலும்,
இவநேய் வைத்த காசில் குடுத்த காசு ஒன்றினால் ஆடு மூன்றும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்து இட்ட அக்கம் இரண்டிநால் ஆடு ஒன்றும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறும் . . . . . . . . . . . .
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த அடவி ஆதித்தனும், அடவி ஆச்சனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு எரியூர் நாட்டு விண்ணநேரி யான மும்மடி சோழநல்லூரிருக்கும் இடையன் காடாடி வாட்டாறனும் ராஜேந்திரசிங்க வளநாட்டு குன்றக் கூற்ற மான உத்துங்கதுங்க வளநாட்டுப் பழுவூர் இருக்கும் . . . . . . . . . . . . . . . . . . அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி காந்தர்வத் தெருவில் இருக்கும் இடையன் எழுவன் முள்ளூர்க்கு,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

உடையார் ஸ்ரீ ராஜ்ராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு அறுபத் தொன்பதும்,
பெருந்தரம் உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனை வில்லவன்மூவேந்தவேளான் தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு ஒன்பதினால் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்றாக வந்த ஆடு இருபத்தேழும்,
ஆக ஆடு தொண்ணூற் றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த எழுவநாச்சனும்,
எழுவ நாரணனும், எழுவன் சோமனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து சந்திரலேகைப் பிடாகை துகலூர் இருக்கும் இடையன் பாலை திட்டையும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி ரௌத்ரமஹாகாளத்து மடவிளாகத்து இருக்கும் இடையன் சுப்பிரன் சூற்றிக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு ஐம்பத் திரண்டும்,
பெருந்தரம் உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனை வில்லவன்மூவேந்தவேளான் தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்குத் தந்த ஆட்டில் அடுத்த ஆடு நாற்பத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற் றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் ....................

*திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)*

. . . . . . . . . . . . . சீராளனும்,
ராஜராஜ வளநாட்டு க்ஷத்திரியசிகாமணிபுரத்து இருக்கும் இடையன் எழுவன் வெண்காடனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் வெண்காடன் எழுவனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி காந்தர்வத் தெருவில் இருக்கும் இடையன் . . . . . . . . . ,
. . . . . . . . அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரமுடையார் சுரபியில் அடுத்த பசு பன்னிரண்டினல் பசு ஒன்றினுக்கு ஆடு இரண்டாக ஆடு இருபத்து நாலும்,
பெருந்தரம் மாராயன் ராஜராஜந் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்கு . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . ஆடு இருபத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவனுடன் பிறந்த தாழி கேசவனும், தாழி கூத்தனும்,
நித்தவினேத வளநாட்டு நல்லூர் நாட்டு பெருங்கறை இருக்கும் இடையன் பகலஞ்சி நக்கனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி பிரம்மகுட்டத்து . . . . . . . ,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் ஏநன் இரவிக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு ஐம்பத் திரண்டும்,

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

பெருந்தரம் உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனை வில்லவன் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு நாற்பத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறிஞல் திருவிளக்கு ஒன்றிஞுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் நன்மாமன் வீரன் காடனும்,
தஞ்சாவூர் உள்ளாலே சாலியத் தெருவில் இருக்கும் இடையன் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . அபிமாநபூஷணத் தெரிந்த வேளத்து இருக்கும் இடையன் கண்டன் காடனும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் கண்டனிராமனும்,
ஆடவல்லாஞல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி ஆனைக்கடுவார் தெருவில் இருக்கும் இடையன் சித்தகுட்டி பரமனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் . . . . . . . . . . . . . . . . . . . ,
பெருந்தரம் . . . . . . . . . . . . . தயிலய்யன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு நாலும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்து இட்ட காசு மூன்றும்,
ஆகக் காசு ஏழிஞல் காசு ஒன்றிஞுக்கு ஆடு . . . . . . . . . ,
. . . . . . . . . . . . . . . . ராச்சன் பட்டாலகனை நித்தவிநோத விழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு ஆறிஞல் காசு ஒன்றிஞுக்கு ஆடு மூன்ருக ஆடு பதினெட்டும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்து

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இட்ட . . . . . . . . . . . . . . . . . . . . . டும்,
ஆக ஆடு தொண்ணூற்ருறிஞல் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த சித்தகுட்டி நக்கனும் நன்மச்சுநன் சங்கன் சித்தகுட்டியும்,
இத்தெருவில் இருக்கும் இடையன் கற்றளி அரட்டனும்,
ஆடவல்லாஞல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர் . . . . . . . . . . . . . . திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் . . . . . . . . கொற்றனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்து இட்ட காசு ஆறிஞல் காசு ஒன்றினுக்கு ஆடு நாலாக வந்த ஆடு இருபத்து நாலும்,
பெருந்தரம் மாராயன் ராஜராஜந் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு எட்டிஞல் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்ருக ஆடு இருபத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற்ருறிஞல் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் தமப்பன் சத்துரு மழபாடியும்,
நன்மருமகன் கொ . . . . . ,
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் நிலையன் அரட்டனுக்கு ,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் குடுத்த கால் மாட்டில் அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்;
எருமை நாலினால் எருமை ஒன்றினுக்கு ஆடு ஆறாக வந்த ஆடு இருபத்து நாலும்,
. . . . . . . . . . . றினுக்கு ஆடு நாலாக வந்த ஆடு இருபத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற் றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த நிலையன் பிச்சனும், நிலையன் அழகனும்,
பேரப்பன் மகன் பெருமான் காடனும்,
பேரப்பன் மகன் குருடன் சங்கனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி . . . . . . யன் சீலன் காரானைக்கு,
உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்,
பெருந்தரம் கண்டராச்சன் பட்டாலகனை நித்தவிநோத விழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திரு விளக்குக்கு வைத்த காசு . . . . . . னாலும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்து . . . . காசு பதினாறினால் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்றாக வந்த ஆடு நாற்பத் தெட்டும்,
ஆக ஆடு தொண்ணூற் றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த சீலன் பிச்சனும், சீலன் அரவனும்,
உடன்பிறந்தான் மகன் பிச்சன் சீலனும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ் செங்கிளி நாட்டு அருமடலிருக்கும் இடையன் சூற்றி ஐய்யனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

தஞ்சாவூர்ப் புறம்படி ஆனைக்கடுவார் தெருவில் இருக்கும் இடையன் நக்கனுத்தமனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு நாற்பத்தெட்டும்,
எருமை மூன்றினல் எருமை ஒன்றினுக்கு ஆடு ஆருக வந்த ஆடு பதினெட்டும்,
பெருந்தரம் ஆலத்தூருடையான் காளன் கண்ணப்பனை ராஜகேஸரி மூவேந்தவேளான் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு பதினஞ்சினல் பசு ஒன்றினுக்கு ஆடு இரண்டாக வந்த ஆடு முப்பதும்,
ஆக ஆடு தொண்ணூற்ருறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த நக்கன் காடனும்,
இத்தெருவில் இருக்கும் இடையன் இடைக்கரை சூற்றியும்,
இத்தெருவில் இருக்கும் இடையன் ஊரன் குட்டெறனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் குளவனரங்கனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு நாற்பத்தெட்டும்,
எருமை நாலினல் எருமை ஒன்றினுக்கு ஆடு ஆருக ஆடு இருபத்து நாலும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்தில் குடுத்த காசு ஆறினால் காசு ஒன்றினுக்கு ஆடு நாலாக ஆடு இருபத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற்றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த குளவன் சேந்தனும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் சூற்றி வேம்பனும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் காடன் கொற்றனும்,
ராஜராஜத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் அணுக்குடி திருமலையும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உத்தமசீலியார் வேளத்து இருக்கும் இடையன் நக்கன் பிரண்டைக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு நாற்பத்தெட்டும்,
பெருந்தரம் உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனை வில்லவன் மூவேந்தவேளான் தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு பதினாறினால் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்றாக ஆடு நாற்பத்தெட்டும்,
ஆக ஆடு தொண்ணூற்றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த நக்கன் சூற்றியும்,
நக்கன் செட்டியும்,
நன்மச்சுனன் கண்டன் பிரண்டையும்,
க்ஷத்திரியசிகாமணி வளநாட்டு திருநறையூர் நாட்டு . . . . .
. . . . . . . . ண்ணை இருக்கும் இடையன் நீலன் பட்டியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

தஞ்சாவூர்ப் புறம்படி உத்தமசீலியார் வேளத்து இருக்கும் இடையன் வேம்பன் அரவந் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்,
பெருந்தரம் கண்டராச்சன் பட்டாலகனை நித்தவிநோத விழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திரு விளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு ஆறினால் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்றாக ஆடு பதினெட்டும்,
பெருந்தரம் ஆலத்தூருடையான் காளன் கண்ணப்பனை ராஜகேஸரி மூவேந்தவேளான் தன்னை கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசுப் பதினைஞ்சினால் பசு ஒன்றினுக்கு ஆடு இரண்டாக ஆடு முப்பதும்,
ஆக ஆடு தொண்ணூற் றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த வேம்பன் முப்புளி . . . . . ன் எழுவன் வேம்பனுஞ்,
சிற்றப்பன் மகன் வடுக நாகனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி அபிமானபூஷணத் தெரிந்த வேளத்து இருக்கும் இடைய்யன் நக்கன் சேந்தனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர் உள்ளாலைச் சாலியத் தெருவில் இருக்கும் இடையன் . . . . . . . . ங்காடனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு ஐம்பத் திரண்டும்,
பெருந்தரம் உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனை வில்லவன் மூவேந்தவேளான் தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று

கடவ திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு நாற்பத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற் றுறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி தஞ்சாவூர்ப் புறம்படி பஞ்சவன்மாதேவியார் வேளமான கைதவகைத் தெ . . . . . வேளத்து இருக்கும் இடையன் கள்வன் செருவனும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் செருவன் பாழியும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் செருவன் பிசங்கனும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் செருவன் காமனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டுக் கமுகஞ்சேந்தன்குடி இருக்கும் இடையன் அரங்கன் பட்டனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்,
பெருந்தரம் உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனை வில்லவன் மூவேந்தவேளான் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு நாலினால் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்றாக ஆடு பன்னிரண்டும்,
பெருந்தரம் கண்டராச்சன் பட்டாலகனை நித்தவிநோத விழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு ஆறினால் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்றாக ஆடு பதினெட்டும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்துக் குடுத்த காசு நாலினால் காசு ஒன்றினுக்கு ஆடு நாலாக ஆடு பதினாறும்,

திருவிளக்குக் குடுந்தவை (தொடர்ச்சி)

மேற்படியார் பண்டாரத்துக் குடுத்த அக்கம் ஐஞ்சினுல் ஆடு இரண்டும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் பட்டனுச்சனும், பட்டன் பாக்கரனும், பட்டன் பூதியும், பட்டன் தாழியும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உத்தமசீலியார் வேளத்து இருக்கும் இடையன் பட்டன் கால முக்கியனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு நாற்பத்தெட்டும்,
பெருந்தரம் உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனை வில்லவன் மூவேந்தவேளான் தன்னை உடையார் ஸ்ரீராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு பதினுறினுல் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்ருக ஆடு நாற்பத்தெட்டும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் காலமுக்கியன் சாமியும்,
தஞ்சாவூர்ப் புறம்படி உத்தமசீலியார் வேளத்து இருக்கும் இடையன் தாமன் கள்வனும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் சுண்டன் தோழமுடையானும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் செ . . . . . . திரன் பட்டனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

தஞ்சாவூர்ப் புறம்படி ஆனைக்கடுவார் தெருவில் இருக்கும் இடையன் மழபாடி குமரனுக்கு உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்துக் குடுத்த காசு ஆறினுல் காசு ஒன்றினுக்கு ஆடு நாலாக ஆடு இருபத்து நாலும்,
மேற்படியார் பண்டாரத்துக் குடுத்த காசு இரண்டினுல் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்ருக ஆடு ஆறும்,
மேற்படியார் ஸுரபியில் குடுத்த பசு ஒன்பதினுல் பசு ஒன்றினுக்கு ஆடு இரண்டாக ஆடு பதினெட்டும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் குமரன் விளக்கனும்,
இவன் உடன்பிறந்த மழபாடி சூற்றியும்,
தஞ்சாவூர்ப் புறம்படி கா ந்தர்வத் தெருவில் இருக்கும் இடையன் ஆவூர் குன்ருடியும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து பெருமங்கலத்து இருக்கும் இடையன் எழுவன் ஆய்பாடிக்கு, உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் ஸுரபியில் அடுத்த பசு இருபத்தாறினுல் பசு ஒன்றினுக்கு ஆடு இரண்டாக ஆடு ஐம்பத் திரண்டும்,
பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் ஸூர்யனை தென்னவன் மூவேந்தவேளான் தான் எழுந்தருளுவித்த திருமேனிகளுக்கு வைத்த திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு நாலினுல் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்ருக ஆடு பன்னிரண்டும்,
மிழலை கிழான் பூதி சாத்தன் திருவிளக்குக்கு வைத்த காசில்

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

குடுத்த காசு ஒன்றினால் ஆடு மூன்றும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு நடுவிருக்கை செய்த ராஜேந்திரசிங்க வளநாட்டு மிறைக் கூற்றத்துக் காமர வல்லிச் சதுர்வேதி மங்கலத்துக் கோட்டையூர் சாவாந்தி பட்டன் பூவத்தன் பூவத்தனார் தம்மை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு இரண்டினால் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்றாக ஆடு ஆறும்,
பெருந்தரம் நித்த விநோத வளநாட்டு ஆலூர்க் கூற்றத்து செம்பங்குடிச் செம்பங்குடையான் அமுதன் தேவனான ராஜ வித்யாதரவிழுப்பரையன் திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு ஏழினால் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்றாக ஆடு இருபத்தொன்றும்,
உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்துக் குடுத்த அக்கம் ஐஞ்சினால் ஆடு இரண்டும்,
ஆக ஆடு தொண்ணூற்றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் ஆய்ப்பாடி மழபாடியும், ஆய்ப்பாடி பட்டனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து சந்திரலேகைக் கீழ்ப்பிடாகை நரிக்குடிச்சேரி இருக்கும் இடையன் குட்டத்தாழி கண்ணியும்,
இந்நாட்டுப் பெருமங்கலத்து இருக்கும் இடையன் பனங்குடி புறம்பியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி ஆனை ஆட்கள் தெருவில் இருக்கும் இடையன் கொங்கனச்சனுக்கு உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த பசு இருபத்து நாலி

ஞல் பசு ஒன்றினுக்கு ஆடு இரண்டாக ஆடு நாற்பத்தெட்டும்,
பெருந்தரம் நித்தவிஞேத வளநாட்டு பாம்புணிக் கூற்றத்து அரைசூர் அரைசூருடையான் ஈராயிரவன் பல்லவயஞை மும்மடிசோழ போசன் திருவிளக்குக்கு வைத்த ஆட்டில் அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறிஞல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த கொங்கன் வீரட்டனும்,
தஞ்சாவூர்ப் புறம்படிப் ஆனை ஆட்கள் தெருவில் இருக்கும் இடையன் அரங்கன் கூடமும்,
தஞ்சாவூர்ப் புறம்படி பன்மையார் தெருவில் இருக்கும் இடையன் காரிகுடி தாங்கியும்,
ராஜராஜ வளநாட்டுப் பொயிற் கூற்றத்து மங்கலவாயில் இருக்கும் இடையன் ஊரன் சோலையும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் குமிழி சூரனுக்கு உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த பசு நாற்பத் திரண்டும்,
உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து பெண்டாட்டி வரகுணன் எழுவத்தூர் திருவிளக்கு வைத்த காசில் குடுத்த காசு நாலிஞல் பசு ஆறும்,
ஆக பசு நாற்பத் தெட்டிஞல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் சூரன் குமிழியும்,
இவனுடன் பிறந்த குமிழி ஆனையும் குமிழி ஆயிரவனும்

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

ராஜராஜ வளநாட்டு கீழ்வேங்கை நாட்டு க்ஷத்திரியசிகா மணிபுரத்து இருக்கும் இடையன் குமரன் வாட்டாறனும், ஆடவல்லாநால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து ராஜாச்ர யச் சதுர்வேதிமங்கலத்துப் பிடாகை பெருங்குடி இருக்கும் இடையன் தூறன் குளிர்ந்தானுக்கு உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த பசு நாற்பத் திரண்டும்,

பெருந்கரம் நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து செம்பங்குடிச் செம்பங்குடையான் அமுதன் தேவனை ராஜ வித்யாதர விழுப்பரையன் திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு நாலினுல் பசு ஆறும்,

ஆக பசு நாற்பத்தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,

இவன் தானும்,

இவன் அடைகுடி இவன் மகன் குளிர்ந்தான் ஐய்யனும்,

கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து ராஜாச்ரயச் சதுர்வேதிமங்கலத்து பிடாகை பெருங்குடி இருக்கும் இடையன் மந்நிலை பொன்னனும்,

இவ்வூர் இருக்கும் இடையன் அறிஞ்சிகோடனும்,

வடகோனாட்டுத் துறைக்குடி இருக்கும் இடையன் சாத்தன் காடனும்,

ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திரு மஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் மாயானரட் டனுக்கு உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த கால்மாட் டில் அடுத்த ஆடு நாற்பத்தெட்டும்,

எருமை நாலினுல் எருமை ஒன்றினுக்கு ஆடு ஆருக ஆடு

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இருபத்து நாலும்,
உடையார் ஸ்ரீராஜராஜீச்வரமுடையார் பண்டாரத்துக்கு குடுத்த காசு ஆறினல் ஆடு இருபத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற்றுறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி ராஜராஜ வளநாட்டு குன்றிற் கூற்றத்து திருவாவணத்து இருக்கும் இடையன் வடுகன் ஐஞ்ஞூற்றுவனும்,
ராஜராஜ வளநாட்டு இளம்புலிவாய் சுற்றிய பெரும்புலிவாயில் இருக்கும் இடையன் வடுகன் குன்றனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுப் புனங்காட்டு நாட்டு பெரும்புலியூர் இருக்கும் இடையன் கலியன் கண்டனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் கலியன் ஊரனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி ஆனைக்கடுவார் தெருவில் இருக்கும் இடையன் ஐயாறன் வடவாயிலுக்கு,
உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த பசு நாற்பத் திரண்டும்,
உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்துப் பெண்டாட்டி வரகுணன் எழுவத்தூர் திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு நாலினற் பசு ஆறும்,
ஆக பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு.
இவன் தானும்,
இவன் அடைகுடி ராஜராஜ வளநாட்டு கீழ்தெங்கம் பூண்டியான குமாரமங்கலத்து இருக்கும் இடையன் சிலையன் நக்கனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் நக்கன் சூற்றியும்,
ராஜராஜவளநாட்டு குன்றிற்கூற்றத்து விரைக்குடி இருக்

கும் இடையன் விடமன் திறனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்சூதிநாட்டு வடவாயிடத்து இருக்கும் இடையன் குருந்தனுலியும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி வீரசோழப் பெருந்தெருவில் இருக்கும் இடையன் கவடி பட்டனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த பசு நாற்பத் திரண்டும்,
உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்துப் பெண்டாட்டி வரகுணன் எழுவத்தூர் திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு நாலினுற் பசு ஆறும்,
ஆக பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த கவடி விச்சாதிரனும், கவடிமருதனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுப் பனங்கிய நாட்டுப் பனங்குளத்து இருக்கும் இடையன் அரையன் பராந்தகனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் அணுக்குடி தாழியும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுத் தனியூர் ஸ்ரீ பராந்தகச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் தேவடி தாழிக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டில் அடுத்த பசு நாற்பத் திரண்டும்,
இலாடமாதேவியார் குடுத்த பசுவில் அடுத்த பசு ஆறும்,
ஆக பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த தேவடி புகழனும்,

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டு மண்ணி நாட்டு இடவை யிருக்கும் இடையன் கூத்தன் தேவனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி ராஜராஜத் தெரிந்த பாண்டித் திரு மஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் பதரை காரிக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் மும்மடிசோழத் தெரிந்த பரிவாரத்தார் ஆடவல்லாற்கு வைத்த திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் காரி காளியும்,
நன்மருமகன் பந்தல் காரியும், பந்தல் விளக்கனும்,
நன்மச்சுனன் மாறன் பந்தலும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு எரியூர் நாட்டுக் கருவுகல் வல்லத்திருக்கும் இடையன் மாறன் செருவிடைக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் மும்மடிசோழத் தெரிந்த பரிவாரத்தார் ஆடவல்லாற்கு வைத்த திருவிளக்குக்கு தந்த பசுவில்,
அடுத்த பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி . . . . . . . . . . . . . . டை அழியாக்கலியும்
செருவிடைய அடிகளும், செருவிடை சூறையும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு மீய்பொழி நாட்டுக் கோயில் நல்லூர் இருக்கும் இடையன் நக்கன் மனத்தானுக்கு,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த காலிமாட்டில் அடுத்த பசு முப்பத்தாறும்,
உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்துப் பெண்டாட்டி வரகுணன் எழுவத்தூர் திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு எட்டினால் பசு ப . . . . . . . . ,
. . . . . . . . . . . . . ன்றினுக்கு.
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த நக்கனமரனும்,
தன் சிற்றப்பன் மகன் உதையாங்கூரன் சுவர்கரனும்; உதயாங்கூரன் தனியானையும்,
காரி முன்னூற்றுவனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு எரியூர் நாட்டுக் கருவுகல் வல்லத்திருக்கும் இடையன் நக்கனனுக்குடிக்கு,
உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்துப் பெண்டாட்டி வரகுணன் எழுவத்தூர் திருவிளக்கு . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ,
சேநாபதி குரவன் உலகளந்தானை ராஜராஜமஹாராஜந் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு முப்பத்தாறும்,
ஆக பசு நாற்பத் தெட்டிநால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த நக்கன் சூற்றியும்,
நக்கன் பாய்புலியும்,
தஞ்சாவூர் உள்ளாலைப் பாண்டி வேளத்து இருக்கும் இடையன் பனையூர் காரியும்,
தஞ்சாவூர்ப் புறம்படி ராஜராஜத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் அரைய . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . நெய் உழக்கு;

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

பாண்டியகுலாசநி வளநாட்டு மீய்செங்கிளி நாட்டுக் கிள்ளி
குடி இருக்கும் இடையன் குருக்கன் சத்திக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த கல்மாட்டில்
அடுத்த பசு முப்பத்து நாலும்,
பெருந்தரம் நித்த விநோத வளநாட்டு ஆலூர்க் கூற்றத்துச்
செம்பங்குடி செம்பங்குடையான் அமுதன் தேவனை ராஜ
வித்யாதர விழுப்பரையன் திருவிளக்குக்கு வைத்த காசில்
குடுத்த காசு எட்டினால் பசுப் பன்னிரண்டும்,
மூலப . . . . . . . . . . . . . . . . . . . ர விட்டெழுன சனனுதத்
தெரிந்த பரிவாரத்தார் திரு . . . . . . . . . . . . . . டையார்
ஸ்ரீ ராஜராஜீச்வரமுடையார் பண்டாரத்துக் குடுத்த அக்
கம் இரண்டினலும் பசு இரண்டும்,
ஆகப் பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த குருந்தன் தேவனும்,
குருந்தன் பட்டனும்,
சிற்றப்பன் தேவன் பூவனும், தேவனடிகளும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டு உத்துங்கதுங்க வளநாட்டு
பழுவூர் இருக்கும் இடையன் திருவடி கு . . . . . . . ,
. . த்து வானவன் மாதேவி பெருந்தெருவில் வியாபாரி
ஆச்சன் கொனூர்க் காடனை ராஜவித்யாதர மாயிலட்டி
திருவிளக்குக்கு வைத்த காசில் குடுத்த காசு முப்பத்து
இரண்டினல் காசு ஒன்றினுக்கு ஆடு மூன்றாக ஆடு தொண்
ணூற்றாறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் குன்றன் திருவடிகளும்,

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

குன்றன் மாறனும்
ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுப் பொய்கை நாட்டு கண்ட ராதித்யச் சதுர்வேதி மங்கலத்து ....................ம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திரு மஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் சாத்தன் பிரண்டைக்கு,
நடுவிருக்கும் கடலங்குடித் தாமோ .......மை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப் போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு நாற்பத் தைஞ்சும் இவரே மேற்படிக்கு வைத்த காசில் குடுத்த காசு ஒன்றினால் ஆடு மூன்றும்,
உய் ............. ணன் எழுவத்தூர் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு நாலினால் ஆடு பன்னிரண்டும்,
இலாடமாதேவியார் மாடாய் இவர் எழுந்தருளுவித்த பாசு பதமூர்த்திகளுக்குத் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசுப் பதினாறினால் ஆடு முப்பத் திரண்டும்,
மூலபரிவாரவிட்டேறுன சனுதத்தெரிந்த பரிவாரத்தார் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு ஒன்றினால் ஆடு மூன்றும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்து இட்ட அக்கம் இரண்டினால் ஆடு ஒன்றும்,
.........................................
......ன் அடைகுடி இவன் நன்மச்சுநன் மழபாடி கற்றளியும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்செங்கிளி நாட்டு மங்கல நல்லூர் இருக்கும் இடையன் ஆலன் கருணனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் குளத்தூர் பணையனும்,

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவ்வூர் இருக்கும் இடையன் காரி சூற்றியும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜேந்திரசிம்ஹ வளநாட்டுத் தநியூர் ஸ்ரீபராந்தகச் சதுர் வேதிமங்கலத்து இருக்கும் இடையன் சாத்தன் . . . . னுக்கு, பெருந்தரம் . . . . . . . . கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு எழுபத் திரண்டும்,
திருமந்திரவோலை ராஜகேஸரிநல்லூர் கிழவன் காருயில் எடுத்த பாதம் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு எட்டினுல் ஆடு இருபத்து நாலும்.
ஆக ஆடு தொண்ணூற் ருறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுத் தநியூர் ஸ்ரீ பராந்தகச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் . . . . லையனும்,
ராஜராஜ . . . . . . . . . . . . . . . . . . . . . . சீகிட்டனும்,
ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுத் தநியூர் ஸ்ரீ பராந்தகச் சதுர் வேதிமங்கலத்து இருக்கும் இடையன் காரி நாகனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் கோவன் நீலக்கிரீவனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டுக் கீழ்வேங்கை நாட்டு க்ஷத்திரியசிகா மணிபுரத்து இருக்கும் இடையன் சந்திரன் நாரணனுக்கு,
நித்தவினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துச் செம்பங்குடிச் செம்பங் குடையான் அமுதன் தேவனை ராஜவித்யர் . . . . ப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு எட்டினுல் ஆடு இருபத்து நாலும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் சுரபியில்

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

அடுத்த பசு எழினல் ஆடு பதினலும்,
சேநாபதி குரவன் உலகளந்தாஞன ராஜராஜமஹாராஜந் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு இருபத்தொன்பதினல் ஆடு ஐம்பத்தெட்டும்,
ஆக ஆ . . . . . . . . . . . . . . . . . . . . . . ,
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த சந்திரன் பாண்டியும், மாமன் எட்டி கிளாவனும்.
இவன் மாமன் தெற்றி அருவியும்,
ராஜராஜ வளநாட்டுக் கீழ்வேங்கை நாட்டு க்ஷத்திரியசிகாமணிபுரத்து இருக்கும் இடையன் ஓரம்பன் பாளுரும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுத் தநியூர் ஸ்ரீ பராந்தகச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் சாத்தன் காடனுக்கு,
நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துச் . . . . . . . . .
வித்யாதரவிழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு எட்டினல் ஆடு இருபத்து நாலும்,
பெருந்தரம் ஒலோகமாராயன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு இருபத்து நாலும்,
சேநாபதி குரவன் உலகளந்தாஞன ராஜராஜ மஹாராஜந் தன்னை உடையார் ஸ்ரீ ராஜ . . . . . . . . . . . . . . று கடவ திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு இருபத்து நாலினல்

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

ஆடு நாற்பத் தெட்டும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் காடன் சாத்தனும், காடன் மஞ்சனும், காடன் ஆய்கொழுந்தும்,
ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுத் தநியூர் ஸ்ரீ பராந்தகச் சதுர் வேதிமங்கலத்து இருக்கும் இடையன் விக்கிரமாதித்தன் மூங்கிலும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுத் தனியூர் ஸ்ரீ பராந்தகச் சதுர்வேதி மங்கலத்து இருக்கும் இடையன் ........,
பெருந்தரம் ஓலோகமாராயன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு எழுபத் திரண்டும்,
திருமந்திரவோலை ராஜகேஸரி நல்லூர் கிழவன் காருயில் எடுத்த பாதம் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு எட்டினல் ஆடு இருபத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த பள்ளன் கூத்தனும், பள்ளன் கீழானும்,
இவன் நன்மருமகன் முகத்தி எழுவனும்,
ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுத் தநியூர் ஸ்ரீ பராந்தகச்சதுர் வேதிமங்கலத்து இருக்கும் இடையன் மோடன் தீரனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டு மிறைக் கூற்றத்து மிறையில்

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இருக்கும் இடையன் கயிலாயன் காரிக்கு,
பெருந்தரம் ஒலோகமாராயன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப் போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு எழுபத்திரண்டும்,
திருமந்திரவோலை ராஜகேஸரி நல்லூர் கிழவன் காருயில் எடுத்த பாதம் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு எட்டினுல் ஆடு இருபத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் காரி . . . . . னும்,
உடன்பிறந்த கயிலாயன் புன்னையும், கயிலாயன் பட்டனும்,
உடன்பிறந்தான் புன்னை கயிலாயனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டுக் காந்தார நாட்டு விசையாலையச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் மதிசூதன் மன்றனுக்கு,
நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துச் செம்பங்குடிச் செம்பங்குடையான் அமுதன் தேவனை ராஜவித்யாதர விழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு எட்டினுல் ஆடு இருபத்து நாலும்,
சேநாபதி குரவன் உலகளந்தானை ராஜராஜ மஹாராஜந் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு முப்பத் தாறினுல் ஆடு எண்பத் திரண்டும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த மதிசூதன் முள்ளூர னும், மதிசூதன் சோலையும்,
தன் சிற்றப்பன் பிடாரன் மதிசூதனும், . . . . ரன் நாராய ணனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு எரிய் நாட்டுக் கருவுகல்வல் லத்திருக்கும் இடையன் பனங்குடி சேந்தனுக்கு,
பெருந்தரம் ராஜகேஸரி மூவேந்தவேளான் தன்னை,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த எருமையில் அடுத்த எருமையில் பத்தினல் ஆடு அறுபதும்,
நித்தவினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துச் செம்பங்குடிச் செம்பங்குடையான் அமுதன் தேவனை ராஜவித்யாதர விழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திரு விளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு எட்டினல் ஆடு இரு பத்து நாலும்,
சேநாபதி குரவன் உலகளந்தானை ராஜராஜ மஹாராஜந் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு ஆறினல் ஆடு பன்னிரண்டும்,
ஆக ஆடு தொண்ணூற் றுறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி பாண்டியகுலாசநி வளநாட்டு எரிய் நாட் டுக் கருவுகல்வல்லத்திருக்கும் இடையன் செருமதன் பட்ட னும்,
இவ்வூர் இருக்கும் இடையன் வேம்பன் கேசுவனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் குன்றன் எழுவனும்,

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவ்வூர் இருக்கும் இடையன் ஊரன் ஓரம்பனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு கீழ்ச்செங்கிளி நாட்டு மங்கல நல்லூர் இருக்கும் இடையன் ஆயிரவன் கண்டனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் சுரபியில் அடுத்த பசுப் பதினென்றும்,
சேநாபதி குரவன் உலகளந்தானை ராஜராஜ மஹாராஜந் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு முப்பத் தேழும்,
ஆகப் பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த ஆயிரவன் ஆச்சனும், ஆயிரவன் பிடாரனும்,
பேரப்பன் மகன் மறவன் கலியனும், மறவன் கருக்கிலையும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு நல்லூர்நாட்டு ராஜராஜபுரத்து இருக்கும் இடையன் காரி தாழைக்கு,
ராஜராஜ வாணகவரையன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு தொண்ணூற் றுறினால், திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் தாழை கருமாணியும், தாழை திருவேங்கடமும்,
உடன்பிறந்த காரி நாராயணனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திரு மஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் அரையன் பரமயனுக்கு.
நித்தவினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துச் செம்பங்குடிச் செம்பங்குடையான் அமுதன் தேவனான ராஜவித்யாதர விழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவி ளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு எட்டினால் ஆடு இரு பத்து நாலும்,
சேநாபதி குரவன் உலகளந்தானான ராஜராஜ மஹாராஜந் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த பசு வில் அடுத்த பசு முப்பத் தாறினால் ஆடு எழுபத் திரண்டும், ஆக ஆடு தொண்ணூற் றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண் டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் தி . . . . . . . . . கயனும்,
இவ்வேளத்து இருக்கும் இடையன் கருப்பன் கண்டனும்,
இவ்வேளத்திருக்கும் இடையன் காடன் கூத்தனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு எரிய் நாட்டுக் கருவிகல்வல் லத்திருக்கும் இடையன் பாப்பான் பனையனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டுக் கீழ்வேங்கை நாட்டு க்ஷத்திரியசிகா மணிபுரத்து இருக்கும் இடையன் மாறன் குட்டத்தாழிக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவிளக்குக்கு தந்த பசு வில் அடுத்த பசு முப்பத்து நாலினால் ஆடு அறுபத் தெட்டும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

நாகுகன்று ஒன்றினல் ஆடு ஒன்றும்,
திருமந்திரவோலை ராஜகேஸரிநல்லூர் கிழவன் காருயில் எடுத்தபாதம் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு நாலினல் ஆடு பன்னிரண்டும்,
சோனகன் சாவூர் பரஞ்சோதி திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு ஐஞ்சினல் ஆடு பதினைஞ்சும்,
ஆக ஆடு தொண்ணூற்றுறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி ராஜராஜ வளநாட்டுக் கீழ்வேங்கை நாட்டு க்ஷத்திரியசிகாமணிபுரத்து இருக்கும் இடையன் சாத்தன் காரியும்,
இவ்வூர் இருக்கும் இடையன் கம்பன் தந்தையும்,
இவ்வூர் இருக்கும் இடையன் குளிர்கோயில் காடனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் ஐயாறன் தாழிவடுகனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு மியசெங்கிளி நாட்டுக் கிள்ளி குடி இருக்கும் இடையன் பாளூர் ஆயிரவனுக்கு,
பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் தென்னவன் மூவேந்த வேளான் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு இருபத்தெட்டினல் ஆடு எண்பத்து நாலும்,
திருமந்திரவோலை ராஜகேஸரிநல்லூர் கிழவன் காருயில் எடுத்தபாதம் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு நாலினல் ஆடு பன்னிரண்டும்,
ஆக ஆடு தொண்ணூற்றுறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் ஆயிரவன் அடிகளும்,
உடன்பிறந்த பாளூர் நிலையனும், பாளூர் குருந்தனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு மீய்செங்கிளி நாட்டுக் கிள்ளி

குடி இருக்கும் இடையன் மழையமன் நக்கனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டு வெட்டியார் படைவீடான ஜயங்கொண்ட சோழநல்லூர் இருக்கும் இடையன் செரி இளங்கோதரையனுக்கு,
பெருந்தரம் வயிரசங்கரன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு பதினறினல் ஆடு நாற்பத் தெட்டும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு இருபத்து நாலினல் ஆடு நாற்பத் தெட்டும்,
ஆக ஆடு தொண்ணூற் றுறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த செரிபூவனும், செரி மாறனும், செரி சூற்றியும்,
ராஜராஜ வளநாட்டு வெட்டியார் படைவீடான ஜயங்கொண்ட சோழநல்லூர் இருக்கும் இடையன் பாண்டன் தாழியும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர் உள்ளாலைப் பாண்டிவேளத்து இருக்கும் இடையன் அழியன் சிவனுக்கு,
நித்தவிநோத வளநாட்டு பாம்புணிக் கூற்றத்து அரைசூர் அரைசூருடையான் ஈராயிரவன் பல்லவயனை மும்மடி சோழபோசன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்,
பெருந்தரம் ராஜராஜ வாணகோவரையன் திருவிளக்குக்கு

தந்த ஆட்டில் அடுத்த ஆடு நாற்பத் தெட்டும்,
ஆக ஆடு தொண்ணூற் றுறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு.
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த அழியன் சிங்கனும் சிற்றப்பன் காரி ஊரானும், காரி சிறுபுலியும், காரி ஆச்சனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டுச் சண்டை மூலைநாட்டுக் கொற்றமங்கலத்து இருக்கும் இடையன் பிடாரன் விதியனுக்கு,
பெருந்தரம் ராஜராஜ வாணகோவரையன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில்,
அடுத்த ஆடு தொண்ணூற் றுறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் விதியன் ஆடியும், உடன் பிறந்த பிடாரன் குட்டனும், சிற்றப்பன் மகன் பரமடி விதியனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுக் குண்டைமூலைநாட்டுக் கொற்றமங்கலத்து இருக்கும் இடையன் களரி எணனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு மீய்பொழிநாட்டு மேற்குடி இருக்கும் இடையன் ஊரான் சுவனுக்கு,
பெருந்தரம் நித்தவிநோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரைசூர், அரைசூருடையான் ஈராயிரவன் பல்லவயனை மும்மடிசோழபோசன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில்,
அடுத்த ஆடு தொண்ணூற் றுறினால் திருவிளக்கு ஒன்றி

னுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த ஊரான் களரியும், நன்மருமகன் மண்டை பட்டனும், தன் சிற்றப்பன் மகன் விருந்தன் காரியும், விருந்தன் ஊரானும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு எரிய் நாட்டுக் கருவுகல் வல்லத்திருக்கும் இடையன் நக்கன் காடனுக்கு,
பெருந்தரம் ராஜராஜ வாணகோவரையன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில்,
அடுத்த ஆடு தொண்ணூற் றுறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த நக்கன் பூதியும் தன் சிற்றப்பன் மகன் செருவிடை காரியும், இவன் மகன் காரி செருவிடையும்,
ராஜராஜ வளநாட்டுப் பன்றியூர் நாட்டுப் பெருமுள்ளூர் இருக்கும் இடையன் புகழன் பட்டனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்சூதி நாட்டு வடவாயிடத்திருக்கும் இடையன் காடன் சிறுகொள்ளிக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு ஏழினால் ஆடு பதினலும்,
பெருந்தரம் ராஜராஜ வாணகோவரையன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு எண்பத்திரண்டும்,
ஆக ஆடு தொண்ணூற் றுறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவன் அடைகுடி இவன் மகன் சிறுகொள்ளி செந்தனும்,
உடன்பிறந்த காடன் செந்தனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்சூதிநாட்டுக் குறுக்கை இருக்கும் இடையன் காரானை நாராயணனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு ஆறினுல் ஆடு பன்னிரண்டும்,
பெருந்தரம் வாணகோவரையன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு முப்பதும்,
ஜனநாதத் தெரிந்த பரிவாரத்தார் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு பதினெட்டினுல் ஆடு ஐம்பத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற்ருறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் நாராயணன் கோளியும்,
உடன்பிறந்த காரானை சூற்றியும், காரானை நாகனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி சிவதாஸன் சோலையான ராஜராஜ பிரும்ம மஹாராஜந் படை வீட்டு இருக்கும் இடையன் காரி மாணிக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு ஐம்பத்திரண்டும்,
பெருந்தரம் உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனை வில்லவன் மூவேந்தவேளான், தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு நாற்பத்து நாலும்,
ஆக ஆடு தொண்ணூற்ருறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,

இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் தமப்பன் செந்தன் காரியும்,
தஞ்சாவூர்ப் புறம்படி ஆனைக்கடுவார் தெருவில் இருக்கும் இடையன் பாப்பான் களரியும்,
தஞ்சாவூர்ப் புறம்படி சிவதாஸன் சோலையான ராஜராஜ பிரும்ம மஹாராஜந் படை வீட்டு இருக்கும் இடையன் பிடாரன் கூத்தனும்,
இப்படை வீட்டு இருக்கும் இடையன் தாங்கி குட்டேறனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டு மிறைக் கூற்றத்துத் தேவதானம் திருப்பழனத்து இருக்கும் இடையன் வடுகன் வேம்பனுக்கு,
செநாபதி குரவன் உலகளந்தானான ராஜராஜ மஹாராஜந் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு முப்பத்தாறும்,
பெருந்தரம் ராஜராஜ வாணகோவரையன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு இருபத்து நாலினால் பசுப் பன்னிரண்டும்,
ஆக பசு நாற்பத்தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் தன் பேரப்பன் மகன் வேங்கடவன் இராமனும்,
நன்மாமன் காடன் பட்டனும், காடன் மருதனும்,
நன்மச்சுனன் புறம்பி பனங்காடனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டுக் கோதண்டபுரத் திருக்கும் இடையன் பூசல் கூத்தனுக்கு,

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இலாடமாதேவியார் மாடாய் இவன் எழுந்தருளுவித்த பாசுபதமூர்த்திகளுக்குத் திருவிளக்குக்கு தந்த எருமையில் அடுத்த எருமை பதினஞ்சினுல் ஆடு தொண்ணூறும் நாகு கன்று ஒன்றினுல் ஆடு மூன்றும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் சுரபியில் அடுத்த பசு ஒன்றினுல் ஆடு இரண்டும் கன்று ஒன்றினுல் ஆடு ஒன்றும்,
ஆக ஆடு தொண்ணூற்றுறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் நன்மச்சுனன் காநன் பூசலும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு சுண்டை மூலநாட்டுக் கொற்றமங்கலத்து இருக்கும் இடையன் காரி மீளியும்,
ராஜராஜ வளநாட்டுக் கோதண்டபுரத் திருக்கும் இடையன் முடவன் சிற்றேமனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் கடுக்காரி சந்திரனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்திருக்கும் இடையன் துட்டன் காரிக்கு,
உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு இருபத்து நாலினுல் ஆடு நாற்பத்தெட்டும்;
பெருந்தரம் ராஜகேஸரி மூவேந்த வேளான் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு பதினுறினுல் ஆடு நாற்பத்தெட்டும்;
ஆக ஆடு தொண்ணூற்றுறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு, இவன் தானும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த துட்டன் வேம்பனும்; மச்சுனன் களரி கோழம்பனும்,
ராஜ ராஜ வளநாட்டு புன்றில் கூற்றத்து களமலை இருக்கும் இடையன் தமிழன் விளத்தனும்,
தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் நாட்டான் குருடனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டு அழகிய சோழபுரத்து இருக்கும் இடையன் மண்ணி குன்றனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு இருபத்தாறினால் ஆடு ஐம்பத்திரண்டும்,
ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டு மிறைக் கூற்றத்து பிரும்மதேயம் காமரவல்லிச் சதுர்வேதி மங்கலத்து நடுவிருக்கை செய்த கோட்டையூர் சுவரபட்டன் பூவத்தபட்டனார் தம்மை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு பதினலினால் ஆடு நாற்பத் திரண்டும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்து இட்ட அக்கம் ஐஞ்சினால் ஆடு இரண்டும்,
ஆக ஆடு தொண்ணூற் றுறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த மண்ணி அரங்கனும்,
நன்மச்சுனன் அரையன் கண்டனும்,
ராஜராஜ வளநாட்டு அழகிய சோழபுரத்து இருக்கும் இடையன் குருந்தன் பிச்சனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் கூநன் மண்ணியும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்கூதிநாட்டு குறுக்கை யிருக்கும் இடையன் முனையன் அரையனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு ஆறினுல் ஆடு பன்னிரண்டும்,
பெருந்தரம் ராஜராஜ வாணகோவரையன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு இருபத்தேழும்,
ஜநநாதத் தெரிந்த பரிவாரத்தார் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு பன்னிரண்டினுல் ஆடு முப்பத்தாறும்,
பெருந்தரம் வயிரி சங்கரன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு ஏழினுல் ஆடு இருபத்தொன்றும்,
ஆக ஆடு தொண்ணூற் றுறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி தன் சிற்றப்பன் சாத்தன் ஆச்சனும்,
தன் சிற்றப்பன் மகன் சந்திரன் களத்தூரும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுக் கீழ்கூதிநாட்டு குறுக்கை யிருக்கும் இடையன் தாழி கொமடியும்,
இவ்வூர் இருக்கும் இடையன் தாழி சாத்தனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு புன்றிற் கூற்றத்து மழையூர் இருக்கும் இடையன் தோளன் இனியானுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு ஆறினுல் ஆடு பன்னிரண்டும்,
பெருந்தரம் ராஜராஜ வாணகோவரையன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு எண்பத்து நாலும்,

ஆக ஆடு தொண்ணூற் றுநின்ல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் இனியான் வடுகனும்,
உடன்பிறந்த தோளன் முழங்கனும்,
தன் சிற்றப்பன் விடமன் காரியும்,
தன் சிற்றப்பன் மகன் தனியன் ஊரனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டிய குலாசநி வளநாட்டு மீசெங்கிளிநாட்டுக் களத்தூர் இருக்கும் இடையன் சாத்தன் அரங்கனுக்கு,
மிடுர் கிழான் பூதி சாத்தன் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு இருபத் தொன்றினல் ஆடு அறுபத்து மூன்றும்,
பெருந்தரம் வயிரி சங்கரன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு ஆறினல் ஆடு பதினெட்டும்,
நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துச் செம்பங்குடிச் செம்பங்குடையான் அமுதன் தேவன்னை ராஜவித்யாதர விழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு ஐஞ்சினல் ஆடு பதினைஞ்சும்,
ஆக ஆடு தொண்ணூற் றுநின்ல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி பாண்டியகுலாசநி வளநாட்டு மீய்செங்கிளிநாட்டு களத்தூர் இருக்கும் இடையன் மெற்குடையான் நம்பனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் சாத்தன் நிச்சனும்,

இவ்வூர் இருக்கும் இடையன் தணக்கன் சூற்றியும்,
இவ்வூர் இருக்கும் இடையன் கருங்குளவன் சீகிட்டனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து பூவணூ ராகிய அவநிகேஸரி சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் குருந்தன் சாத்தனுக்கு,
பெருந்தரம் நம்பன் கூத்தாடியான ஜயங்கொண்ட சோழ பிரும்ம மஹாராஜன் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த குருந்தன் காரியும்,
ராஜராஜ வளநாட்டுக் கீழ்வேங்கைநாட்டு மலையாண் படை வீட்டு இருக்கும் இடையன் பூவடி பிசங்கனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டு நாட்டார் நல்லூர் இருக்கும் இடையன் கண்டன் ஐயனுக்கு,
பெருந்தரம் வயலூர் கிழவன் திருமலை வெண்காடன் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தாறும்,
நம்பன் கூத்தாடியான ஜயங்கொண்ட சோழ பிரும்ம மஹாராஜந் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு இரண்டும்,
ஆக பசு நாற்பத் தெட்டினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் தன் சிற்றப்பன் ஐயாறன் இராயரியும்,
ராஜராஜ வளநாட்டு நாட்டார் நல்லூர் இருக்கும் இடையன் மாறன் பொன்னனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

ராஜராஜ வளநாட்டு சென்னிமங்கலக் கூற்றத்து ஓலேமங்க
லத்து இருக்கும் இடையன் அரையன் சாத்தனுக்கு,
பெருந்தரம் கரிகாலகர்ணப் பல்லவரையன் திருவிளக்குக்கு
தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டினுல்,
திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி நன்மச்சுனன் காரி சாத்தனும்,
தன் சிற்றப்பன் மகன் பட்டன் அரையனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டியகுலாசநி வளநாட்டு எரிய்நாட்டுக் கருவுகல்வல்
லத்திருக்கும் இடையன் கனியன் அறிஞ்சிக்கு,
பெருந்தரம் வயலூரர் கிழவன் திருமலே வெண்காடன் திருவி
ளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டினுல்
திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் அறிஞ்சி தீரனும், அறிஞ்சி
சாத்தனும், அறிஞ்சி பிரமனும், அறிஞ்சி குமரனும், அறிஞ்சி
குட்டத் தாழியும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு எரிய் நாட்டுக் கருவுகல்வல்
லத்திருக்கும் இடையன் தேவன் வீரனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டு பொய்கை நாட்டு கண்டரா
தித்யச் சதுர்வேதிமங்கலத்துப் பிடாகை குலமாணிக்கத்து
இருக்கும் இடையன் அறிஞ்சிகை மதிசூதனுக்கு,
பெருந்தரம் வயலூரர் கிழவன் திருமலே வெண்காடன் திருவி
ளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டினுல்

திருவிளக்குக் குடுத்தவை, (தொடர்ச்சி)

திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த அறிஞ்சி நாகனும்,
ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டு பொய்கை நாட்டு கண்டரா
தித்யச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் மயிலே
சடையனுக்கு,
பெருந்தரம் வயலூர் கிழவன் திருமலே வெண்காடன் திரு
விளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டினல்
திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் நன்மச்சுனன் மாராயன் மழபாடியும்
ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டு பொய்கைநாட்டு கண்டரா
தித்யச் சதுர்வேதிமங்கலத்துப் பிடாகை நக்கபிரான்குறிச்சி
இருக்கும் இடையன் முத்தழி திருமாலிருஞ்சோலேயும்,
பாண்டியகுலாசநி வளநாட்டு ஆற்காட்டுக்கூற்றத்து சந்திர
லேகை இருக்கும் இடையன் குப்பை ஐயாறனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டிய குலாசநி வளநாட்டுப் பெருங்கோளூர் இருக்கும்
இடையன் விடமன் காளாம்பூவுக்கு,
பெருந்தரம் வயலூர் கிழவன் வெண்காடன் திருவிளக்குக்கு
தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டினல்;
திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் மகன் காளாம்பூ விடமனும்,
பாண்டிய குலாசநி வளநாட்டுப் பெருங்கோளூர் இருக்கும்
இடையன் நக்கன் மாறனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் மூவரையன் சாத்தனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் தேவன் ஒற்றியும்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டுப் பொயிற் கூற்றத்து தென்குடி இருக்கும் இடையன் பிடாரன் விளந்தைக்கு,
பெருந்தரம் கரிகாலகர்ணப் பல்லவரையன் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டினல்,
திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி உடன்பிறந்த பிடாரன் சாத்தனும்,
ராஜராஜ வளநாட்டு மங்கலவாயில் இருக்கும் இடையன் கலியன் தூதுவனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் கலியன் ஆச்சனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

நித்தவிநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டுச் சிறுவெண்ணியில் இருக்கும் இடையன் வேம்பன் களரிக்கு,
பெருந்தரம் அருமொழிப் பல்லவரையன் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டினல்,
திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த வேம்பன் வாரூரும்,
நித்தவிநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டுச் சிறுவெண்ணியில் இருக்கும் இடையன் கேசுவன் வெண்ணியும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

அருமொழி தேவவளநாட்டு நென்மேலிநாட்டு நெடுமணலாகிய மதனமஞ்சரி சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் பாகூர் வாஸுதேவனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் சுரபியில் அடுத்த பசு இருபத்தைஞ்சும்,

திருவிளக்குக்குக் குடுத்தலைவ் (தொடர்ச்சி)

பெருந்தரம் நித்தவிநோதவள நாட்டு மஹாராராஜந் திரு விளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு இருபத்து மூன்றும், ஆக பசு நாற்பத் தெட்டினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி அருமொழிதேவ வளநாட்டு நென்மேலி நாட்டு மதனமஞ்சரிச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் ஒக்கூர் மருதனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் வெண்காடன் விழுப்பரையனும்
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டிய குலாசனி வளநாட்டு நாட்டுக் கீழ்கூதிநாட்டு நாவலூர் இருக்கும் இடையன் நாகன் சடையனுக்கு,
உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு எழுபத் தெட்டும்,
பெருந்தரம் நித்தவிநோத மஹாராராஜந் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு ஒன்பதினால் ஆடு பதினெட்டும்,
ஆக ஆடு தொண்ணூற்றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி பாண்டியகுலாசனி வளநாட்டுக் கீழ்கூதி நாட்டு நாவலூர் இருக்கும் இடையன் காளி சூற்றியும்,
இவ்வூர் இருக்கும் இடையன் மாறனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டுப் புலிவலக்கூற்றத்துக் கலையன்பாடி இருக்கும் இடையன் சிற்றமன் புகழனுக்கு (ப்),
பெருந்தரம் ராஜராஜ வாணகோவரையன் திருவிளக்குக்கு தந்த ஆட்டில் அடுத்த ஆடு தொண்ணூற் றாறினால்,
திருவிளக்குக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,

இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த சிற்றமன் குருந்த
ணும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டிய குலாசநி வளநாட்டு எரிய் நாட்டு விண்ணனெரி
யான மும்மடிசோழ நல்லூர் இருக்கும் இடையன் வடுகன்
குப்பைக்கு (ப்),
பெருந்தரம் ராஜராஜ வாணகோவரையன் திருவிளக்குக்கு
தந்த ஆட்டில் அடுத்த ஆடு அறுபதும்,
தஞ்சாவூர்ப் புறம்படி ராஜவித்யாதரப் பெருந்தெருவில்
இருக்கும் சோனகன் சாவூர் பரஞ்சோதி திருவிளக்குக்கு
தந்த காசில் குடுத்த காசு பன்னிரண்டினால் ஆடு முப்பத்
தாறும்;
ஆக ஆடு தொன்னூற் றாறினால் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி பாண்டிய குலாசநி வளநாட்டு எரிய்
நாட்டு விண்ணனெரியான மும்மடிசோழ நல்லூர் இருக்
கும் இடையன் காளி அரையனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் செந்தன் காடனும்,
பாண்டிய குலாசநி வளநாட்டு வடசிறுவாய்நாட்டு வாளுவ
மங்கலத்து இருக்கும் இடையன் காளி முள்ளியும்,
இவ்வூர் இருக்கும் இடையன் முள்ளூர் வேம்பனும்,
ஆடவல்லானால் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டுப் பன்றியூர் நாட்டுப் பெருமுள்ளூர்
இருக்கும் இடையன் மாறன் காடனுக்கு,
தஞ்சாவூர்ப் புறம்படி ராஜவித்யாதரப் பெருந் தெருவில்
இருக்கும் சோனகன் சாவூர் பரஞ்சோதி திருவிளக்குக்கு
தந்த காசில் குடுத்த காசு பதினேஞ்சினால் ஆடு நாற்பத்

தைஞ்சும்,
பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூர்யனை தென்னவன் மூவேந்த வேளான் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு பதினறினல் ஆடு நாற்பத் தெட்டும்,
உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத் திட்ட காசு ஒன்றினல் ஆடு மூன்றும்,
ஆக ஆடு தொண்ணூற் ருறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் நன்மாமன் காடன் கண்டனும்,
தன் சிற்றப்பன் கொமடி கவியனும்,
தமப்பன் கொமட மாறனும்,
பாண்டிய குலாசநி வள நாட்டுக் கீழ்சூதிநாட்டு நாவலூர் இருக்கும் இடையன் நீலன் எழுவனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வள நாட்டு சென்னி மங்கலக் கூற்றத்துக் கண்ணி குடி இருக்கும் இடையன் சிங்கன் கோழம்பனுக்கு (ப்),
பெருந்தரம் கோன் சூற்றியான அருமொழிப் பல்லவரையன் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டி னல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த சிங்கன் பொன்ன னும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வள நாட்டுச் சென்னிமங்கலக் கூற்றத்துக் கண்ணிகுடி இருக்கும் இடையன் சிறியான் பன்றிக்கு (ப்),
பெருந்தரம் கோன் சூற்றியான அருமொழிப் பல்லவரை யன் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத்

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் நன்மருமகன் பாண்டன் சிவனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டுச் சென்னிமங்கலக் கூற்றத்துக் கண்ணிகுடி இருக்கும் இடையன் கல்ல நக்கனுக்கு (ப்),
பெருந்தரம் கோன் சூற்றியான அருமொழிப் பல்லவரையன் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு நாற்பத் தெட்டினுல்,
திருவிளக்கு ஒன்றினுக்கு,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டிய குலாசநி வளநாட்டு மீய்செங்கிளி நாட்டு மங்கலத்து இருக்கும் இடையன் குருடன் பெரியானுக்கு (ப்),
பெருந்தரம் வயிரி அருமொழியான் கரிகால கர்ணப் பல்லவரையன் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசு முப்பத்தாறும்,
பெருந்தரம் கோன் சூற்றியான அருமொழிப் பல்லவரையன் திருவிளக்குக்கு தந்த பசுவில் அடுத்த பசுப் பன்னிரண்டும்.
ஆகப் பசு நாற்பத் தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

பாண்டிய குலாசநி வளநாட்டுக் கிளியூர்நாட்டு மாறனேரி இருக்கும் இடையன் ஆயிரவன் உகந்தானுக்கு,
நம்பிராட்டியார் ஒலோக மஹாதேவியார் எழுந்தருளுவித்த பிச்சதேவர்க்கு பலவகைப் பழம்படைகளிலார் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு முப்பத்திரண்டினுல் ஆடு தொண்ணூற்ருறினுல்,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவனுடன் பிறந்த ஆயிரவன் நாச்சனும்,
தமையன் மகன் கண்டனுளனும்,
பாண்டியகுலாசநி வளநாட்டுக் கிளியூர்நாட்டு மாறனேரி இருக்கும் இடையன் பழி . . . . . . . . ,
ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுப் பொய்கைநாட்டு கண்டராதித்யச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் காமன் ஐயாறனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

ராஜராஜ வளநாட்டு வரகூர்நாட்டுப் பூவாழ் இருக்கும் இடையன் நந்தி தூறனுக்கு,
உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் சுரபியில் அடுத்த பசு நாற்பத்தெட்டினுல்,
திருவிளக்கு ஒன்றினுக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி அருமொழிதேவ வளநாட்டுப் புறங்கரம்பைநாட்டுப் பாசிப்புரத்திருக்கும் இடையன் சடையன் நிச்சனும்,
இவ்வூர் இருக்கும் இடையன் தூருடி சாத்தனும்,
ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

அருமொழிதேவ வளநாட்டு மங்கலநாட்டு மங்கலத்திருக்கும் இடையன் நள்ளாறன் வில்லானைக்குக் குருக்களாக எழுந்தருளுவித்த பிரதிமத்துக்குக் குருக்கள் ஈசானசிவ பண்டிதர் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு முப்பத்திரண்டினுல் ஆடு தொண்ணூற்றுறினுல்,
திருவிளக்கு ஒன்றினுக்கு,

திருவிளக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

இவன் தானும்,
இவன் அடைகுடி அருமொழிதேவ வளநாட்டு மங்கலநாட்டு மங்கலத்திருக்கும் இடையன் . . . . . . . . . . . . நாரணனும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு ;

ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுப் பொய்கைநாட்டு கண்டராதித்யச்சதுர்வேதி மங்கலத்து இருக்கும் இடையன் கூத்தன் குன்றனுக்கு,
நம்பிராட்டியார் ஒலோக மஹாதேவியார் எழுந்தருளுவித்த பிச்ச. . . . . . . . . . . . . . . . ,
. . . . . . . . . களிலார் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு முப்பத்திரண்டினல் ஆடு தொண்ணூற் ருறினல் திரு விளக்கு ஒன்றிக்கு,
இவன் தானும்,
இவன் அடைகுடி இவன் உடன்பிறந்த கூத்தன் சூற்றியும்,
கூத்தன் கலிசூரனும்,
கூத்தன் பாம்பனும்,
ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுப் பொய்கைநாட்டு கண்டராதித்யச் சதுர்வேதிமங்கலத்து இருக்கும் இடையன் . . . . . . . . . . . . . . . . . . . . . யும்,
ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு;

---

இக்கல்வெட்டு கோயிலின் வடக்கு சுற்றுச் சுவரின் வெளிப்பக்கத்தில் உள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 64, 95 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த சண்டேச்வர பிரசாத தேவர்

ஸ்வஸ்தி ஸ்ரீ :

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது வரை எழுந்தருளிவித்த செப்புத் திருமேனிகள் :

உடையார் கோயிலில் முழத்தால் அளந்து கல்லில் வெட்டின :

பாதாதிகேசாந்தம் இருபதிற்று விரலே நாலு தோரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த சண்டேச்வரபிரசாத தேவர் திருமேனி ஒருவர்;

ரத்ந நியாசஞ் செய்து இவர் எழுந்தருளி நின்ற ஒரு விரலே இரண்டு தோரை உசரத்து ஸ்ரீ பாதத்தோடுங் கூடச் செய்த பத்மம் ஒன்று;

செவிக்கு மேல் கேசாந்தத்தளவுஞ் செல்ல மூவிரல் உசரத்து இரண்டு கைய் உடையராகக் கனமாகச் செய்த முசலகன் ஒன்று;

பாதாதிகேசாந்தம் பதின் ஐய்விரலே மூன்று தோரை உசரத்துக் கனமாகச் செய்த இவர் நம்பிராட்டியார் உமாபரமேச்வரியார் திருமேனி ஒருவர்;

ரத்ந நியாசஞ் செய்து இவர் எழுந்தருளி நின்ற ஒரு

சண்டேச்வர பிரசாத தேவர் (தொடர்ச்சி)

விரலே ஒரு தோரை உசரத்து பத்மம் ஒன்று;

தேவரும் நம்பிராட்டியாரும் எழுந்தருளி நின்ற ஒரு முழமே இரு விரல் நீளத்துப் பதின் அறு விரல் அகலத்து அறு விரல் உசரத்து பீடம் ஒன்று;

ஸ்ரீ பாத பீடத்துக்கு மேல் சிரோவர்த்தனையளவுஞ் செல்ல ஒரு விரலே இரண்டு தோரை உசரத்து மூவிர லரைச் சுற்றிற் புறப்பட்ட ஒரு ஸ்ரீ ஹஸ்தம் உடை யராகக் கனமாகச் செய்த மஹாதேவர் ஒருவர்;

இவரோடுங் கூடச் செய்த இருவிரல் உசரத்துக் கன மாகச் செய்த பீடம் ஒன்று;

பாதாதிகேசாந்தம் ஐய்விரலே ஐஞ்சு தோரை உச ரத்து இரண்டு கைய்யுடையராகக் கனமாகச் செய்த சண்டேச்வரர் ஒருவர்;

பாதாதிகேசாந்தம் அறு விரலேய் எழு தோரை நீளத்து இரண்டு கைய்யுடையராய் விழுந்து கிடந்தாராகக் கன மாகச் செய்த இவர் பிதா ஒருவன்;

பாதாதிகேசாந்தம் ஒன்பதிற்று விரல் நீளத்து இரண்டு கைய்யுடையராக பிரஸாதம் பெறுகின்றாராகக் கனமாகச் செய்த சண்டேச்வரர் ஒருவர்;

இவனுக்கு பிரஸாதம் குடுத்த பதின் அறு விரலே நாலு தோரை நீளத்து அரை விரலகலத்து இரண்டு தோரைக் கனத்து புஷ்ப மாலை ஒன்று;

இவர்களைக் கவித்த இரு முழமேய் இருபத்து மூவிரற் சுற்றிற் கனமாகச் செய்து கவித்த பிரபை ஒன்று.

---

இக்கல்வெட்டு கோபுரத்தின் வலப்புறம் கிழக்குத் திருச்சுற்றில் ஒரு தூணில் உள்ளது. தென்னிந்திய கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் எண் 29 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த பஞ்சதேஹமூர்த்திகள்

ஸ்வஸ்தி ஸ்ரீ :

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் உடையார் ஸ்ரீ ராஜ ராஜீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத் தொன்பதாவது வரை எழுந்தருளுவித்த செப்புத் திரு மேனி :

உடையார் கோயிலில் முழத்தால் அளந்து கல்லில் வெட் டின :

பஞ்சதேஹமூர்த்திகளில் பாதாதிகேசாந்தம் இருபத் திரு விரலே நான்கு தோரை உசரத்துப் பத்து ஸ்ரீ ஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த திருமேனி ஒரு வர்;

இவரோடுங் கூட நாலு முகத்திலும் பாதாதிகேசாந்தம் பதினல் விரல் உசரத்து நந்நாலு ஸ்ரீ ஹஸ்தங்கள் உடையர்களாகக் கனமாக எழுந்தருளுவித்த திருமேனி நாலு;

இவர் எழுந்தருளி நின்ற மூவிரலேய் நான்கு தோரை உசரத்துப் பதின் ஐய் விரலேய் நான்கு தோரைச் சம சதுரத்து பத்ம பீடம் ஒன்று.

---

இக்கல்வெட்டு தென்புற திருச்சுற்றின் ஒரு தூணில் உள்ளது. தென்னிந்திய கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதி எண் 30 ஆக அச்சிடப் பட்டுள்ளது.

# ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த ஸுப்பிரமண்ய தேவர்

ஸ்வஸ்தி ஸ்ரீ :

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் உடையார் ஸ்ரீ ராஜ ராஜீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்ப தாவது வரை எழுந்தருளுவித்த செப்புத் திருமேனி :

உடையார் கோயிலில் முழத்தால் அளந்து கல்லில் வெட்டின :

பாதாதிகேசாந்தம் இருபதிற்று விரலேய் ஐஞ்சு தோரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த ஸுப்பிரமண்ய தேவர் திருமேனி ஒருவர்;

இவர் ரத்ந நியாஸஞ் செய்து எழுந்தருளி நின்ற மூவிரல் உசரத்து பத்மம் ஒன்று;

பதிற்று விரல் அகலத்துப் பதின் ஒரு விரல் நீளத்து ஐய்விரலேய் நான்கு தோரை உசரத்து பீடம் ஒன்று;

மும் முழமே ஐய்விரலே ஆறு தோரைச் சுற்றிற்கன மாகச் செய்த பிரபை ஒன்று;

---

இக்கல்வெட்டு வடபுறத் திருச்சுற்றில் ஒரு தூணுல் உள்ளது. தென்னிந்ய கல்வெட்டுகள் தொகுதி எண் 49 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த தக்ஷிணாமூர்த்திகள்

ஸ்வஸ்தி ஸ்ரீ :

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் உடையார் ஸ்ரீ ராஜ ராஜீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்ப தாவது வரை எழுந்தருளுவித்த செப்புத் திருமேனிகள் :

உடையார் கோயிலில் முழத்தால் அளந்து கல்லில் வெட் டின :

ஆஸநமாக எழுந்தருளி இருந்த பர்வதத்துக்கு மேல் கேசாந்தத் தளவுஞ் செல்லப் பதின் எண்விரல் உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளு வித்த தக்ஷிணாமூர்த்திகள் ஒருவர்;

இவரே எழுந்தருளி இருந்த பர்வதத்தில் அடியில் ஒரு முழுமேய் பதிற்று விரல் நீளத்து ஒரு முழமேய் நால் விரல் அகலத்துப் பன்னிரு விரல் உசரத்து பர்வதம் ஒன்று;

இதந் மேல் பன்னிருவிரல் உசரத்து ஒன்பதிற்று விரல் நீளத்து எண்விரல் அகலத்து பர்வதசிகரம் இரண்டு;

இந்த சிகரங்களோடுங் கூடச் செய்த பாதாதிகேசாந்தம் நால்விரல் உசரத்து இரண்டு கைய் உடையராகக் கன மாகச் செய்த கின்னரர் இருவர்;

பாதாதிகேசாந்தம் மூவிரலரை உசரத்து இரண்டு கைய்

உடையராகக் கனமாகச் செய்த கின்னரிகள் இருவர்;

தேவர் ஸ்ரீ பாதத்திந் கீழ்க் கிடந்த பாதாதிகேசாந்தம் பதிற்று விரல் நீளத்து இரண்டு கைய் உடையராகக் கனமாகச் செய்த முசலகன் ஒன்று;

இருந்த ஆஸநத்துக்கு மேல் கேசாந்தத் தளவுஞ் செல்ல பன்னிருவிரல் உசரத்து இரண்டு கைய் உடையராகக் கனமாகச் செய்த ரிஷிகள் இருவர்;

இருந்த ஆஸநத்துக்கு மேல் கேசாந்தத் தளவுஞ் செல்ல எண்விரல் உசரத்து இரண்டு கைய் உடையராகக் கனமாகச் செய்த ரிஷிகள் இருவர்;

புச்சாதிபணாந்தம் அறுவிரல் உசரத்துக் கனமாகச் செய்த பாம்பு ஒன்று;

இருந்த ஆஸநத்துக்கு மேல் கேசாந்தத் தளவுஞ் செல்ல மூவிரல் உசரத்து இரண்டு கைய் உடையர்களாகக் கனமாகச் செய்த கர்ணபிராவிருதர்கள் இருவர்;

பர்வதத்திற் கிடந்த புச்சாதி சிகாந்தம் ஐய்விரலரை நீளத்துக் கனமாகச் செய்த புலி ஒன்று;

பர்வதத்துக்கு மேல் அக்ரத்தளவுஞ் செல்ல ஒரு முழ மேய் எண் விரலரை நீளத்து அறு விரலேய் ஆறு தோரைச் சுற்றும் உடையதில் வேறாகச் செய்து தைத்த மஹாசாகை ஒன்பதும் இவற்றுள் அநுசாகை நாற்பத்திரண்டும் உடைத்தாகக் கனமாகச் செய்த ஆலவிருக்ஷம் ஒன்று;

மூவிரலே நாலு தோரை நீளத்து ஒரு விரலே இரண்டு தோரை அகலத்து நாலு தோரை கனத்து செய்து

திருவிளக்குக்குக் குடுத்தவை (தொடர்ச்சி)

தூக்கின பொக்கணம் ஒன்று;

அறுவிரலே ஆறு தோரை நீளத்து ஒருவிரலரைச் சுற்றிற் கனமாகச் செய்த கைய்யும் இதனோடுங் கூட ஐய்விரல் நீளத்து மூவிரற்ச் சுற்றிற் செய்த கைத்தழை ஒன்று;

---

இக்கல்வெட்டு வடபுறத் திருச்சுற்றில் ஒரு தூணில் உள்ளது. தென்னிந்திய கல்வெட்டுகள் எண் 50 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த மஹாவிஷ்ணுக்கள்

ஸ்வஸ்தி ஸ்ரீ :

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது வரை எழுந்தருளுவித்த செப்புத் திருமேனி :

உடையார் கோயிலில் முழத்தால் அளந்து கல்லில் வெட்டின :

பாதாதிகேசாந்தம் பத்தொன்பதிற்று விரலேய் ஆறு தோரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த மஹாவிஷ்ணுக்கள் திருமேனி ஒருவர்;

ரத்ந நியாசஞ் செய்து இவர் எழுந்தருளி நின்ற மூவிரல் உசரத்து பத்மம் ஒன்று;

இதனோடுங் கூடச் செய்த பன்னிரு விரற் சமசதுரத்து ஐய்விரலேய் இரண்டு தோரை உசரத்து பீடம் ஒன்று;

இருமுழமே இருபதிற்று விரலேய் ஆறு தோரைச் சுற்றிற் கனமாகச் செய்து இவரைக் கவித்த பிரபை ஒன்று;

---

இக்கல்வெட்டு வடபுறத் திருச்சுற்றில் ஒரு தூணில் உள்ளது. தென்னிந்திய கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதி எண் 52 ஆக அச்சிடப் பட்டுள்ளது.

# ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த திருஆபரணங்கள்

ஸ்வஸ்தி ஸ்ரீ :

மெய்க் கீர்த்தி :

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கைநாடுங் கங்கபாடியுந் தடிகைபாடியும் நுளம்பபாடி யுங் குடமலைநாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வள ருழிஎல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டேய் செழியரைத் தேசு கொள்,

மன்னன் :

கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்கு,

ஆண்டு :

யாண்டு இருபத் தொன்பதாவது,

திருஆபரணங்கள் :

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடைய பரமஸ்வாமிக்கு உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் சேரமானையும் பாண்டியர் களையும் எறிந்து கொண்ட பண்டாரங்களிலுந் தம் பண்டா ரங்களிலும் யாண்டு இருபத் தொன்பதாவது வரை குடுத்த ரத்நத்தில் திருவாபரணங்க . . . . . ண பொன்னோடுங் கட் டப்பட்ட . . . . . கோத்த ரத்நங்கள் . . . . தி . . . கு . . .

மும் பெசியும் சரடும் சட்டமுஞ் செப்பாணிகளு நீக்கியும் கட்டப்பட்ட ரத்நங்களில் அரக்கும் பிஞ்சும் உட்பட தக்ஷிணமேருவிடங்கந் என்னுங் கல்லால் நிறை எடுத்து கல்லில் வெட்டினபடி;

கண்ட நாண் ஒன்றிற் கட்டின மாணிக்கம் பதினைஞ்சும், மரகதம் பதினாறும், வயிரம் இருபத் தெட்டும், தைய்த்த முத்து ஒப்புமுத்துங் குறுமுத்தும் பயிட்டமும் ஆக முத்து நாற்பதும் உட்பட நிறை நூற்று எழுபதின் கழஞ்சேய் எழு மஞ்சாடிக்கு விலை காசு ஐஞ்ஞூறு;

கண்ட நாண் ஒன்றிற் கட்டின வயிரம் இருபத்து நாலும் மாணிக்கம் இருபத்து மூன்றும் மரகதம் ஆறும் உட்பட நிறை நூற்று . . . . பத்தொரு கழஞ்சேய் காலுக்கு விலை காசு முன்னூற்று அறுபது;

கண்ட நாண் ஒன்றிற் கட்டின வயிரம் அறுபத்து நாலும் மாணிக்கம் மூன்றும், மரகதம் நாலும், உட்பட் நிறை அறு பத்து நாற் கழஞ்சேய் ஆறு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருநூற்று இருபது;

கண்ட நாண் ஒன்றிற் கோத்த நீலங் கோமளம் ஒன்றும் உட்பட நிறை ஐம்பத் தொரு கழஞ்சேய் காலுக்கு விலை காசு . . . . ;

கண்ட நாண் நடுவு ரத்நப்பட்டிகை உடையதொன்றிற் கட்டின வயிரம் அறுபத்தாறும் மாணிக்கம் நாற்பத்து மூன்றும் மரகதம் முப்பத்து நாலும் . . . துடர் பன்னிரண்டும் உட்பட நிறை அறுபத்து நாற் கழஞ்சேய் காலே . . . க்கு விலை காசு இருநூற்றைம்பத்து இரண்டு;

கண்ட நாண் ஒன்றிற் கட்டின . . . . . . ;

திருஆபரணங்கள் (தொடர்ச்சி)

புல்லிகைக் கண்ட நாண் ஒன்றில் நாண் மூன்றிற் கட்டின வயிரம் எழுபத்தாறும் மாணிக்கம் இரு பத்து நாலும் மரகதம் பதினாலும் உட்பட நிறை நூற்று இருபதின் கழஞ்சுக்கு விலை காசு முன்னூற்று ஒன்று;

புல்லிகைக் கண்ட நாண் ஒன்றிற் கட்டின கண்டு ஒன்றும் மாணிக்கம் நாற்பதும், மரகதம் இர . . . . . . . . நீலம் . . . விலை காசு நூற்று ஒன்று;

புல்லிகைக் கண்ட நாண் ஒன்றிற் கட்டின வயிரம் ஐம் பத்து நாலும் மாணிக்கம் ஏழும் உட்பட நிறை எண்பத்து முக்கழஞ்சேய் அரைக்காலுக்கு விலை காசு இருநூற்று . . . . . தேய் கால்;

பாசமாலை ஒன்றிற் கட்டின (?) வயிரம் எழுபத்தைஞ்சும் மாணிக்கம் எழுபதும் பொத்தி நாற்பத் தொன்றும் கோத்த முத்து ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் ஆக முத்து எண்பத்து மூன்றும் உட்பட நிறை . . . . . . ஒன்பதின் . . . . . . . . . . விலை காசு நூற்று . . . . . . ;

. . . . . . . ஒன்றிற் கட்டின வயிரம் நாற்பத் தைஞ்சும் மாணிக்கம் . . . பத்தாறும் மரகதம் பத்தும் பொத்தி முப் பத் தொன்பதும் முத்து . . . . . உட்பட நிறை இருபத்து நாற் கழஞ்சேய் ஆறு மஞ்சாடிக்கு விலை காசு நூற்று இரண்டே கால்;

மாணிக்கத்தின் தாலி ஒன்றிற் கட்டின, வயிரம் எட்டும் மாணிக்கம் ஒன்றும் தைத்த மாணிக்கம் ஹள ஹளம் ஒன் றும் உட்பட நிறை இரு . . . . . . . . . காசு ஐம்பது;

ஸ்ரீ பாஹுவலயம் ஒன்றிற் தடவிக்கட்டின பளிங்கு இரண்டும் ஆகாவிசாதி ஒன்றும் ஸுகந்தி ஒன்றும் குப்பி

திருஆபரணங்கள் (தொடர்ச்சி)

மூன்றும் உட்பட நிறை . . . கழஞ்சேய் மஞ்சாடிக்கு விலை காசு ஐம்பத்து ஐஞ்சேய் கால்;

ஸ்ரீ பாஹுவலயம் ஒன்றிற் கட்டின மாணிக்கம் ஒன்றும் ஸுகந்தி ஒன்றும் குருவிந்தம் மூன்றும் குப்பி மூன்றும் உட்பட நிறை இருபத் தொன்பதின் கழஞ்சேய் எழு மஞ் சாடியுங் குன்றிக்கு விலை காசு . . . . . த்து நாலு;

பதக்கம் ஒன்றிற் கட்டின குருவிந்தம் ஒன்றும் உட்பட நிறை பதின் முக்கழஞ்சேய் முக்காலேய் மஞ்சாடிக்கு விலை காசு இருபத்தேழு;

ரத்ந வளையில் ஒன்றிற் கட்டின மாணிக்கம் நாற்பத்து ஐஞ்சு உட்பட நிறை ஒன்பதின் கழஞ்சேய் மஞ்சாடியும் எட்டு மாவுக்கு விலை காசு இருபதரையே ஒரு மா;

ரத்ந வளையில் ஒன்றிற் கட்டின மாணிக்கம் இருபதும் மரகதம் இருபதும் உட்பட நிறை நாற் கழஞ்சேய் எட்டு மஞ்சாடிக்கு விலை காசு . . . . . கால்;

ரத்ந வளையில் ஒன்றிற் கட்டின மாணிக்கம் பதினெட்டும் மரகதம் பதினெட்டும் உட்பட நிறை . . . . . . . கழஞ் சரையே . . . . ;

. . . . . . மாணிக்கம் எட்டும் உட்பட நிறை பதிஞற் கழஞ் சரையே நாலு மஞ்சாடிக்கு விலை காசு முப்பத்து இரண்டே முக்கால்;

ரத்ந வளையில் ஒன்றிற் கட்டின முத்து இருபதும் மாணிக் கம் இருபதும் பொத்தி நாற்பதும் உட்பட நிறை பதினறு கழஞ்சரையே இரண்டு மஞ்சாடிக்கு விலை காசு நாற்பத்து ஐஞ்சு;

திருஆபரணங்கள் (தொடர்ச்சி)

ரத்ந வளையி . . . . . . . . . . . . . . . . இரண்டு மஞ்சாடிக்கு விலை காசு முப்பது;

திருக்கைக் காறை ஒன்றிற் கட்டின வயிரம் பதி . . . . . மாணிக்கம் முப்பத்து நாலும் மரகதம் பதினெட்டும் உட்பட நிறை ஒன்பதின் கழஞ்சரையே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு முப்பதேய் கால்;

ரத்ந கடகம் ஒன்றிற் கட்டின வயிரம் முப்பத் தாறும் மாணிக்கம் இருபத் தைஞ்சும் மரகதம் பத்தும் உட்பட நிறை பதின்றற் கழஞ்சரையே மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு . . . . . ;

. . . . ஒன்றிற் . . . . . . மாணிக்கம் . . . . . முக்காலே மஞ்சாடிக்கு விலை காசு . . . . . . கால்;

பவழ கடகம் ஒன்றிற் கட்டின பவழம் பத்தும் உட்பட நிறை இருபதின் கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடியும் மூன்று மாவுக்கு விலை காசு முப்பத்து எட்டு;

பவழகடகம் ஒன்றிற் கட்டின பவழம் பத்தும் உட்பட நிறை இருபதின் கழஞ்சேய் முக்கால் மஞ்சாடியும் எட்டு மாவுக்கு விலை காசு நாற்பத் தொன்றரை;

திருப்பட்டிகை நாணும் அரசி மாணிக்கமும் படுகண்ணுங் கள்ளிப்பூவுங் கிங்கிணிபேரும் நாணும் மாங்காய் நாணுடையனவும் கிம்பிரி முகமும் உடையது ஒன்றிற் . . . நிம்பொளம் பதினே . . . . . பதினறும் . . . . மும் பொத்தி பத்தொன்பதும் உட்பட நிறை இருநூற்று நாற்பத்து முக்கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் மூன்று மாவுக்கு விலை காசு நானூற்று ஆறு;

இ . . . . ண்டலம் ஒன்றிற் கட்டின வயிரம் ஐஞ்சும்

திருஆபரணங்கள் (தொடர்ச்சி)

மாணிக்கம் . . . . . . உட்பட நிறை முக்காலே குன்றிக்கு விலை காசு இரண்டு;

முத்தின் உழுத்து ஒன்றிற் கட்டின வயிரம் மூன்றும் மாணிக்கம் மூன்றும் பொத்தி மூன்றும் தைச்ச முத்து நிம் பொளமும் வரையும் ஒன்றும் உட்பட நிறை முக்காலே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபது;

முத்தின் உழுத்து ஒன்றிற் கட்டின வயிர மூன்றும் மாணிக்க மூன்றும் பொத்தி மூன்றும் தைச்ச முத்து நிம் பொளமும் வரையும் ஒன்றும் உட்பட நிறை . . . ரை . . . மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபது;

மாணிக்கத்தின் உழுத்து ஒன்றிற் கட்டின வயிர மூன்றும் மாணிக்கம் மூன்றும் மரகதம் மூன்றும் தைச்ச மாணி . . .;

மாணிக்கத்தின் உழுத்து ஒன்றிற் கட்டின வயிர மூன்றும் மாணிக்க மூன்றும் மரகதம் மூன்றும் தைச்ச மாணிக்கம் சட்டமும் இலை சுனியும் ஒன்றும் உட்பட நிறை கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடிக்கு விலை காசு இருபத்தைஞ்சு;

வயிர உழுத்து ஒன்றிற் கட்டின வயிரம் ஐஞ்சும் மாணிக் கம் ஒ . . . . . . . . . . ம் மாணிக்கம் . . . . . . ரண்டும் உட் பட நிறை முக்காலே எழு மாவுக்கு விலை காசு . . . . ;

சோனகச் சிடுக்கின் கூடு காலே ஒன்றிற் கட்டின மாணிக் கம் ஒன்பதும் மரகதம் ஒன்பதும் உட்பட நிறை முக்காலே நாலு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு நாலு:

சோனகச் சிடுக்கின் கூடு ஒன்றிற் கட்டின மாணிக்கம் ஒன் பதும் மரகதம் ஒன்பதும் உட்பட நிறை கழஞ்சேய் ஒன் பது . . . . விலை காசு நான்கே ஒருமா;

திருஆபரணங்கள் (தொடர்ச்சி)

ரத்ந மோதிரம் ஒன்றிற் கட்டின . .
. . . . . . ஒன்றும் உட்பட நிறை இரு
நாலு . . . . . . . . . விலை காசு . . . .

ரத்ந மோதிரம் ஒன்றிற் கட்டின வயி
கம் ஒன்றும் உட்பட நிறை கழஞ்சே
விலை காசு . . . . . ;

ரத்ந மோதிரம் ஒன்றிற் கட்டின நீல
நிறை எழு மஞ்சாடியுங் குன்றிக்கு வி

ரத்ந மோதிரம் ஒன்றிற் கட்டின ரா
பட நிறை கழஞ்சேய் ஒள்பது மஞ்
இரண்டு;

ரத்ந மோதிரம் ஒன்றிற் கட்டின குரு
பட நிறை அரைக் கழஞ்சேய் நாலு ம
விலை காசு ஒன்று;

நவரத்ந மோதிரம் ஒன்றிற் கட்டின
ஒன்றும் முத்து ஒன்றும் புஷ்யராகம்
ஒன்றும் பவழம் ஒன்றும் மரகதம் ஒ
றும் மாணிக்கம் ' ஒன்றும் உட்பட
முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்
. . . ல்;

நவரத்ந மோதிரம் ஒன்றில் நவரத்நம்
நிறை இரு கழஞ்சேய் ஆறு மஞ்சாடிக்

நவரத்ந மோதிரம் ஒன்றில் நவரத்நம்
நிறை கழஞ்சேய் மூன்று மஞ்சாடியுங்
மூன்று;

திரு ஆபரணங்கள் (தொடர்ச்சி)

நவரத்ந மோதிரம் ஒன்றில் நவரத்நம் ஒன்பதும் உட்பட நிறை இரு கழஞ்சேய் எழு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு . . . . ;

. . . . ருச்சக . . . . ஒன்றிற் கட்டின மாணிக்கம் இரண்டும் . . . . . . . . மூன்றும் க . . . . . டு ஒன்றும் உட்பட நிறை அறுபத்தெழு கழஞ்சரையே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு;

. . . . . . . . பற்றும் பலகுழிவும் லசுநியும் உடையது குணவியது ஒன்று உட்பட நிறை நூற்றெண்பத்தொரு கழஞ்சுக்கு விலை காசு ஐஞ்ஞூறு;

பிருஷ்டக்கண்டிகை ஒன்றிற் கட்டின வயிரம் நாலும் குப்பி வயிரம் இருபத்தாறும் பளிக்கு வயிரம் நாலும் பொத்தி ஆறும் குருவிந்தம் ஒன்பதும் . . . . . . உட்பட நிறை ஐம்பத்தைங் கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு நூற்று மூன்று;

ஸ்ரீச்சந்தம் ஒன்றிற் கட்டின வயிரம் நாலும் மாணிக்க நாளமுங் கோமளமும் எட்டும் மரகதம் ஐஞ்சும் கோத்த முத்துந் தச்ச முத்தும் வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் அம்பமுதஞ் சக்கத்துங் குளிர்ந்த நீருஞ் சிவந்த நீரும் தோல்தேந்தனவும் தோலிடந்தனவும் ஆக முத்து . . . . . து ஒன்று உட்பட நிறை முப்பத்தெண் கழஞ்சே எழு மஞ்சாடியும் ஒன்பது மாவுக்கு விலை காசு நாற்பது;

வலத்திருவடி நிலை ஒன்றில் தடவிக்கட்டின பளிங்கு பத்தும் பளிக்கு வயிரம் முப்பத்தெட்டும் உட்பட நிறை இருபத்தெண் கழஞ்சே காலுக்கு விலை காசு ஐம்பத்தேழு;

திருஆபரணங்கள் (தொடர்ச்சி)

இடத்திருவடிநிலை ஒன்றில் தடவிக்கட்டின பளிங்கு பத்தும் பளிக்குவயிரம் முப்பத் தெட்டும் உட்பட நிறை இருபத் தெண் கழஞ்சே காலுக்கு விலை காசு ஐம்பத் தேழு;

வலத்திருவடிநிலை மரத்தின் மேல் பொன் போர்த்தது ஒன் றிற் கட்டின மாணிக்கம் ஹளஹளமுங் கோமளமுங் குணவியன தொண்ணூற் றேழும் வயிரம் ஐம்பதும் மரமும் பந்தமும் உட்பட நிறை நூற்றெருபதின் கழஞ்சுக்கு விலை காசு இரு நூறு;

இடத்திருவடிநிலை மரத்தின் மேல் பொன் போர்த்தது ஒன் றிற் கட்டின மாணிக்கம் ஹளஹளமுங் கோமளமுங் குணவியன தொண்ணூற் றெட்டும் வயிரம் ஐம்பத் தொன் றும் மரமும் பந்தமும் உட்பட நிறை நூற்றெருபத்து முக் கழஞ்சுக்கு விலை காசு இருநூறு;

வலத்திருவடிநிலை மரத்தின் மேல் மேற்பாகம் பொன் போர்த்தது ஒன்றிற்கட்டின மாணிக்கங் கோமளமுங் ஹள ஹளமுங் குணவியன நாலும் பொத்தி இருபத்தைந்தும் தட விக்கட்டின பளிங்கு நூற்றெண்பதும் பளிக்கு வயிரம் முன் னூற் றெருபத்து நாலும் மரமும் பந்தமும் உட்பட நிறை . . . . . . . . க்காலுக்கு விலை காசு அறுபத்தைஞ்சு;

இடத்திருவடிநிலை மரத்தின் மேல் மேற்பாகம் பொன் போர்த்தது ஒன்றிற் கட்டின மாணிக்கங் கோமளமும் ஹள ஹளமுங் . . . . . . முந்நூற்றிருபத் தொன்றும் மரமும் பந் தமும் உட்பட நிறை நூற்று நாற்பதின் கழஞ்சே காலுக்கு விலை காசு அறுபத்தைஞ்சு;

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் சேரமானையும் பாண்டியர் களையும் எறிந்து கொண்ட பண்டாரங்களில் குடுத்த தொ . . . . . . . . . . . . . . டு மஞ்சாடியும் ஆறு மாவும் தடவிக்

கட்டின பளிங்கு நாற்பத் தொன்றும் நிறை . . . . . . . மஞ் சாடியும் பளிக்குவயிரம் எழுபத் தேழினல் நிறை மஞ்சாடி யுங் குன்றியும் பொத்தி பதினெட்டினல் நிறை எட்டு மஞ்சா டியும் நான்கு மாவும் வெ . . . . . . நிறை இரு கழஞ்சே ஒன் பது மஞ்சாடியும் ஆக நிறை . . . . . . இரண்டு மஞ்சாடியுங் குன்றி தக்ஷிணமேருவிடங்களுல் நிறை எ . . . . . ;

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீ பாதபுஷ்பமாக அட் டித் திருவடித்தொழுத முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் ஆக முத்து அறு பத்து நாலினல் நிறை . . . . . . மஞ்சாடியும் ஆக நிறை தொண்ணூற்றெரு கழஞ்சரையே மஞ்சாடிக்கு விலை காசு இருநூறு.

---

இக்கல்வெட்டு தென்புறச் சுவரில் உள்ளது. தென்னிந்தியக் கல் வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 93 ஆக அச்சிடப் பட்டுள்ளது.

# ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த திருப்பரிகலங்கள்

ஸ்வஸ்தி ஸ்ரீ :

ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடைய பரமஸ்வாமிக்கு,

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் தம் பண்டாரங்களில் குடுத்த வெள்ளியின் திருப்பரிகலங்களுள்ளிட்டனவும்,

சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்து கொண்ட வெள்ளியின் திருப்பரிகலங்களுள்ளிட்டனவும்,

இவர்களையே எறிந்து கொண்ட வெள்ளி கொண்டு செய்த திருப்பரிகலங்களுள்ளிட்டனவும்,

சிவபாதசேகரனென்றும் ஸ்ரீ ராஜராஜனென்றும் திருநாமம் உடையன,

யாண்டு இருபத்தொன்பதாவது வரை குடுத்த வெள்ளியின் திருப்பரிகலங்களுள்ளிட்டன,

ஆடவல்லானென்னும் கல்லால் நிறை எடுத்து கல்லில் வெட்டின :

சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்து கொண்ட பண்டாரங்களில் குடுத்தன :

காளம் ஒன்று வெள்ளி முன்னூற்று எழு . . . . . ஒ . . ; காள . . . . . . . . . . . . . . . . . . . .;

காளம் ஒன்று வெள்ளி முன்னூற்று ஒரு கழஞ்சரை;

திருப்பரிகலங்கள் (தொடர்ச்சி)

காளம் ஒன்று வெள்ளி முன்னூற்று ஒரு கழஞ்சேய் . . .;

காளம் ஒன்று வெள்ளி இருநூற்றுத் தொண்ணூற்று எழு கழஞ்சரை;

காளம் ஒன்று வெள்ளி இருநூற்றுத் தொண்ணூற்று இரு கழஞ்சரை;

காளம் ஒன்று வெள்ளி இருநூற்று எண்பத் தொரு கழஞ் சேய் முக்கால்;

காளம் ஒன்று வெள்ளி இருநூற்று எழுபத்து ஒன்பதின் கழஞ்சேய் முக்கால்;

காளம் ஒன்று வெள்ளி இரு நூற்று இருபத் தைய்ங் கழஞ்சு;

காளம் ஒன்று வெள்ளி இருநூற்று எண் கழஞ்சேய் ஒன் பது மஞ்சாடியுங் குன்றி;

தளிகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து எழுபத்து முக் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து எண்பத் திரு கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து எண்பத் தொரு கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து எண்பதின் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து எழுபத்து எண் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து எழுபத்து எழு

திருப்பரிகலங்கள் (தொடர்ச்சி)

கழஞ்சரை;

தளிகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து எழுபத்து முக்கழஞ்சரை;

தளிகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து எழுபத் தொரு கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து எழுபதின் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து அறுபத்து நாற் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி . . . . . ;

தளிகை ஒன்று வெள்ளி ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்று ஒரு கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி ஐஞ்ஞூற் றெண்பதின் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி நானூற்று அறுபத்தொரு கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி நானூற்று முப்பத் தொரு கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி முன்னூற்று எண்பத் தொரு கழஞ்சரை;

தளிகை ஒன்று வெள்ளி முன்னூற்று ஒருபத்து எழு கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி இருநூற்று எண்பத்து எழு கழஞ்சு;

திருப்பரிகலங்கள் (தொடர்ச்சி)

தளிகை ஒன்று வெள்ளி இருநூற்று எண்பத்து நாற் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி இருநூற்று எழுபதின் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி இருநூற்று அறுபத் திரு கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி இருநூற்று ஒருபத் திரு கழஞ் சரை;

தளிகை ஒன்று வெள்ளி நூற்றுத் தொண்ணூற்றிரு கழஞ்சாக இரண்டினல் வெள்ளி முன்னூற்று எண்பத்து நாற் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி நூற்று எண்பத்து ஒன்பதின் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி நூற்று எண்பத்தைய்ங் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி நூற்று எழுபத்து எண் கழஞ்சு;

தளிகை ஒன்று வெள்ளி நூற்று அறுபத்து அறு கழஞ் சரை;

தளிகை ஒன்று வெள்ளி . . . . . கழஞ்சு;
தளிகை ஒன்று . . . . . . . . . . . ;

மண்டை ஒன்று வெள்ளி முன்னூற்றுத் தொண்ணூற்று ஒரு கழஞ்சு;

மண்டை ஒன்று வெள்ளி முன்னூற்று . . . . பத்து முக் கழஞ்சு;

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று நாற்பதின்

திருப்பரிகலங்கள் (தொடர்ச்சி)

கழஞ்சு;

மண்டை ஒன்று வெள்ளி இருபத்தெழு கழஞ்சு;

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று இருபத்தறு கழஞ்சு;

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று இரு பத்தைய்ங் கழஞ்சாக நாலிஞல் தொள்ளாயிரக் கழஞ்சு;

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று இருபத்து நாற் கழஞ்சாக இரண்டிநால் வெள்ளி நானூற்று நாற்பத் தெண் கழஞ்சு;

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று முப்பது முக் கழஞ்சாக இரண்டிநால் வெள்ளி நானூற்று அறுபத்து அறு கழஞ்சு.

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று இரு பத்தொரு கழஞ்சு;

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று இருபதின் கழஞ்சு;

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று ஒரு பத்தொன்ப தின் கழஞ்சாக இரண்டிநால் வெள்ளி நானூற்று முப் பத் தெண் கழஞ்சு:

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று ஒருபத்து எண் கழஞ்சு;

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று ஒரு பத்தெழு கழஞ்சு:

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று ஒருபத்து ஐங்

திருப்பரிகலங்கள் (தொடர்ச்சி)

கழஞ்சு:

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்று ஒருபத்து . . . . . . . . . . . . ;

. . . . . . . . . . . . இரு நூற்று ஒருபத்து . . . . . . . . . ;

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . எண் ப . . . . . . . . . சு ;

மண்டை ஒன்று வெள்ளி நூற்றெழுபத்து எழு கழஞ்சரை;

மண்டை ஒன்று வெள்ளி நூற்று அறுபத்து ஐய்ங் கழஞ்சு;

குடம் ஒன்று வெள்ளி எழு நூற்று ஐங் கழஞ்சு;

குடம் ஒன்று வெள்ளி அறு நூற்றுத் தொண்ணூற்று இரு கழஞ்சு;

குடம் ஒன்று வெள்ளி அறு நூற்று இருபதின் கழஞ்சு:

குடம் ஒன்று வெள்ளி ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்று ஐங் கழஞ்சு;

குடம் ஒன்று வெள்ளி ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்றுக் கழஞ்சு;

கலசப்பானை ஒன்று வெள்ளி . . . . . . . . . த்து இருபதின் கழஞ்சு;

கலசப்பானை ஒன்று வெள்ளி தொளாயிரத்து . . . . . . . . தெண் கழஞ்சு;

கலசப்பானை ஒன்று வெள்ளி எழு நூற்று ஒருபதின்

திருப்பரிகலங்கள் (தொடர்ச்சி)

கழஞ்சு;

கலசப்பானை ஒன்று இதநில் சுருக்கின பொன் நாற் கழஞ்சேய் குன்றி உட்பட வெள்ளி ஐஞ்ஞூற்று ஐம்பத்தெண் கழஞ்சு;

கலசப்பானை ஒன்று வெள்ளி ஐஞ்ஞூற்று முப்பத்தெழு கழஞ்சு;

கலசப்பானை ஒன்று வெள்ளி . . . . . . . . நாற் கழஞ்சு;

கலசப்பானை ஒன்று வெள்ளி . . . . . . று எழுபத்தொரு கழஞ்சு;

கலசப்பானை ஒன்று வெள்ளி . . . . . அறுபதின் கழஞ்சு;

கலசப்பானை ஒன்று . . . . . . . நூற்று நாற்பத்தறு கழஞ்சு;

கலசப்பானை ஒன்று வெள்ளி முன்னூற்று எழுபத்தொன்பதின் கழஞ்சு;

கலசப்பானை ஒன்று வெள்ளி நூற்று நாற்பத்து . . . கழஞ்சு;

மூக்கு வட்டகை ஒன்று வெள்ளி நானூற்று ஒருபத்தொரு கழஞ்சு;

மூக்கு வட்டகை ஒன்று வெள்ளி நானூற்று எ . . . சு ;

மூக்கு வட்டகை ஒன்று வெள்ளி நூற்று முப்பத்தொன்பதின் கழஞ்சாக இரண்டிநால் வெள்ளி இருநூற்று எழுபத்தெண் கழஞ்சு;

மூக்கு வட்டகை ஒன்று வெள்ளி நூற்று ஒருபதின்

திருப்பரிகலங்கள் (தொடர்ச்சி)

கழஞ்சு;

முக்கு வட்டகை ஒன்று வெள்ளி நூற்றெழுபத்தைய்ங் கழஞ்சரை;

கைய் வட்டகை ஒன்று வெள்ளி ஐஞ்ஞூற்று அறுபத்தெழு கழஞ்சரை;

வட்டில் ஒன்று வெள்ளி ஐம்பத்தறு கழஞ்சரை;

வட்டில் ஒன்று வெள்ளி ஐம்பத் திரு கழஞ்சேய் கால்;

வட்டில் ஒன்று வெள்ளி ஐம்பத்தொரு கழஞ்சு;

வட்டில் ஒன்று வெள்ளி ஐம்பதின் கழஞ்சரை:

வட்டில் ஒன்று வெள்ளி நாற்பத்தைய்ங் கழஞ்சரை;

வட்டில் ஒன்று வெள்ளி . . . . . . கழஞ்சு;

வட்டில் ஒன்று வெள்ளி நாற்பத்து முக் கழஞ்சு;

வட்டில் ஒன்று வெள்ளி நாற்பத் தொரு கழஞ்சரை;

வட்டில் ஒன்று வெள்ளி நாற்பதின் கழஞ்சரை;

வட்டில் ஒன்று வெள்ளி முப்பத்தெண் கழஞ்சாக இரண்டிநால் வெள்ளி எழுபத்தறு கழஞ்சு;

வட்டில் ஒன்று வெள்ளி . . . . . . . ;

. . . . . . . . . . . . . . . . . . . . . கழஞ்சு;

வட்டில் ஒன்று வெள்ளி இருபத்து ஒன்பதின் கழஞ்சு;

வட்டில் ஒன்று வெள்ளி . . . . . . கழஞ்சரை;

வட்டில் ஒன்று வெள்ளி இருபத்தறு கழஞ்சு;

திருப்பரிகலங்கள் (தொடர்ச்சி)

வட்டில் ஒன்று வெள்ளி இருபத்தைங் கழஞ்சாக மூன்றி நால் வெள்ளி எழுபத்தைங் கழஞ்சு;

வட்டில் ஒன்று வெள்ளி இருபத்து நாற் கழஞ்சேய் மு ......

வட்டில் ஒன்று வெள்ளி இருபதின் கழஞ்சேய் முக்கா லாக இரண்டிநால் வெள்ளி நாற்பத்தொரு கழஞ்சரை;

வட்டில் ஒன்று வெள்ளி இருபதின் கழஞ்சரை;

வட்டில் ஒன்று வெள்ளி பதினெ .........;

வட்டில் ஒன்று வெள்ளி முப்பத்தெழு கழஞ்சு;

மடல் ஒன்று வெள்ளி இருபத் தொன்பதின் கழஞ்சு;
பிங்காளம் ஒன்று வெள்ளி நூற்று ஐம்பத்து ஒன்பதின் கழஞ்சு;

பிங்காளம் ஒன்று வெள்ளி நூற்று ஐம்பத்து ஐங் கழஞ்சு;

கச்சொளம் ஒன்று வெள்ளி இருபத்தெழு கழஞ்சரை;

படிக்கம் ஒன்று வெள்ளி எழுநூற்று ஒருபத்து முக் கழஞ்சு;

......... ஒன்று வெள்ளி ஐங் ....... கழஞ்சு;

படிக்கம் குண் ..... மூன்றும் வளையில் இரண்டு .... ஒன்று வெள்ளி முன்னூற்று .......;

..... செப்பு ஒன்று வெள்ளி முப்பத்திரு கழஞ்சரை;

..... ச் செப்பு ..... ற்று ... ம்பதின் கழஞ்சு;

.... ஒன்று வெள்ளி நூற்று எழுபத்து எண் கழஞ்சு;

திருப்பரிகலங்கள் (தொடர்ச்சி)

சட்டுவம் ஒன்று வெள்ளி நூற்று நாற்பத்து ஒரு கழஞ்சு;

சட்டுவம் ஒன்று வெள்ளி எழுபத்து முக் கழஞ்சரை;

நெய் முட்டை ஒன்று வெள்ளி எண்பத்து எழு கழஞ்சு;

நெய் முட்டை ஒன்று வெள்ளி முப்பத்து ஒன்பதின் கழஞ்சு;

நெய் முட்டை ஒன்று வெள்ளி இருபத்தறு கழஞ்சு;

குடம் ஒன்று வெள்ளி தொளாயிரத்து எழுபத்து ஒரு . . . . . . ;

குடம் ஒன்று வெள்ளி தொளாயிரத்து ஐம்பத் திரு கழஞ்சு;

குடம் ஒன்று வெள்ளி தொளாயிரத்து நாற்பத்து எழு கழஞ்சு;

குடம் ஒன்று வெள்ளி தொளாயிரத்து நாற்பத்து ஒன்பதின் கழஞ்சேய் முக்கால்;

கலசப்பானை ஒன்று வெள்ளி ஐ . . . கழஞ்சு;

கலசம் ஒன்று வெள்ளி ஐஞ்ஞூற்று நாற் கழஞ்சேய் கால்;

கலசம் ஒன்று வெள்ளி ஐஞ்ஞூற்று ஒரு கழஞ்சேய் கால்;

கலசம் ஒன்று வெள்ளி நானூற்று . . . . . . முக் கழஞ்சேய் கால்;

கலசம் ஒன்று வெள்ளி நானூற்று எண்பத்து முக் கழஞ்சு;

கலசம் ஒன்று வெள்ளி நானூ . . . . . . . . . . . . ;

திருப்பரிகலங்கள் (தொடர்ச்சி)

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்றுத் தொண்ணூற்று அறு கழஞ்சரை;

மண்டை ஒன்று வெள்ளி இரு நூற்றுத் தொண்ணூற்று ஒரு கழஞ்சேய் கால்;

கைய் வட்டகை ஒன்று வெள்ளி தொளாயிரத்து எழு பதின் கழஞ்சு;

நெடுமடல் ஒன்று வெள்ளி நூற்றுத் தொண்ணூற்று அறு கழஞ்சு;

நெடுமடல் ஒன்று வெள்ளி நூற்று எண்பத்தெண் கழஞ் சேய் கால்;

குறுமடல் ஒன்று வெள்ளி நூற்றுக் கழஞ்சரை;

தட்டம் ஒன்று வெள்ளி நாற்பத் தெண் கழஞ்சேய் முக் காலாக மூன்றிநால் வெள்ளி நூற்று நாற்பத்து அறு கழஞ்சேய் கால்;

தட்டம் ஒன்று வெள்ளி நாற்பத் தெண் கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியுங் குன்றியாக மூன்றிநால் வெள்ளி நூற்று நாற்பத்து ஐங் கழஞ்சேய் முக்காலே இரண்டு மஞ்சாடியுங் குன்றி;

தட்டம் ஒன்று வெள்ளி நாற்பத் தெண் கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியாக இரண்டிநால் வெள்ளி தொண் ணூற்று எழு கழஞ்சேய் நாலு மஞ்சாடி;

தட்டம் ஒன்று வெள்ளி நாற்பத்து எண் கழஞ்சரை;

தட்டம் ஒன்று வெள்ளி நாற்பத்து எழு கழஞ்சேய் கால்;

படிக்கம் ஒன்று, வெள்ளி ஆயிரத்து ஒரு நூற்றுத் தொண்ணூற்று ஒன்பதின் கழஞ்சு;

இலைத்தட்டு ஒன்று வெள்ளி ஆயிரத்து இரு நூற்று இருபத்து . . . . . ;

இலைத்தட்டு ஒன்று வெள்ளி ஆயிரத்து . . . . ஒருநூற்று எழுபத்தைய்ங் கழஞ்சு;

இத்தேவர் பிரபை ஒன்று வெள்ளி இரு நூற்று முப்பத்து இரு கழஞ்சு;

ஸ்ரீவாஸுதேவர் ஒருவர் வெள்ளி ஆயிரத்து நாற்பத்து முக் கழஞ்சு;

இத்தேவர் பிரபை ஒன்று வெள்ளி இருநூற்று ஒரு பத்து ஒரு கழஞ்சரை;

ஸ்ரீவாஸுதேவர் ஒருவர் வெள்ளி நூற்று முப்பதின் கழஞ்சு;

இத்தேவர் பிரபையிற் சுடர்களிற் சுருக்கின பொன் கழஞ்சரையே குன்றியுட்பட வெள்ளி பதினெழு கழஞ் சேய் கால்;

ஸ்ரீவாஸுதேவர் ஒருவர் வெள்ளி முன்னூற்று ஐம் பத்து நாற் கழஞ்சு;

---

இக்கல்வெட்டு விமானத்தின் வடபுறச் சுவரில் உள்ளது. தென் னிந்தியக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் கல்வெட்டு எண் 91 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த திருமெய்காப்பாளர்கள்

பொ .... ஸ்ரீராஜராஜந் திருவாசலுக்கு வடக்கு ஈசாந மூர்த்தி ஆலயத்தளவுஞ் செல்லக் கல்லில் வெட்டி அவ் விடத்தில் நிலம் போதாதாக, அதில் குறை போந்து இவ்விடத்தில் கல்லில் வெட்டித்து;

கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து ராஜாச் ரயச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக்கடவ திரு மெய்காப்பு இரண்டும்;

இந்நாட்டு அறிஞ்சிகைச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு வயலூரர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுக் கருப்பூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

கேரளாந்தக வளநாட்டு மீய்கோட்ட நாட்டு ...... தண்டலே சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

பாண்டிய குலாசநி வளநாட்டு விளாநாட்டு உத்தமசீலிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய் காப்பு ஒன்றும்;

இந்நாட்டு சோழ மகாதேவி சதுர்வேதிமங்கலத்து சபை யார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

ருமெய் காப்பாளர்கள் (தொடர்ச்சி)

பாண்டிய குலாசநி வளநாட்டு இடையாற்று நாட்டு இடையாற்று மங்கலத்து சபையார் இடக்கடவ திரு மெய்காப்பு ஒன்றும்;

நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டு நல்லூராகிய பஞ்சவன்மகாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

நித்தவிநோத வளநாட்டுக் கரம்பை நாட்டுக் குந்தவை நல்லூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்

நித்தவிநோத வளநாட்டுக் கிழாற்க் கூற்றத்துப் பெருமிலட்டூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து இரும்புதலாகிய மனுகுலசூளாமணிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டு ஆவூர்க் கூற்றத்து விளத்தூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

நித்தவிநோத வளநாட்டு முடிச்சோணாட்டு ஜநநாதச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுச் சிற்றினவாழாகிய பரமேச்வரச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

நித்தவிநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்துக்கீ . . . பூண்டியாகிய ஒலோகமகாதேவிச் சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுப் பூவனூராகிய அவனிகேசரிச் சதுர்வேதிமங்

திருமெய்காப்பாளர்கள் (தொடர்ச்சி)

கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

இந்நாட்டுப் பெருநங்கைமங்கலத்து சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

நித்தவிநோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்துச் சிற்றம்பர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்;

---

இக்கல்வெட்டு இரண்டாம் கோபுரத்தின் இடப்புறம் உள்ளது. தென்னிந்திய கல்வெட்டுகள் எண் 57 ஆக அச்சிடப்பட்டுள்ளது. இந்நூலில் எண் 9 ஆக (தென்னிந்திய கல்வெட்டுகள் எண் 70 ஆக) அச்சிடப்பட்டுள்ள கல்வெட்டு ராஜராஜதேவர் அளித்த திருமெய்காப்பாளர்களைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு அதன் தொடர்ச்சியாக இருக்கக்கூடும்.

# ஸ்ரீராஜராஜ தேவர் கணபதியாருக்கு வாழைப் பழம் அமுது செய்தருளக் குடுத்தது

ஸ்வஸ்தி ஸ்ரீ:

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஆலயத்துப் பிள்ளையார் கணபதியார்க்கு,

வாழைப் பழம் அமுது செய்தருள உடையார் பண்டாரத்து பொலிசையூட்டுக்கு வைத்தருளின காசும்,

இக்காசு பொலிசையூட்டுக்கு கொண்ட அங்காடிகளுங் கல்லில் வெட்டியது;

ஆலயத்துப் பிள்ளையார் கணபதியார்க்கு அமுது செய்தருள; நிசதம் வாழைப் பழம் நூற்றைம்பதாக;

ஓராட்டைக்கு வந்த வாழைப் பழம் ஐம்பத்து நாலாயிரத்துக்கு;

காசு ஒன்றுக்கு வாழைப் பழம் ஆயிரத்திரு நூறாக;

வந்த காசு நாற்பத்து ஐஞ்சுக்கு;

காசு ஒன்றுக்கு ஆட்டை வட்டம் அரைக்காற்காசு பொலிசையூட்டாக;

சந்திராதித்தவத் செல்ல வைத்த காசு முன்னூற்று அறுபது;

இக்காசில் தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர்ப் புறம்படி நித்தவிநோதப் பெருந்தெருவில் நகரத்தார்;

[library stamp]

பிள்ளையாருக்கு அமுது செய்ய வாழைப் பழத்திற்குக் கொடுத்த காசு (தொடர்ச்சி)

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத் தொன்பதாவது பசான் முதல் கொண்ட காசு அறுபதி ஞற் காசு ஒன்றுக்கு ஆட்டை வட்டம் அரைக்காற்காசு பொலிசையாகக் கடவ பொலிசைக் காசு ஏழரைக்கு;

சந்திராதித்தவத் உடையார் பண்டாரத்தே நிசதம் இடக்கடவ வாழைப் பழம் இருபத்தைஞ்சு;

தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர்ப் புறம்படி மும்முடி சோழப் பெருந்தெருவில் நகரத்தார்;

உடையார் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத் தொன்பதாவது பசான் முதல் கொண்ட காசு நூற் றிருபதிஞல் காசு ஒன்றுக்கு ஆட்டை வட்டம் அரைக் காற் காசு பொலிசையாகக் கடவ பொலிசைக் காசு பதிஞைஞ்சுக்கு சந்திராதித்தவத் உடையார் பண்டா ரத்தே நிசதம் இடக்கடவ வாழைப்பழம் ஐம்பது;

தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர்ப்புறம்படி வீரசிகா மணி பெருந்தெருவில் நகரத்தார்;

உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத் தொன்பதாவது பசான் முதல் கொண்ட காசு நூற்றிரு பதிஞற் காசு ஒன்றுக்கு ஆட்டை வட்டம் அரைக்காற் காசு பொலிசையூட்டாகக் கடவ;

பொலிசைக்காசு பதிஞைஞ்சுக்கு சந்திராதித்தவத் உடை யார் பண்டாரத்தே நிசதம் இடக்கடவ வாழைப் பழம் ஐம்பது.

தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர்ப்புறம்படி திரிபுவந